Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 40 விலை - 40 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :73 தை 26ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 09 பெப்ரவரி 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## வவுனியா மாணவிக்கு கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், பெப். 9

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வவுனியாவைச் சேர்ந்த மாணவி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த 6ஆம் திகதி சேர்க்கப்பட்டிருந்தபோதும், அவருக்கு கொரோனா தொற்று

37 >

### ஐக்கிய இலங்கைக்குள் தமிழருக்குச் சமத்துவம்

# இந்தியாவின் நிலைப்பாட்டை இலங்கை ஏற்றுக் கொள்ளும்

### மஹிந்த முன்னிலையில் மோடி தெரிவிப்பு

புதுடில்லி, பெப்ரவரி 9

இலங்கையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகை யில் அவர்களின் பிரச்சினைகள் திறந்த மனதுடன் பேசப்பட வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி– சமத்துவம்– சமாதானம் வழங்கப்பட வேண்டும். இதுவே இந்தியாவின் நிலைப்பாடு. அதை இலங்கை அரசு புரிந்து – ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகின்றோம். இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ முன்னிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

37 >



## முல்லைத்தீவில் குண்டு வெடிப்பு

### ஒருவர் காயம்: இருவர் கைது

முல்லைத்தீவு, பெப். 9

சிலாவத்தை மாதிரிக் கிராமத்தில் இரும்பு வியாபாரியின் வீட்டில் குண்டு வெடித்ததில் சூசைப்பிள்ளை புலேந்திரன் (வயது - 42) என்பவர் படுகாயமடைந்து அவயவங்களை இழந்துள்ளார். அவரது

38 >

## அடுத்த சுற்று இடமாற்றம்

### மாகாண பிரதம செயலர்கள்

யாழ்ப்பாணம், பெப். 9

வடக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டச் செயலர்கள் உள்ளிட்ட நாடு முழுவதிலும் 10 இற்கு மேற்பட்ட மாவட்டச் செயலர்களை இடமாற்றிய அரசு அடுத்ததாக மாகாணங்க

37 >



## அநிகதான் 'ரிமோட்'!

அந்தக்காலத்தில நீதியரசரா இருந்தவர் கட்சி தொடங்கி கொஞ்சக் காலம் தான். இண்டைக்குத்தான் கூட்டணிக்கு ஒப்பந்தமும் போடப் போகினம். இப்பிடி முளைச்சு மூண்டு இலை விட முதலே அந்தக் கட்சிக்கு இப்பவே கல்லெறி விழத் துடங்கிட்டுது. அப்பிடி ஒரு எறி தான், அந்தக் கட்சிக்கு சிலவழிக்கிற காசு பற்றின கதை.

37 >

## தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இன்று யாழில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், பெப். 9

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அங்குரார்ப்பண நிகழ்வும், அந்தக் கூட்டணிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வும் யாழ்ப்பாண நகரிலுள்ள ரில்கோ விடுதியில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நீதியரசருமான சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி, சுரேஸ்

37 >

## சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 9

நகுலேஸ்வரன் நிரோஜினி (வயது-31) என்ற ஒரு பிள்ளையின் தாய் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

அரியாலை இராஜேஸ்வரி வீதியில் வசித்து வந்த இவர், வீட்டில் தூக்கில் தொங்

37 >

### ஆசனம் கேட்டு அனந்தி

## காலையில் கோபம் மாலையில் நேசம்!

யாழ்ப்பாணம், பெப். 9

முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் தனக்கு ஒதுக்கிய ஆசனங்கள் போதாதென்று காலையில் முரண்டு பிடித்த திருமதி அனந்தி

37 >

### ராக்கிங் விவகாரம்

## 2ஆம் வருட மாணவனுக்குத் தடை

### அவரே 'வட்ஸப் குறூப் அட்மின்'

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் மோசமான முறையில் பகிடிவதையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டுக்குள்ளாகிய இரண்டாம் வருட மாணவனான பி. சிவஜெயனுக்கு மறு அறிவித்தல் வரை பல்கலைக்கழக கற்கை நெறிகளில் ஈடுபடவோ, வளாகங்களுக்குள் நுழையவோ, விடுதிக்குள் நுழையவோ முடியாதவாறு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

37 >

## யாழ்ப்பாணம் வருகிறார் உயர் கல்வி அமைச்சர்

### ஆளுநர் தலைமையில் புதிய விசாரணைக்குழு அமையலாம்!!

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் உட்பட இலங்கையிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பகிடிவதைகளில் ஈடுபட்ட, ஈடுபடுகின்ற மாண்வர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்ப

37 >



வடகிழக்கில் தொல்பொருள் சின்னங்களை பாதுகாக்க

# தொல்பொருள் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ்

## அமைச்சர் யோசனை முன்வைப்பு

கொழும்பு, பெப். 9

தொல்பொருள் திணைக்களத்தை பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வருவது அவசியம் என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். வடகிழக்கிலுள்ள தொல்பொருள் சின்னங்களை பாதுகாப்பதற்கு இதுவே சிறந்த வழி என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

பலபிட்டிய பகுதியில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொல்லியல் பாதுகாப்பு செயற்பாடுகளை உயர் ஒழுக்க விதிமுறைகளின் கீழ் முன்னெடுக்க வேண்டியது அவசியம். அவற்றின் மீது முழுமையாக அதிகாரத்தைச் செலுத்தி பாதுகாக்க வேண்டும்.

வடக்கு - கிழக்கு பகுதிகளிலுள்ள தொல்லியல் சின்னங்களை பாதுகாப்பதே கடினமாக உள்ளது. வடக்கு, கிழக்கிலேயே அதிகளவான தொல்லியல் சின்னங்கள் இருக்கின்றன. வடக்கு - கிழக்கில், இனமத மோதல்கள் ஏற்படும் பட்சத்தில் தொல்லியல்சின்னங்கள்சிதைவடையலாம். அவற்றை பாதுகாத்தால் மாத்திரமே எதிர்காலச் சந்ததிக்கு வரலாறு தொடர்பாக தெரிவை வழங்க முடியும் - என்றார். (ஒ.5)

# முன்னாள் ஆளுநர்கள் புதிய அரசியல் கூட்டு

கொழும்பு, பெப். 9

நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஆளுநர்கள் புதிய அரசியல் கூட்டு அமைத்து போட்டியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



இரண்டு பிரதான கட்சிகளுடனும் கூட்டு சேராத மிதவாத கொள்கைகளையுடைய சிறிய அரசியல் கட்சிகள் மற்றும் தரப்பினரை இணைத்துக் கொண்டு நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் தெரியவருகின்றது.

இதன் ஒரு கட்டமாக மேல் மாகாண முன்னாள் ஆளுநரும், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலியின் கொழும்பு இல்லத்தில் முக்கிய சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், முன்னாள் ஊவா மாகாண ஆளுநருமான கீர்த்தி தென்னக்கோன், ஜனாதிபதி சட்டத்தரணியும், மத்திய மாகாண முன்னாள் ஆளுநருமான மைத்ரி குணரத்ன, சப்ரகமுவ மாகாண முன்னாள் ஆளுநரான தம்ம திசாநாயக்க மற்றும் வட மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் ஆகியோர் சந்திப்பு நடத்தியுள்ளனர். (ஒ.5)



தைப்பூசத்தை முன்னிட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் திருமஞ்ச ரதப் பவனி நேற்று மாலை இடம்பெற்றது. (படம் ஐ.சிவசாந்தன்)

## ஆசிரியை காயம்

சாவகச்சேரி,பெப்.9

விபத்தில் காயமடைந்த ஆசிரியை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 7.20 மணியளவில் விபத்து இடம்பெற்றது.

வேம்பிராய்ப் பகுதியில் இருந்து சைக்கிளில் பயணித்த ஆசிரியை வலப்புறமாக பாடசாலைக்கு திருப்ப முற்பட்ட வேளை அதே பகுதியில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-160,159)

# 5010 பேர் 2019இல் நாய் கடிக்கு இலக்காகி சிகிச்சை

யாழ்ப்பாணம், பெப். 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2019ஆம் ஆண்டில் மட்டும் நாய்க் கடிக்கு இலக்கானோர் எண்ணிக்கை 5 ஆயிரத்து 10பேர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை புள்ளி விவரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையிலும், அவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளூராட்சி மன்றங்கள் திணறும் நிலையிலும், நாய் கடிக்கு உள்ளாகுவோர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. (ஒ.5,105)

# வீதிக்கு வந்த யானை பயணிகள் அசௌகரியம்

வவுனியா, பெப்.9

வவுனியா, புளியங்குளம், சன்னாசி பரந்தன் பகுதியில் நேற்றுமாலை வீதிக்கு வந்த யானையால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

வவுனியா, புளியங்குளம் -நெடுங்கேணி வீதியில் உள்ள பரந்தன் பகுதியில் யானை ஒன்று வீதிக்கு வந்தது. இதனால் அவ் வீதி வழியாக போக்குவரத்து செய்த பயணிகள் வாகன சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.


குறித்த வீதியில் மாலை வேளைகளில் யானைகள் தொடர்ச்சியாக வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த பகுதிக்கு வரும் காட்டு யானைகளைக்கட்டுப்படுத்த மின்சார வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பயணிகள் கோரியுள்ளனர். (ந-110)

# தைப்பூசத் திருவிழா 10 லட்சம் பேர் திரள்வு

மலேசியா, பெப். 9

உலகப் பிரசித்திப்பெற்ற திருத்தலத்தில் ஒன்றான மலேசியா கோலாலம்பூர் மாநகரில் அமைந்திருக்கும் பத்துமலை சிறிசுப்ரமணியர் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திரள மிகக் கோலகலமாக நேற்று நடைபெற்றது.

பத்துமலை தைப்பூசம் மயில் காவடிகளுக்கு மிகவும்



பிரசித்தி பெற்றது. பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை செலுத்த வண்ணக் காவடிகளையும் பாற்குடங்களையும் ஏந்தி பத்துமலை திருத்தலத்துக்குச் சென்றனர்.

தைப்பூசத்தை முன்னிட்டு மலேசியாவில் பொது விடுமுறை என்பதால் பக்தர்களின் கூட்டம் அதிகரித்துள்ளது. 6ஆம் திகதி வியாழக்கிழமை இரவு, கோலாலம்பூர் மகா மாரியம்மன் கோவிலில் இருந்து, முருகன் மற்றும் வள்ளி, தெய்வானையை தாங்கிய பிரமாண்டமான ரத ஊர்வலம் தொடங்கியது. வழியெங்கிலும் ஆயிரக்கணக்கானோர் தரிசனம் செய்தனர். தைப்பூசத்துக்காக முப்பரிமாண விளக்குகளுடன் ரதம் அலங்கரிக்கப்பட்டது.

இந்த ரத ஊர்வலமானது கோலாலம்பூரின் சில பகுதிகளின் வழியே பத்துமலை முருகன் கோயிலைச் சென்றடைந்தது. (ஒ.5)

A member of the IDOL family
UV Water Solution
water science technologies
Right solution for water issues

நீர் தொடர்பான சகல பிரச்சினைகளுக்கான தீர்வுகளுக்கு
T.P: +94775092737




உடனடி அழைப்புகள்
0112 200 200
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. www.lbfinance.com
LB FINANCE

அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9.00 மணிவரை திறந்திருக்கும்.




இலங்கையில் அதிகமாக மின்சாரத்தை சேமிக்கும்

முதல் தர குளிர்சாதனப்பெட்டி

இன்வெர்ட்டர் லீனியர் கொம்பிரெஸர்களைக் கொண்ட LG குளிர்சாதனப்பெட்டிகள் 42% வரை மின்சாரத்தை சேமிக்கிறது.

ரூ.89,990 இலிருந்து

*நிபந்தனைகள் உண்டு

| சிறப்பம்சங்கள் | LG | மற்றவை |
| --- | --- | --- |
| Inverter Linear Compressor - LG இன்வெர்ட்டர் லீனியர் கொம்பிரெஸர்கள் ஒரு உராய்வு புள்ளி மற்றும் எளிய நேர்கோட்டில் இயங்குவதால் 42% வரை மின்சாரத்தை சேமிக்கின்றன. | ✓ | ✗ |
| Door Cooling - குளிரூட்டியின் கதவில் இருக்கும் துளைகள் மூலம் குளிர் காற்றை வெளியேற்றி குளிர்ச்சியூட்டும் சிறப்பம்சம் LG குளிர்சாதனப் பெட்டிகளில் மாத்திரமே உள்ளன. கதவை திறப்பதால் வீண்விரையமாகும் குளிர்ச்சியை உடனடியாக மீண்டும் சரிசெய்கிறது. | ✓ | ✗ |
| Hygiene Fresh+ காற்றினால் உணவு அசுத்தமாவதை வடிக்கட்டிகளின் மூலம் 5 படிமுறைகளில் 99.999% வரை அகற்றி சுத்தம் செய்கிறது. குளிர்சாதனப் பெட்டியில் உள்ள காற்றை தூய்மைப்படுத்துகிறது. | ✓ | ✗ |
| Linear Cooling - குளிர்சாதனப் பெட்டியிலுள்ள வெப்பநிலையின் ஏற்ற இறக்கங்களை குறைக்கின்றது | ✓ | ✗ |
| Bioshield - ஆன்டி- பங்கஸ் கேஸ்கட் உணவை சுத்தமாக வைத்திருக்கும். | ✓ | ✗ |
| Moist Balance Crisper - உகந்த நிலையில் ஈரப்பதத்தைப் பராமரிக்கும் பாக்ஸ் கவரான இது, ஒரு புதுமையான அமைப்பு முறைமையாக உள்ளது. | ✓ | ✗ |

சாதாரண இன்வெர்ட்டர் கொம்பிரெஸர் VS இன்வெர்ட்டர் லீனியர் கொம்பிரெஸர்



4 இடங்களில் மோதுகிறது

ஏனைய குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள சாதாரண இன்வெர்ட்டர் கொம்பிரெஸர் இயங்கும் போது 4 இடங்களில் மோதுவதால் மின்சாரம் மேலதிகமாக செலவாகிறது.

ஒரு இடத்தில் மாத்திரம் மோதுகிறது

LG குளிர்சாதனப் பெட்டிகளிலுள்ள இன்வெர்ட்டர் லீனியர் கொம்பிரெஸர் ஒரு இடத்தில் மாத்திரம் மோதி மிகவும் இலகுவாக செயல்படுவதால் இதில் குறைந்த அளவு மின்சாரமே செலவாகிறது.

011 5 999 000
நிறுவன துரித இலக்கம் 011 577 5073
Buy Abans.com
நாடளாவிய அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ள முடியும்.
Abans

# தமிழினத்துக்கு அவமானம்

## தமிழ்த் தேசியக் கட்சி 'ராக்கிங்' பற்றிக் கருத்து

யாழ்ப்பாணம், பெப். 9

தமிழினத்துக்கு அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பகிடிவதைச் செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்துள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் பரப்புரைச் செயலர் ஜனார்த்தனன், மாணவர்களின் இத்தகைய செயற்பாடுகள் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

நல்லூரிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று முந்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் பெருமைக்குரிய அடையாளங்களில் ஒன்றாகக் காணப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் ஒட்டுமொத்த தமிழினமும் தலைகுனியும் விதத்தில் செயற்பட்டிருப்பதானது எமக்கு மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் இடம்பெறும் 'ராக்கிங்' எனப்படும் பகிடிவதை வரைமுறையற்ற வகையில் பாலியல் துன்புறுத்தலாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இது அங்கீகரிக்கக் கூடியதல்ல.

சமூகத்தின் விழுமியங்களுக்கு எதிராகச் செயற்பட்டுள்ள அந்த மாணவர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர்கள் மீது பல்கலைக்கழக உள்ளார்ந்த விசாரணைகளோடு மட்டுப்படுத்தாது சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பல்கலைக்கழக சமூகத்தினர் பகிடிவதையை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மாணவர் ஒன்றியங்கள் ஒருசில அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படுவதை நிறுத்தி மாணவர்களுக்குப் பாதுகாப்பான கல்விச்சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே தமது பிரதான கடமை என உணர்ந்து செயற்பட வேண்டும். தவறிழைத்த மாணவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு மாணவர் ஒன்றியம் முன்வர வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது - என்றார்.

(த-20)

## சுயதொழில் ஊக்குவிப்பு நிதி 10 பேருக்கு வழங்கப்பட்டது



மன்னார், பெப். 9

மன்னார் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சுய தொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்கும் நிகழ்வு நானாட்டான் பிரதேசச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நானாட்டான் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி அலுவலர் திருமதி றஞ்சனா இருதயராஜ் குரூஸின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் கலந்து கொண்டு கடன் திட்டத்தை வழங்கினார்.

நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் பெண் தலைமைத்துவப் பயனாளிகளுக்கான நுண்கடன் வழங்கும் நிகழ்வில் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் அவர்களின் நிலையான பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகள் குறித்தும் விரிவாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.

பின்னர் குறித்த நுண்கடன் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தகுதியான 10 பயனாளிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் தொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டது.

(த-56)

# கோத்தாவின் இராணுவ ஆட்சி சுதந்திர தினத்தில் அம்பலம்!

கொழும்பு, பெப். 9

ஜனாதிபதி கோத்தா இராணுவ ஆட்சியைத்தான் நடத்துகின்றார். அதன் வெளிப்பாடாகவே சுதந்திர தின நிகழ்வில் சிவில் உடையில்கூட இராணுவப் பதக்கங்களை அணிந்திருந்தார். இவ்வாறு சாடியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அகில விராஜ் காரியவசம்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோத்தாபய முன்னாள் இராணுவ அதிகாரி. அவர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர். இராணுவத்தில் அவர் சேவையாற்றிய காலப்பகுதியில் அவருக்குப் பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கலாம். அதை அவர் நாட்டின் ஜனாதிபதி என்ற அதியுயர் பதவிக்கு வந்த பின்னர் அணிந்திருந்தமை மாபெரும் தவறு. அதுவும் அவர் சிவில் உடையில் இந்தப் பதக்கங்களை அணிந்துள்ளார்.

இதற்கூடாகத் தனது தலைமையில் இராணுவ ஆட்சிதான் நடக்கின்றது என்பதை அவர் வெளிப்படையாகக் காட்டியுள்ளார். இந்த ஆட்சிக்கு முடிவு கட்டும் களமாக நாடாளுமன்றத் தேர்தலை நாம் பயன்படுத்துவோம் - என்றார்.

(ஒ.5.22)



யாழ்ப்பாணம் வண்வடகிழக்கு கொண்டலடி விநாயகர் (இறைமூத்த நைனார்) ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில்சிறப்பாக நடைபெற்றது. (ஐ)

# விபத்தினால் மூவர் காயம்

சாவகச்சேரி, பெப்.9

மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவர் காயமடைந்தனர்.

நடந்து சென்றுகொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பெண்களை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவருக்கு கால் முறிந்தது. தாயும் மகளும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் இடம்பெற்றது. .

அப் பகுதியில உள்ள பாடசாலையொன்றில் நடைபெற்ற. இல்ல மெய்வன்மைப் போட்டி முடிவடைந்த பின்னர் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த மூவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கால்முறிந்த நிலையில் பரமேஸ்வரன் புஷ்பம் (வயது-56) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவரது மகளும் பேர்த்தியும் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ந-9)

# தேசிய கூட்டுறவுச் சபை தலைவராக கேதீஸ்வரன்

கிளிநொச்சி, பெப். 9

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் உபதலைவராக அமரசிங்கம் கேதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளராகக் கடமையாற்றிவரும் இவர், கொழும்பில் கடந்த 5ஆம் திகதி நடைபெற்ற இலங்கைத் தேசிய கூட்டுறவுச் சபையின் நிர்வாகத் தெரிவின்போது உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

153 பொதுச் சபை பேராளர்கள் கலந்துகொண்டு வாக்களிக்கும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவராக குளியாப்பிட்டி மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் சரத் வீரசிறி வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.



கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போன்றனவற்றில் தலைவராக இருந்து மாகாணமட்ட பிரதிநிதியாக தேசிய கூட்டுறவுச் சபைக்கு இவர் தெரிவுசெய்யப்பட்டவர்.

இலங்கையின் கூட்டுறவு அமைப்புகளின் ஒரேயொரு தலைமை அமைப்பாக இந்தச் சபை காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. ஆசிய பசுபிக் பிராந்திய கூட்டுறவுச் சபையிலும் இந்த அமைப்புக்கு அங்கத்துவம் உண்டு என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(த-214)

## மருந்து இல்லா/ மருந்து வைத்தியம்

பலகாலமாக சிகிச்சை எடுத்தும் சுகமாகாத எல்லா விதமான நோய்களை உடையவர்களுக்கான அதி உன்னத வைத்தியம்

முள்ளந்தண்டு விலகல், கைகால் தூக்க முடியாமை, கை, கால் விறைப்பு, மாறாத படுக்கைப் புண்கள், மூலம், தோல் நோய்கள், குழந்தைப்பேறு இன்மை, பெண்களின் அனைத்து நோய்கள்.

**Dr.R.Sivagurunathan** (IN/14562) (11,17)

**077 730 1 669**

திங்கள், செவ்வாய் மட்டும் சந்திப்பு இலவசம்.
இல.41, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

## உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

**மலேசியா, சிங்கப்பூர், லண்டன், அமெரிக்கா, கனடா உட்பட**

13 வெளிநாடுகளில் தரமான உயர்கல்வியை மலிவாக பெற்றுக்கொள்ளவும், கப்பல் வேலை வாய்ப்புகளை அறிந்து கொள்ளவும் 0766674945 தொலைபேசி இலக்கத்திற்கு உங்கள் பெயர், தொடர்பிலக்கம் என்பன வற்றை அனுப்பிவையுங்கள், நாங்கள் உங்களைத் தொடர்பு கொள்கிறோம்.

## வேலையாள்கள் தேவை

- கோண்டாவிலில் இயங்கும் அரிசி ஆலை ஒன்றுக்கு ஆண் கூலி வேலையாள் தேவை.
- அரிசி வகைகள் பொதி செய்வதற்குப் பெண் வேலையாள் தேவை.

**சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.**

**077 957 4934**

## Luxury Apartment வாடகைக்கு

நாள், கிழமை, மாத அடிப்படையில் கொழும்பு 3, 4, 6, மற்றும் தெஹிவளையில்

1 B/Room, 2 B/Room, 3 B/Room

Sea View, Complete Furnished, Wi-fi, Cable TV, Kitchen Appliance, Washing Machine and Parking, 24 Hours Security Also Provide Transport Facilities

077 35 40 632 / 077 44 40 453
077 99 19388 / 077 77 33 122 / 011 2363991

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா?
- வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணெயைப்பாவித்து பயனடைய

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## வேலையாள்கள் தேவை

இராசவீதியில் இயங்கும் உணவகம் ஒன்றிற்கு கொத்து, Rice போடுபவர், சுத்திகரிப்பாளர், உணவு பரிமாறுபவர், சமைக்கக்கூடியவர், சமையல் உதவியாளர் தேவை.

- ஆண், பெண் இருபாலாரும்.
- தங்குமிட வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 457 6401, 021 221 5255



# B.Sc IT

## BACHELOR OF INFORMATION TECHNOLOGY

தகவல் தொழில்நுட்ப துறையில் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் U.G.C அங்கீகாரம் பெற்ற பட்டப்படிப்பாகும். இரண்டு கல்வி ஆண்டுகள் கொண்ட இக் கற்கை நெறியின் ஒரு கல்வி ஆண்டு இரண்டு Semester களை கொண்டதாகும். இக் கற்கைநெறியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உயர் ஊதியத்துடன் தொழில்வாய்ப்பு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கோ அல்லது உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டமேற் படிப்பு கற்கைநெறி ஒன்றை தொடர்வதற்கும் அமையும்.

## BACHELOR OF INFORMATION TECHNOLOGY TOP-UP DEGREE (1 YEAR)

UGC Recognized

அரச அல்லது அரச அனுமதிபெற்ற தனியார் உயர்கல்வி நிறுவனங்களில் உயர் தேசிய டிப்ளோமா (H.N.D) அல்லது இதற்கு நிகரான கல்வித் தகைமை உடைய மாணவர்கள் Bachelor of Information Technology பட்டப்படிப்பில் மூன்றாம் வருடத்திற்கு நேரடியாக உள்வாங்கப் படுவார்கள். (அதாவது மூன்று வருட கால பட்டப்படிப்பின் முதல் இரண்டு வருடகாலங்கள் விதிவிலக்கு (exemption) வழங்கப்படும்.

**BLC CAMPUS**

உடன் அழையுங்கள்

**0777 17 4443** Sapthika
**0777 07 4449** Vithya

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443
E - info@blccampus.edu.lk

www.blccampus.edu.lk

TVEC Approved Centre

## வல்வை ஆண்கள் பெண்கள் முதியோர் இல்லம்

வல்வை ஆண்கள் முதியோர் இல்லம் முதியோருக்கான வசதிகளுடன் கூடிய புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் ஆண்கள் முதியோர் இல்லம், பெண்கள் முதியோர் இல்லம் ஆகியன தனித்தனியாக கடந்த சில ஆண்டுகளாக இயங்கிவருகின்றது.

நியாயமான மாதாந்தக் கொடுப்பனவு செலுத்தி இந்த இல்லத்தில் இணைய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள். (AVA/1084)(11,17)

**ஊரிக்காடு, வல்வெட்டித்துறை,**
**021 226 5551**
**077 810 6857, 077 154 2067**

## ஐக்கிய அரபு எமீர் குடியரசில் தொழில் வெற்றிடம்

| தொழில் | எண்ணிக்கை | சம்பளம் AED | சம்பளம் LKR |
|---|---|---|---|
| ஆண் சுத்திகரிப்பாளர் | 50 | 1200 | 58,800 |

AED 1 = LKR 49.00 ( நாணய மாற்றத்தின்படி LKR பெறுமதி மாறலாம்)

**ஒப்பந்தக் காலம் 2 வருடங்களாகும். வாரத்திற்கு 6 நாட்கள் வேலை நாட்களாகும். நாளொன்றுக்கு வேலை நேரம் 8 மணித்தியாலங்களாகும்.**

| | |
|---|---|
| தங்குமிட வசதி | இலவசம் |
| போக்குவரத்து | இலவசம் |
| உணவு | இலவசம் |
| வைத்திய வசதி | இலவசம் |
| திரும்புவதற்கான விமான டிக்கட் (2 வருடங்களின் பின்னர்) | இலவசம் |

விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் விமான அனுமதிச்சீட்டு பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
உங்களின் விண்ணப்பங்களை பின்வரும் ஈமெயிலுக்கு அனுப்பி வைக்கவும்.
manik.trades@gmail.com அல்லது tirankoralage@gmail.com

APPROVAL NO. 0192/01/20

மேலதிக விபரங்களுக்கு
**மெனிக் ட்ரேட்ஸ் என்ட் இண்டஸ்றீஸ்**
95, மூன்றாம் மாடி, பீர் சைபோ வீதி, கொழும்பு - 12.
தொ.பே:- 0114 990 804, 077 9744802, 076 1032534, 077 6257869
www.maniktrades.com

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

## பால்நிலை சார் கற்கை நெறி கற்கைநெறிக்கான விண்ணப்ப அழைப்பு

| | |
|---|---|
| மொழி மூலம் | : தமிழ் |
| இடம் | : யாழ்ப்பாணம் |
| கற்கை நெறிக் காலம் | : ஒரு வருடம் |
| அடிப்படைத் தகுதி | : அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் பட்டம் அல்லது |

க.பொ.த உயர்தரத்தில்03 பாடத் தேர்ச்சியுடன், சமூக அறிவியல்/ அபிவிருத்தித் துறைகளில் 03 வருட அனுபவம்.
(அனுபவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்)

**விண்ணப்ப முடிவுதிகதி :** 25.02.2020

**விண்ணப்பிக்கும் முறை :** உங்கள் விருப்பம் சார் கடிதத்துடன் (Letter of Interest) சுயவிபரக் கோவையையும் இணைத்து 25.02.2020க்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தபால் முகவரி : **Women's Education and Research Centre, 58,Dharmarama Road, Colombo 06.**

அல்லது

info.werc82@gmail.com எனும் மின்னஞ்சல் மூலமும் அனுப்பலாம்.

**மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி இல :**
**0112595296**

(IACO/6987)(11,17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தண்டனை கடுமையானாலே குற்றங்கள் குறையும்!

புகுமுக மாணவிகளைப் பாலியல் ரீதியாக பகிடிவதைக்கு உட்படுத்திய மாணவர் ஒருவருக்கு பல்கலைக்கழத்துக்குள் நுழைவதற்கும், கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பகிடிவதை தொடர்பில் இவ்வளவு துரிதமாகக் களத்தில் இறங்கி, விசாரித்து முதன்மைச்சந்தேகநபருக்கு உடனடியாகவே தண்டனை வழங்கியமை வரவேற்கக் கூடியதே. ஆயினும், வெறும் தற்காலிக வகுப்புத்தடை மட்டும் பொருத்தமான தண்டனையாகுமா என்பது இவ்விடத்தில் விவாதத்துக்கு ரியதே.

வழக்கமாகப் பகிடிவதையில் ஈடுபட்டதாக இனங்காணப்பட்டு விசாரணைக்குட்படுத்தும் மாணவர்கள், எடுத்த எடுப்பிலேயே தாம் அவ்வாறு செய்யவில்லை என்று ஒற்றைக்காலில் நிற்பார்கள். அவர்களால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் விசாரிப்போரிடம் சாட்சியம் வழங்கினால், " நான் அவரை நட்புரீதியில் சொன்னதை, அவர் தவறாக பகிடிவதை என்று எடுத்துக் கொண்டுள்ளார்" என 'பிளேட்டை' மாற்றிவிடுவார்கள். என்றாலும் ஒரு பொதுவான சந்தேகத்தின் அடிப்படையில் குற்றம் செய்தனர் எனச் சொல்லப்படுவர்களுக்கு, தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்படும். பின்னர் மாணவர் ஒன்றியம் அந்த வகுப்புத்தடைக்கு எதிராக வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபட்டு, அந்த மாணவனை மீண்டும் பல்கலைக் கழகத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் நிலையை ஏற்படுத்தும் . இது தான் வழக்கமாக நடக்கும் பகிடிவதைத்தண்டனையும், விடுதலையும்.

இப்போது கொஞ்சம் வித்தியாசமாக, சகல ஆதாரங்களுடனும் வதைபுரிந்தவர்கள் வகையாகச் சிக்கியுள்ளனர். புகுமுக மாணவர்களைத் தொழில்நுட்பத்தின் மூலம் 24 மணிநேரமும் இம்சித்தவர்களுக்கு, இப்போது அதே தொழில்நுட்பமே காட்டிக் கொடுக்கும் வேலையையும் கனகச்சிதமாகச் செய்துவிட்டது. குறித்த மாணவிகளுக்கு பாலியல் ரீதியான தொல்லையைக் கொடுக்க உருவாக்கப்பட்ட 'வட்ஸப்' செயலியின் சூத்திரதாரி, அதே வட்ஸப் செயலில் அனுப்பிய குரல்வழித் தகவல்களும், எழுத்து வடிவத் தகவல்களும் இப்போது அவருக்கு எதிரான பலமான சாட்சியங்களாக மாறியிருக்கின்றன. அதனால் முன்னரைப் போல, 'நான் நட்புரீதியில் சொன்னதை திரித்துச் சொல்லிவிட்டார்கள்' எனக் கதை மாற்றமுடியாது. எனவே அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாலேயே, இந்தத் தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், முன்னரும் இதுபோன்ற தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டு, அதன் மூலமாக பகிடிவதை குறைந்ததா என்று கேட்டால், பதில் இல்லை என்பதாகவே இருக்கும். அப்படியானால் என்னதான், வழி?

அந்நியன் என்ற தமிழ்த் திரைப்படத்தில் " தண்டனைகள் கடுமையானால்தான் குற்றங்கள் குறையும்" என்றொரு கருத்து முன்வைக்கப்படும். அதேநிலையைத்தான் பகிடிவதை விடயத்திலும்கருத்திற் கொள்ளவேண்டும். அதுவும் எல்லைமீறிய பாலியல்வதையாக இந்தப் பகிடிவதை இன்னொரு பரிணாமம் எடுத்து, தொடர்ந்தும் தன் இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. எனவே பகிடிவதைக்கான தண்டனைகள், வகுப்புத்தடை என்று 'நோகாமல் அடிப்பது போல' இருக்கக் கூடாது. குறைந்தபட்சம் இப்படியான இழிகாரியங்களில் ஈடுபட்டவர்கள் உறுதியாக, சாட்சியங்களின் அடிப்படையில் இனங்காணப்பட்டால், அவர்களுக்கு அத்தோடு பல்கலைக்கழகக் கற்கைக்கு அனுமதி இல்லை என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளவேண்டும். 'பகிடிவதை செய்தால், பல்கலைக்கழகக் கல்விக்கே ஆப்பு' என்ற மனோநிலை வாய்க்கப்பெற்றால், பின்னர் பகிடிவதையில் ஈடுபட சிரேஷ்டமாணவர்களுக்கு இப்படிப் பாயும் துணிச்சல் வராது. பயந்து, பம்மத் தொடங்கிவிடுவார்கள்.இந்தப்பயமே காலப்போக்கில் பகிடிவதை ஒன்று இருந்ததா எனக் கேட்குமளவுக்கு அதனைக் காணாமல் போகவும் செய்துவிடும்.

இப்படிக் கடுமையான தண்டனைகளை வழங்க , பல்கலைக் கழக விதிகள் அனுமதிக்கவில்லை என்று, வாளாவிருக்கக் கூடாது. இந்த விடயங்களைப் பொதுவெளிக்குக் கொண்டு போனால் பல்கலைக்கழக மானம் போய்விடும் என்பதற்காக, பொத்தி வைக்காமல், அதனைப் பொதுச்சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய உயர்ந்த தண்டனையைப் பெற்றுக்கொடுக்க , யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் முன்வரவேண்டும்.

"பெண்களைத் தொட்டால் வெட்ட வேண்டியது விரல்களை யல்ல, தலைகளை" என்பதைப் போல,

"பாலியல் பகிடிவதை செய்பவர்களுக்குக் கொடுக்க வேண்டியது வகுப்புத்தடையல்ல, பல்கலைக் கல்விக்குத் தடை " என்று தண்டனைகள் வந்தால் மட்டுமே , வருங்காலத்திலாவது இவ்வாறான பகிடிவதை என்ற போர்வையில் நடக்கும் சமூகச் சீரழிவுகளைத் தடுக்கமுடியும். அப்படியல்லாமல், தொடர்ந்தும் பழைய பாணியிலே வகுப்புத்தடையே தண்டனை என்று சென்றால், பழையபடி பகிடிவதை முருங்கை மரத்தில் ஏறவே செய்யும்.



# 15,000 பொருள்களின் விலைகள் குறைப்பு!

கொழும்பு, பெப்.9

*15 ஆயிரத்துக்கும் அதிகமான பொருள்களின் விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அரசின் வரிக் குறைப்பு நன்மையை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.*

இது தொடர்பாகத் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கட்டுமானப் பொருள்கள், உணவுப் பொருள்கள், குழந்தைகளுக்கான பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் உட்படப் பல்வேறு பொருள்களின் விலைகள் அரசின் வரி நிவாரண கொள்கைக்கமைய குறைக்கப்படவுள்ளன.

இந்த விலை குறைப்புத் தொடர்பாகப் பொருள்களை தயாரிக்கும் மற்றும் இறக்குமதி செய்யும் நூற்றுக்கும் அதிகமான நிறுவனங்கள் அதிகார சபைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளன.

அதற்கமைய அந்தப் பொருள்களின் பெயர்கள் மற்றும் விலைகள் தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபை சிறப்புப் பகுப்பாய்வு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இந்தப் பொருள்களின் பெயர்கள் மற்றும் விலைகள் தொடர்பாக வெகு விரைவில் நுகர்வோருக்கு ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்துமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை சம்பந்தப்பட்ட நிறுவன ங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முன்னதாகப் பால்மா மற்றும் சிமெந்து ஆகியவற்றுக்கான விலை குறைப்பை மேற்கொள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் 'வற்' வரியை 8 வீதமாகக் குறைத்தமை, தேசிய நிர்மாண வரியை நீக்கியமை ஆகியவற்றின் ஊடகக் கிடைத்த நன்மைகள் நுகர்வோரைச் சென்றடைந்துள்ளனவா என்பதை ஆராயவும் நுகர்வோர் விவகார அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கையை முன்னெடுக்க நுகர்வோர் விவகார அதிகார சபையின் விசேட விசாரணைப் பிரிவு ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## திகனவில் கோர விபத்து: நான்கு இளைஞர்கள் சாவு

கொழும்பு, பெப்.9

திகன, மெனிக்ஹின்ன பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் நான்கு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். வேகக்கட்டுப்பாட்டை இழந்த கப்ரக வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி அருகில் இருந்த கொங்கிறீட் குவியல் ஒன்றில் மோதியதில் இந்த விபத்து நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாலை 1.35 மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ள நிலையில், விபத்தில் படுகாயமடைந்த இளைஞர்கள் மெனிக்ஹின்ன மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

திருகோணமலை, உஹன மற்றும் மகியங்கனை பிரதேசங்களைச் சேர்ந்த 17 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டவர்களே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

மெனிக்ஹின்ன பொலிஸார் விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## பீடி இலைகள் மீட்பு



கொழும்பு, பெப்.9

காலிகலங்கரைவிளக்கத்திலிருந்து 120 கடல் மைல் தொலைவில் 92 கிலோ எடை கொண்ட பீடி இலைகள் மற்றும் 20 சட்டவிரோத போதை மாத்திரைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட இரு ரோந்து நடவடிக்கைகளின் போதே பீடி இலைகள் மீட்கப்பட்டன என்றும், 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரோந்து நடவடிக்கையில் நீரில் மிதந்து கொண்டிருந்த நிலையில் பல பொதிகளை கடற்படை கண்டுபிடித்துள்ளது. அதனுள் சுமார் 40 கிலோ எடையுள்ள ஈரமான பீடி இலைகள் காணப்பட்டன. அதே கடல் பகுதியில் சந்தேகத்துக்கிடமான ஓர் இழுவைப் படகொன்றை கடற்படை தடுத்து நிறுத்தி சோதனை செய்ததில் அதில் இருந்த, 52 கிலோ பீடி இலைகள் மற்றும் 20 போதை மாத்திரைகளுடன் படகில் இருந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## கிஹான் பிலப்பிட்டிய விவகாரம் விளக்கம் கோருகிறார் லிவோரா

கொழும்பு, பெப்.9

வழங்கப்பட்ட ஆலோசனையை செயற்படுத்தாமை தொடர்பாக சட்ட மா அதிபர் தப்புல டி லிவோரா, பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் அறிக்கை கோரியுள்ளார்.

பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவைக் கைது செய்வதற்காக நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொள்ளுமாறு சட்ட மா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அந்த ஆலோசனை இன்னமும் செயற்படுத்தப்படாத நிலையில் அதற்கான காரணத்தை நாளைக்குள் தனக்கு அறிவிக்க வேண்டும் என்று சட்டமா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளார். இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக ஏற்கனவே ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அந்த விசாரணைகளின் அடைவு மட்டத்தையும் தனக்கு அறிவிக்க வேண்டும் என்றும் சட்ட மா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபரிடம் விளக்கம் கோரியுள்ளார். (எ)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,பெப்.9

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை திங்கட்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது. காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **வவுனியா மாவட்டத்தில்** புதுக்குளம் கோவில்குளம் கிராமம், கூமாங்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், இலுப்பைக்குளம், மதவுவைத்தகுளம் கிராமம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# வாங்கிக் கட்டியது இந்திய அணி





ஆக்லாந்தில் நேற்று நடைபெற்ற இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் நியூசிலாந்து அணி 22 ரன்களால் வெற்றி பெற்று 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்திய அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்று இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் நியூசிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக குப்தில் - நிக்கோலஸ் களமிறங்கினர். இருவரும் அணியின் தூண்கள் போல நிலைத்து நின்று ஆடி ரன்களைச் சேர்த்தனர். அணி 93 ரன்களைப் பெற்ற போது இந்தியப் பந்து வீச்சாளர்களால் முதலாவது விக்கெட்டை கைப்பற்ற முடிந்தது. நிக்கோலஸ் எல்.பிடபிள்யு முறையில் 41 ரன்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்திய சுழற் பந்து வீச்சாளர்களை அடித்து நொறுக்குவோம் என கூறியிருந்த குப்தில் சொன்னதைச் செய்தார். அவர் 3 சிக்ஸர், 8 பவுண்டரிகள் அடங்கலாக 79 ரன்களை விளாசியிருந்தார். எதிர்பாராத விதமாக ரன்அவுட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். பின்னர் களமிறங்கிய ரெய்லர் குப்தில் விட்டுச் சென்ற இடத்தை நிரப்பினார். கடந்த போட்டியில் அதிரடி காட்டிய அணித் தலைவர் லாதம் 7 ரன்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். பின் வரிசை வீரர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. மறுமுனையில் ரெய்லர் தனியொருவராக ரன்களைச் சேர்த்தார். ரெய்லர் ஆட்டமிழக்காது 73 ரன்களைப் பெற்றார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 273 ரன்களைப் பெற்றது. பந்து வீச்சில் சாஹல் 3 விக்கெட்டுக்களையும், தாகூர் 2 விக்கெட்டுக்களையும், ஜடேஜா ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலகுவான இலக்கு எனக் களமிறங்கிய இந்திய அணிக்கு டவர் பந்து வீச்சாளர் கைல் ஜேமிசன் ஆரம்பமே அதிர்ச்சியைக் கொடுத்தார். அணி 21 ரன்களைப் பெற்ற போது முதலாவது விக்கெட் சரிக்கப்பட்டது.,ணி 100 ரன்களை எட்டுவதற்குள் 5 விக்கெட்டை இழந்து பரிதவித்தது. அணி சார்பில் ஜடேஜா 55 ரன்களையும், ஸ்ரேயர்ஸ் அய்யர் 52 ரன்களையும், நவ்டீப் சன்னி 45 ரன்களையும் அதிகப ட்சமாகப் பெற்றனர். நியூ சிலாந்துக்கு எதிரான தொடரில் தொடர்ந்து அதிரடியாக ஆடி வந்த கே.எல். ராகுல் 4 ரன்களுடன் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்திருந்தார். அவரது ஆட்டமிழப்பு அணியின் ரன் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது. அணி 48.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 251 ரன்களை மட்டுமே பெற்று 22 ரன்களால் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் சவுத்தி, கைல் ஜேமிசன், பென்னிட், கிராண்ட்ஸ்ஹோம் தலா 2 விக்கெட்டுக்களையும், நீசம் ஓர் விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் நியூசிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணி வீரர் டவர் பந்து வீச்சாளர் கைல் ஜேமிசன் தெரிவு செய்யப்பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இறுதி ஒருநாள் போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

# நேற்றைய நாள் முடிவில் பாக். அணி வலுவான நிலை



பங்களாதேஷ்க்கு எதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் ஷான் மசூட், பாபர் அசாமின் நிதானமான ஆட்டத்தால் வலுவான நிலையில் காணப்படுகின்றது

பங்களாதேஷ் அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையிலான 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் ராவல்பிண்டியில் ஆரம்பமானது. டாஸ் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் பங்களாதேஷ் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. அதன்படி பங்களாதேஷ் அணி களமிறங்கி தனது முதல் இன்னிங்ஸில் 233 ரன்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அணி சார்பில் மொகமட் மிதுன் 63 ரன்களையும், நஜ்முல் ஹசைன் 44 ரன்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பாகிஸ்தான் அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் ஷாஹீன் ஷா அப்ரிடி 4 விக்கெட்டுக்களையும், முகமது அப்பாஸ் மற்றும் ஹாரிஸ் சோஹைல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் சரித்தனர்.

நேற்று தனது முதல் இன்னிங்ஸ்க்காகக் களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அபிட் அலி, ஷான் மசூட் களமிறங்கினர். அணி 2 ரன்னைப் பெற்ற போது முதலாவது விக்கெட் சரிக்கப்பட்டது. அபிட் அலி ரன் எதனையும் பெறாது பவிலியன் திரும்பினார். வந்தார் அணித் தலைவர் அசார் அலி அவர் ஷான் மசூட் இணைந்து அணியை கட்டியெடுப்ப முற்பட்டனர். இருந்தும் அணித் தலைவர் 34 ரன்களைப் பெற்ற போது ஆட்டமிழந்தார். அணி 100 ரன்களை எட்டுவதற்குள் 2 விக்கெட்டை இழந்தது. இது பங்களாதேஷ் அணிக்கு உத்வேகத்தை அளித்தாலும் பின்னர் இணைந்த பாபர் அசாம், ஷான் மசூட் இணையைப் பிரிப்பதற்கு அவர்களால் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. இருவரும் இணைந்து பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர். ஷான் மசூட் சதம் தொட்டு ஆட்டமிழந்தார். மறுமுனையில் பாபர் அசாம் சதம் கடந்து அசத்தினார். அணி நேற்றைய நாள் முடிவில் 3 விக்கெட்டை இழந்து 342 ரன்களைப் பெற்றது. பாபர் அசாம் 143 ரன்னுடனும், அசாட் ஷவிக் 60 ரன்னுடனும் களத்திலுள்ளனர். பாகிஸ்தான் அணி நேற்றைய நாள் முடிவில் 7 விக்கெட் கைவசமிருக்க 109 ரன்கள் முன்னிலையில் உள்ளனர்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.9

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெறும் ஆட்டத்தில் ஏபி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூகநிலைய அணி மோதவுள்ளது. (23)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், பெப்.9

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிறிமியர் லீக் பிரிவு 2க்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கம்பொல விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(23)

# யாழ்.பல்கலை- கே.ஸி.ஸி.ஸி ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம்,பெப்.9

கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகமும் சனசமூக நிலையமும் வருடந்தோறும் நடத்தும் அணிக்கு 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விக்கிரம்,ராஜன்,கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நேற்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை இடம் பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழகஅணிமோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 159 ஓட்டங்களை பெற்றது. அணி சார்பில் கஜேந்திரன் 29 ஓட்டங்களையும், சுபேந்திரன் 21 ஓட்டங்களையும், டனுசன் 19 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரதீஸ், துஸ்யந்தன் தலா 2 இலக்குகளையும், சாம்பவன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணி 28.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற ஆட்டம் சமநிலையானது. அணி சார்பில் பிரதாபன் 50ஓட்டங்களையும், சந்தியன் 35 ஓட்டங்களையும் துஸ்யந்தன் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சுபேந்திரன் 3 இலக்குகளையும், செந்தூரன், திசநாயக்க தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (23)



ஆண்களுக்கான கடற்கரை கபடி

# ஐக்கிய வி.க. அணி தங்கம் வென்றது

யாழ்ப்பாணம்,பெப்.9

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக்கான கடற்கரை கபடிப் போட்டியில் மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி தங்கப் பதக்கத்தைத் தனதாக்கியது.

நேற்று மணியந்தோட்டம் கடற்கரையில் இடம்பெற்ற ஆண்களுக்கான கடற்கரை கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட் டுக் கழக அணியை எதிர்த்து கல்வியங்காடு நொதேர்ண் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 49:31 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

பெண்களுக்கான கடற்கரை கபடி

# தங்கம் வென்றது உதயசூரியன் வி.க.

யாழ்ப்பாணம்,பெப்.9

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டுப் போட்டி வரிசையில் பெண்களுக்கான கடற்கரை கபடிப் போட்டியில் நாவலடி உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி தங்கம் வென்றது.

நேற்று மணியந்தோட்டம் கடற்கரையில் இடம்பெற்ற பெண்களுக்கான கடற்கரை கபடிப் போட்டியின் இறுதியாட்டத்தில் நாவலடி உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணியந்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் நாவலடி உதயசூரியன்விளையாட்டுக் கழக அணி 29 : 20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)



# மழையால் கைவிடப்பட்ட ஆட்டம்

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி மழை காரணமாகக் கைவிப்பட்டது.

இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. டெஸ்ட் தொடரை 3:1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்குமிடையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டி இடம்பெற்று வருகின்றன. இதில் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றது.

இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது ஒருநாள் போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் தென்னாபிரிக்கா அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னரே மழை குறுக்கிட்டது. எனினும் சிறிது நேரம் கழித்து களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி துடுப்பெடுத்தாடும் போது 6ஆவது ஓவரில் மீண்டும் மழை குறிக்கிட்டு போட்டி தடைப்பட்டு ஆரம்பமானது. பின்னர் 26 ஓவர்களாகக் குறைக்கப்பட்டு மீண்டும் போட்டி ஆரம்பிக்கப்பட்ட போது 11.2 ஓவரில் தென்னாபிரிக்கா அணி 2 விக்கெட்டை இழந்து 71 ரன்களைப் பெற்ற போது மீண்டும் மழை குறிக்கீடு செய்து தொடர்ந்து பெய்ததால் போட்டி கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது போட்டி இன்று ஜோகனர்ஸ் பேர்க்கில் இடம்பெறும்.

# வேகநடைப் போட்டியில் வவு. மாவட்ட அணி தங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.9

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாவட்டங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்கு மான வேகநடை போட்டி நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெற்றது.

இதில் இருபாலருக்குமான போட்டியில் வவுனியா மாவட்ட அணி வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

(23)



09.02.2020
ஞாயிறு சிறப்பம்சம்
சூரியகாந்தி
உதயன்







■ சந்திரசேகர ஆசாத்

# சுதந்திரதின உரையும் சர்வாதிகார கனவும்!

இம்மாதம் 4ஆம் திகதி இலங்கையின் தனிச் சிங்கள சுதந்திரதினம் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கொண்டாடப்பட்டுள்ளது. 'நமோ நமோ மாத்தா அப்ப அபி சிறீலங்கா' என்ற தேசிய கீதம் தனிச் சிங்களத்தில் மட்டும் இசைக்கப்பட்டது. தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படவில்லை என்பதுடன் வழமையாகத் தமிழில் தேசியகீதம் பாடும் கொழும்பு இந்து மகளிர் கல்லூரி மாணவிகளும் பம்பலப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவியரும் அழைக்கப்படவுமில்லை. தேசிய கீதத்தை அடுத்து மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டன. தொடர்ந்து ஜனாதிபதியின் தேசிய தின உரையும் அது முடிந்ததும் முப்படையினரது அணிவகுப்பு மரியாதையும் இடம்பெற்றது. இந்தத் தேசியதின வைபவத்தில் தமிழ்மொழியும் தமிழ் மக்களும் புறக்கணிக்கப்பட்டு அவமதிக்கப்பட்டு விட்டனர் என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்ளவில்லை. எப்படியிருந்த போதிலும் இம்முறை இடம்பெற்ற இந்த 72ஆவது தேசிய தினமும் அங்கு ஜனாதிபதி ஆற்றிய உரையும் இடம்பெற்ற நிகழ்ச்சிகளும் இரு செய்திகளை வலியுறுத்தியுள்ளமை அவதானிக்க முடிகிறது.



**பௌத்தத்துக்கு உரித்தான அரசே கோத்தாபயவினது**

இலங்கை அரசானது பௌத்த சிங்கள மக்களின் அரசு என்பதும் சிங்களவர்களே இந்தநாட்டின் உரிமையுள்ள மக்கள் என்பதையும் ஏனையோர் அவர்களின் தயவில் வாழ்பவர்களேயொழிய இந்த நாட்டு பிரஜைகளாக சிங்களவர்களுடன் சரிநிகர் சமானமாக உரிமைகோர லாயக்கற்றவர்கள் என்பதும் இந்த வைபவத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து இலங்கையின் ஆட்சி முழுமையிலும் இராணுவமயப்படுத்தப்பட்டது என்பதும் அவ்வகையான நிலைமை உருவாக்கப்படுவதற்கு இடையூறாக இருக்கக் கூடிய சட்டதிட்டங்கள் அகற்றப்படும் என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரம்பெற்ற காலத்திலிருந்து 1972ஆம் ஆண்டு வரை சிங்களப் பிரதேசங்களில் சிங்களத்திலும் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தது. தேசிய தினம் போன்ற பொது நிகழ்வுகளிலும் இரு மொழிகளிலும் தேசிய கீதம் பாடப்பட்டு வந்தது. 1973ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட்டதையடுத்து தமிழ் மக்கள் தேசிய தினத்தை பகிஷ்கரித்ததுடன் அதை ஒரு துக்கதினமாகவும் அனுஷ்டித்தனர். ஆனால் 2015ஆம் ஆண்டு தொட்டு தமிழ்த் தலைமைகள் தேசிய தின நிகழ்வுகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தனர். தேசிய தின வைபவங்களின் போது இருமொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தது. ஆனால் கோத்தாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பு இடம்பெறும் முதலாவது தேசிய தின வைபவத்தில் தேசிய கீதம் தமிழில் பாடப்படவில்லை.

இப்போது ஒருமித்த நாட்டுக்குள் உயர்ந்த பட்ச அதிகாரப் பகிர்வு என்பதே தமிழ்த் தலைமைகளின் கோரிக்கையாக உள்ளது.

அவ்வடிப்படையில் புதிய அரசமைப்பு முயற்சிகளும் கடந்த அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்டுவந்தன. ஒருமித்த நாட்டின் மக்கள் என்ற வகையில் தமிழ் மக்களுக்கும் தேசிய கீதத்தில் உரிமையுண்டு.



எனவே தமிழில் தேசிய கீதம் பாடப்படாமல் விடுவதோ பாடப்படுவதைத் தடுப்பதோ தமிழ் மக்களின் மொழியுரிமையைப் பறிப்பது மட்டுமல்ல தமிழர்கள் இந்த நாட்டின் மக்கள் என்ற உரிமையை மறுப்பதும்கூட என்பது உணரப்படுகிறது. அதாவது சிங்களப் பேரினவாதிகள் முன்வைக்கும் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்றும் இங்கு வாழும் ஏனைய இனங்கள் அவர்கள் தயவில் வாழ வேண்டியவர்களேயொழிய இந்த நாட்டின் மீது உரிமை கொண்டாட முடியாது என்ற கொள்கைக்கு இந்தத் தேசிய தின விழா மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய தின வைபவத்தில் ஜனாதிபதி உரையாற்றும்போது தேசிய பாதுகாப்பைப் போன்றே மக்களின் பாதுகாப்பும் முக்கியமாக்கியதால் பயங்கரவாதத்தை உருவாக்கக் கூடிய அடிப்படை வாத அமைப்புக்களை தொடர்ந்து இந்த நாட்டில் செயற்படவிடப்போவதில்லை எனத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து தமிழ் முஸ்லிம் மக்கள் தமது உரிமைகள் மீது கை வைக்கப்படும்போது தமது எதிர்ப்பை வெளிப்படுத்த முடியாதவாறு ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படப் போவதற்கான முன்னறிப்பென்றே கருத வேண்டியுள்ளது.

**தமிழர்களுக்கு உரிமை சிங்களவருக்கு இனவாதம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தமது கோரிக்கை ஒன்றிணைக்கப்பட்ட பிரிக்கப்படாத பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் அதிஉச்சகட்ட அதிகாரப் பகிர்வென்றே கூறி வருகிறார். சமஷ்டி என்பது தனித்தனி நாடுகளை சில பொது அம்சங்களின் அடிப்படையில் ஓர் ஒன்றியமாக ஒன்றிணைப்பதாகும்.

ஆனால் இந்த அதிகாரப் பகிர்வு, சமஷ்டி ஆகிய கோரிக்கைகளைப் பிரிவினைவாதமென்றும் தமிழர்கள் நாட்டைப் பிளவுபடுத்த அனுமதிக்கக் கூடாது எனவும் கடந்த காலங்களில் தீவிர பிரசாரம் செய்து இனவெறியைக் கிளப்பியே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய தரப்பினர் பெரும் வெற்றிபெற்றனர் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

தேசிய் தௌபீக் அமைப்பைச் சேர்ந்த ஒருசில விரல்விட்டு எண்ணக்கூடிய நபர்களே ஏப்ரல் 21 குண்டு வெடிப்புக்களைமேற்கொண்டுகொழும்பு,நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் பேரழிவை ஏற்படுத்தினர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்கள் அனைவரும் அடிப்படைவாதிகள் எனவும் பயங்கரவாதிகள் எனவும் பயங்கரவாதிகளுக்குதுணையாகச் செயற்படுபவர்கள் எனவும் அத்துரலிய ரத்ன தேரர், ஞானசார தேரர் முதலியோரால் பெரும் பரப்புரை பேரலைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்கள் எனப் போராட்டங்கள் வெடித்தன. முஸ்லிம்கள் மீது கம்பஹா மாவட்டத்திலும் வடமேல் மாகாணத்திலும் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு முஸ்லிம்கள் மீதான கொடிய வேட்டை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு பௌத்த அமைப்புக்களாலும் சிங்கள இனவாதிகளாலும் பயங்கரவாதம், பிரிவினைவாதம், அடிப்படைவாதம் என்றவாறான அர்த்தங்கள் திரிபுபடுத்தப்பட்டு அவை இன ஒடுக்குமுறையின் ஆயுதங்களாகப் பாவிக்கப்பட்டு கோத்தாபயவின் தேர்தல் வெற்றியில் பெரும் பங்காற்றின. எனவே ஜனாதிபதியின் தேசிய தின உரையில் பயங்கரவாதம் உருவாக இடமளிக்கப் போவதில்லை எனக் கூறப்பட்ட வார்த்தைகளின் அர்த்தம் தமிழ், முஸ்லிம் மக்கள் மீதுமேற்கொள்ளப்படவுள்ள ஒடுக்குமுறையின் முன்னறிவித்த லாகும்.

**எங்கும் இராணுவம்**

இம்முறை இடம்பெற்ற தேசியதின வைபவம் வெளிப்படுத்திய இரண்டாவது செய்தி, இலங்கையின் ஆட்சி பீடம் இராணுவமயப்படுத்தப்படவுள்ளது என்பதாகும். இந்த வைபவத்தில் கலந்துகொண்டபோது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷதான் இராணுவ அதிகாரியாக இருந்தபோது பெற்றுக்கொண்ட பதக்கங்கள், விருதுகள் என்பவற்றை அணிந்து வந்திருந்தார். அதாவது தான் ஹிட்லரைப் போல முசோலினியைப் போல முழுமையான இராணுவ மேலாண்மை கொண்ட நாட்டின் தலைவர் என்பதை வெளிப்படுத்தும் போக்கில் முனைப்புக் காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தனது உரையில் "இந்த நாட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றும் கடப்பாடு எனக்குண்டு. அது எனது பொறுப்பும் கடமையுமாகும். அதனைச் செயற்படுத்துவதற்கு எந்தவொரு தடையையும் அரச உத்தியோகத்தர்களிடமிருந்தோ சட்டவாக்கத் துறையினரிடமிருந்தோ அல்லது நீதித்துறையிடமிருந்தோ நான் எதிர்பார்க்கவில்லை. தகுந்த ஆய்வு அல்லது ஒருங்கிணைப்பின்றி விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளினால் மக்கள் பெரும் தொல்லைகளை அனுபவிக்கின்றனர்" எனத் தெரிவித்திருந்தார்.

அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் மட்டற்ற அதிகாரங்கள் 19ஆம் அரசமைப்புத் திருத்தம் மூலம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. நாடாளுமன்றம், நீதித்துறை, சட்டத்துறை என்பவற்றுக்குச் சுதந்திரமாகச் செயற்படும் அதிகாரம் வழங்கப்பட்டது. ஆனால் கோத்தாபய ராஜபக்ஷ போன்றோரின் இராணுவ மயப்படுத்தப்பட்ட சர்வாதிகாரக் கனவுக்கு 19ஆம் அரசமைப்பு திருத்தம் போன்ற சட்டங்கள் தடையாக உள்ளன. மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிகாரம் மூலம் நாடாளுமன்றத்தைக் கலைத்து மஹிந்த தலைமையிலான புதிய ஆட்சியை நிறுவியபோது நீதிமன்றம் தலையிட்டு அதைத் தடுத்து நிறுத்தி ஜனநாயகத்தைக் காப்பாற்றியது. சர்வாதிகாரக் கனவு காண்பவர்களுக்கு நீதித்துறை இவ்வாறு தலையிட்டு ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதை எப்படி ஜீரணித்துக் கொள்ள முடியும். எனவே இவர்களால் இத்தகைய சட்டங்களை ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. எனவேதான் இந்த நோக்கத்தை நிறைவேற்றவே எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஒரு ஸ்திரமான அரசை அமைக்க தங்களை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் வகையில் தெரிவுசெய்யும்படி கோரி வருகின்றனர். அவர்களின் உறுதியான ஆட்சியென்பது ஓர் இராணுவ சர்வாதிகார ஆட்சி என்பதைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வர்களோ இல்லையோ என்பதற்கு எதிர்வரும் தேர்தல்தான் பதில் சொல்ல வேண்டும்.

ஆக, தேசிய தின விழாவும் அங்கு ஜனாதிபதி ஆற்றிய உரையும் அதைச் சுற்றி இடம்பெறும் சில சம்பவங்களும் இது ஒரு சிங்கள பௌத்த தேசம் என்பதையும் ஏனைய இனங்கள் அவர்கள் தயவில் வாழ வேண்டியவர்களேயொழிய இலங்கைப் பிரஜைகளுக்கான உரிமை அற்றவர்கள் என்பதையும் இன்றைய அரசு ஓர் இராணுவ சர்வாதிகாரத்தை நோக்கிய நகர்வை மேற்கொண்டு வருகின்றது எனவும் அதை நியாயப்படுத்துகிறது என்பதையும் வெளிப்படுத்துகின்றன என்பது கண்கூடு.

> ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, தான் இராணுவ அதிகாரியாக இருந்தபோது பெற்றுக்கொண்ட பதக்கங்கள், விருதுகள் என்பவற்றை அணிந்து வந்திருந்தார். அதாவது தான் ஹிட்லரைப் போல முசோலினியைப் போல முழுமையான இராணுவ மேலாண்மை கொண்ட நாட்டின் தலைவர் என்பதை வெளிப்படுத்தும் போக்கில் முனைப்புக் காட்டியுள்ளார்.

# சிதைகின்றன தமிழ் மன்னர் ஆதாரங்கள்

ஆர்.கே.மேனன்
ஆசிரியர்
கொக்குவில் இந்துக் கல்லூரி



சிதைகின்றது யமுனா ஏரி, மகிமை இழக்கின்றது மந்திரிமனை, தூர்ந்து போகின்றது கந்தோரண வாயில், துடிப்பாரும் இல்லை. அதைத் தடுப்பாருமில்லை.

சிந்தித்துச் செயற்பட வேண்டிய இன்றைய கட்டாய தேவைகளுள் இது மிக முக்கியமானது. பொறுப்புடனும் தூரநோக்குடனும் சிந்திக்கும்போது இதன் முக்கியத்துவம் ஒவ்வொருவருக்கும் புரியும். ஈழத்து வரலாற்றில் பலவற்றை நாம் இழந்துவிட்டோம். மீண்டும் மீண்டும் அதே தவறுகளைத்தான் விடுகின்றோம். வேற்று இனத்தவர்கள் இல்லாத வரலாறுகளையெல்லாம் இருப்பதுபோல் காட்டும் இவ்வேளையில் நாம் இருக்கின்ற வரலாறுகளைக்கூட தொலைத்து வருகின்றோம். இது வேதனைக்குரிய விடயமாகும். சிந்தித்துச் செயற்படமுன் சிதைந்து விடும் நிலையில் நல்லூர் இராசதானியின் சுற்றுப்புறத்தில் உள்ள வரலாற்று ஆதாரங்கள் தூர்ந்து வருகின்றன. தயவு செய்து இந்தக் கட்டுரையின் சிந்தனை செயலுருப் பெற உரியவர்கள் இடங்கொடுங்கள்.

### தூர்ந்து போகும் துருவங்கள்

சட்டநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள மந்திரிமனை எக்காலத்துக்கு உரியது எனத் திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் இக்காலத்தில் அது தூர்ந்து போகும் என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும். ஆடு, மாடுகளை கட்டி வைத்துப்பராமரிக்கும் இடமாகவும் சமூகப் பிரச்சினைகளின் துஷ்பிரயோகக் களங்களாகவும் அது மாறிவருகின்றது. கூரைக்குக் கீழ் போடப்பட்டிருந்த குறுக்கு மரங்கள் களவாடப்பட்டுள்ளன. செல்லரித்த புற்றுக்களும் புல் பூண்டுகளுமாக எமது வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றமை எவர்க்கும் வேதனையினைத் தரவில்லையா? யமுனா ஏரியின் மலையோரம் அடுக்கப்பட்ட கற்களின் அடிப்பாகம் தூர்ந்து வருகின்றது. விரைவில் மேற்பகுதி பாறிவிழுவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது. இது தவிர கல்வித் திணைக்களத்தின் கட்டட அத்திபாரம் ஏரியின் ஒரு பக்க மூலையை தூர்ந்து போக வைத்துவிட்டது. அயல் மக்களின் அன்றாடச் செயற்பாட்டினால் நாளுக்கு நாள் இந்த ஏரி இடிந்து வருகின்றது. உடனடியாகப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கவில்லையானால் தமிழ் மன்னர்கள் ஆண்டமைக்கான அடையாளங்களை நாம் இழக்க வேண்டி வரும். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தனது நிதியில் ஓர் கொட்டகையை போட்டார். இதனால் ஓரளவு மழை வெய்யிலினால் அது பாதுகாக்கப்பட்டது. தற்போது அதுவும் சேதப்பட கந்தோறண வாயில் தூர்ந்து போகின்றது.

### வரலாற்றுப் பெருமைகள்

ஒன்றின் பெருமைகள் புரிகின்ற போதுதான் அதன் அருமைகள் தெரியவரும். அந்த வகையில் யமுனா ஏரி பல வரலாற்றுப் பெருமைகளைக் கொண்ட ஓர் பகர வடிவ ஏரியாகும். இவ் ஏரிக்குள் ஒரு சுரங்கப் பாதை உண்டு என்றும் அது அரண்மனையின் அந்தப்புறத்துக்குச் செல்வதால் மன்னர்களின் மனைவிமார் நீராடுவதற்குக் கட்டப்பட்டு இருக்கலாம் என்றும் வரலாறுகள் கூறுகின்றன. இந்தியாவின் யமுனா நதியில் இருந்து கொண்டுவந்த புனித நீர் இதனுடன் கலக்கப்பட்டமையால் யமுனா ஏரி எனும் பெயர் வரலாயிற்று. இது ஒருபுறமிருக்க மறைந்த பேராசிரியர் சிவத்தம்பி கூறும் போது, 'மன்னர்களின் முரசொலியைக் கொண்டுதான் அன்று அவர்களின் பெருமை தீர்மானிக்கப்பட்டது. நீண்ட தூரம் கேட்கக்கூடிய ஒலிச்சத்தத்தைப்பெற முரசுக்குப் பயன்படும் மிருகத் தோல் செப்பனாகப் பதனிடப்பட வேண்டும். அதனைப் பதனிடுவதற்காகவே இந்த ஏரி கட்டப்பட்டிருக்கலாம் என்று கூறுகின்றார். அதாவது இவ் ஏரியின் பகர வடிவின் நடுவில் ஓர் மேடை உள்ளது. அம் மேடையில் தோல் விரித்துப் பதனிடப்படும் என்கிறார். அதாவது வெய்யிலில் அது உலர்ந்து ஈர நீராவியால் அது இழகி, மீண்டும் உலர்ந்து மீண்டும் இழகி என மாறி மாறி இடம்பெறும் செயலால் தோல் செப்பனாகப் பதனிடப்படும் எனவும் இவர் விவரிக்கிறார். இதன் மூலம் முரசொலி நீண்ட தூரம் ஒலிக்கும் என்கிறார். இவ்வாறான பல பெருமைகளைக் கொண்ட இந்த ஆதாரங்கள் சிதைவுறுதல் என்பது எவ்வாறு ஏற்புடையது என்பதே இக்கட்டுரையின் ஆதங்கமாகும்.

## துடிப்பாருமில்லை தடுப்பாருமில்லை



### அரசியல் பின்னடைவு

அன்றில் இருந்து இன்றுவரை இலங்கைத் தமிழர்கள் சிறுபான்மை எனும் சிறைக்குள் சிக்கித்தவிக்கும் பக்கங்கள் பல. இவ்வாறு நிலைமை இருக்கும் போது அடையாளங்களைக்கூட நாம் அலட்சியப்படுத்துகின்றமை எந்தவகையிலும் நியாயமல்ல. இலங்கைத் தமிழர்கள் வந்தேறுகுடிகள் என்று நியாயப்படுத்தும் அநியாயங்கள் பல அரங்கேறுகின்றன. தமிழ் மன்னர் ஆட்சிக்கான அடையாளங்களையும் நாம் தொலைத்துவிட்டோமானால் இனவாத திட்டங்களுக்கு இணைந்து செல்ல வேண்டிய நிலைதான் உருவாகும். இது தொடர்பாக தமிழர் சிந்தித்துச் செயற்பட வேண்டிய இக்கட்டான சூழல் இது. எம்மவர் மத்தியில் காணப்படும் பெரும் பலவீனம் சுயநலத்துக்கப்பால் பொதுநலச் சிந்தனையை இழந்து வாழ்வதேயாகும். இதனால்தான் ஈழத்து இலக்கிய வரலாற்றில்கூட பல பக்கங்களை நாம் தொலைத்துவிட்டோம். ஈழத்துப் பூதன்தேவனாரில் தொடங்கி இன்றுவரை எத்தனையோ இலக்கியவாதிகள் வாழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் அவர்களை அடையாளம்காண எம்மிடம் ஆதாரங்கள் இல்லாமையால் இந்திய மண்ணுக்கு இவர்களை இரையாக்கிவிட்டோம். இந்த நிலைதான் இந்த ஆதாரங்களைத் தொலையவிடுவதாலும் ஏற்படும்.

நல்லூர் இராசதானி இருந்தது என்பதற்கும் தமிழ் மன்னர் ஆட்சி இடம்பெற்றது என்பதற்கும் ஆதாரங்கள் எதிர்காலத்தில் இல்லையென்றால் அரசியல் அங்கீகாரங்கள் கிடைத்தாலும்கூட வந்தேறு குடிகள் தமிழர்கள் தான். கோப்பாயில் கோட்டை இருந்தமைக்கான ஆதாரங்களைத் தொலைத்துவிட்டோம். இதனைப் பாதுகாப்பதற்கான பல முயற்சிகள் எடுத்தும்கூட பலரின் சுயநலப் போக்கின் சூழ்ச்சியால் அது தோற்றுப் போய்விட்டது. இதே நிலைதான் மந்திரிமனை யமுனா! ஏரி கந்தோறண வாயிலுக்கும் விரைவில் ஏற்படும்.



தமிழர் மரபுரிமைகள் ஒவ்வொன்றும் திட்டமிட்டு திசை திருப்பப்படுகின்றன. இந்த இடங்களில் நாம் விழிப்புடன் இல்லையானால் விரைவில் தமிழ் மன்னர் அடையாளங்களும் சிதைக்கப்படுகின்றமை திண்ணம்.

### விரைவில் தீர்வு வேண்டும்.

தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த புனித பூமி கந்தரோடை என்பது வரலாற்றுப் பக்கத்தில் இன்று திசைமாற்றப் பட்டுவிட்டது. இதே போன்று தமிழர் மரபுரிமைகள் ஒவ்வொன்றும் திட்டமிட்டு திசை திருப்பப்படுகின்றன. இந்த இடங்களில் நாம் விழிப்புடன் இல்லையானால் விரைவில் தமிழ் மன்னர் அடையாளங்களும் சிதைக்கப்படுகின்றமை திண்ணம். மத்திய அமைச்சுக்கூடான நிதி ஒதுக்கீடு தமிழ் மன்னர் விடயத்தில் விரைவில் கிடைக்காது. அதனை எதிர்பார்த்து காலத்தை வீணடிப்பது மடமைத்தனம். பல தடவை பல ஆமோதிப்புக்கள் ஏற்பட்டும் கூட பல பக்கங்களின் அழுத்தங்களால் புனரமைப்புக்கள் புறந்தள் ளப்பட்டுவிட்டன.

ஆகவே அரச சார்பற்ற பொதுநிறுவனங்களுக்கூடான நிதி ஒதுக்கீட்டில் இதை நிறைவேற்ற எத்தனிக்க வேண்டும். இருப்பினும் தொல்பொருளியல் திணைக்களத்துக்கு சொந்தமாக இருப்பதால் இதன் அனுமதி அரசியல்வாதிகளுக்கு ஊடாகவே பெறப்பட வேண்டும். மாநகரசபை ஏன் இது தொடர்பாக விரைந்து செயற்பட மறுக்கின்றது?. இதில் எந்தப் பின்னணிகள் தடையாக உள்ளன? இது தொடர்பாக ஆராய்ந்து ஒருவரை ஒருவர் குறை கூறாது செயற்பட முன்வருவோம்.

*வரலாற்றை வளைக்கிறது இனவாதம் எமை*
*வந்தேறு குடிகள் என்கிறது பேரினவாதம்*
*தமிழர் ஆண்டமைக்கு ஆதாரம் இல்லையென்றால்*
*வந்தேறு குடிகள் தான் வருங்காலத் தமிழர்கள்!*

# அம்மா என்றால் சும்மாவா!



மிருசுவில் தமிழ்தாசன்

நள்ளிரவு பன்னிரண்டு மணியாகியும் புனிதவதிக்கு உறக்கம் வரவேயில்லை. எப்படிவரும்! மூத்த மகள் லாவண்யாவின் அகங்காரத்தையும் அடங்காப்பிடாரித்தனத்தையும் அவைகளால் ஏற்பட்ட வீண் விபரீதங்களையும் எண்ணிப் பார்த்தால் யாருக்குத்தான் உறக்கம் வரும்! இளவயதிலேயே கணவனைப் பறிகொடுத்தவள். குஞ்சும் குருமனுமாயிருந்த மூன்று பிள்ளை களையும் அப்பனில்லாக் குறை தெரியாது வளர்த்து ஆளாக்கிவிட்டவளுக்கு. இப்போது வளர்த்த கடா மார்பில் பாய்வது போன்ற ஒரு துன்பகரமான நிலைமை! 'எனக்கு ஒரு கதையும் தேவையில்லை. இந்த வீட்டை உடனடியாய் எழுதித்தரவேணும். அப்பா இருக்கையுக்கை என்ன சொன்னவர்?. இந்தவீட்டுக்கு என்ன பேர் வைச்சனிங்கள்? லாவண்ய பவனம் என்ன?. எனக்கெண்ட வீடு எனக்குத்தான். ஒரு கதையையும் நான் கேட்கத் தயாராயில்லை. எனக்கு வீடு எழுதித்தரவேணும்' தினமும் தாய்க்கும் மகளுக்கும் இதே பிரச்சினை யாகப் போய்விட்டது. புனிதவதிதான் என்ன செய்வாள் பாவம்! மூத்தவள் லாவண்யாவை அடுத்து திருமண வயதில் வத்சலா. இன்றைக்கோ நாளைக்கோ பருவமடையப் போகும் மாதுரி! லாவண்யாவுக்கு வீட்டைக் கொடுத்தால், இவர்களின் வருங்காலத்தை எப்படிச்சமாளிப்பது! புனிதவதி நியாயமாகப் பேசினாள். லாவண்யா அதை அநியாயம் என்றாள். பெற்ற தாயென்றும் பார்க்காது தூற்றினாள், திட்டினாள். ஒன்றும் முடியாதவிடத்து கணவனின் வீட்டுக்கே நிரந்தரமாகப் போய்விட்டாள். இனி என்றைக்குமே தாயின் முகத்திலேயே முழிக்கமாட்டாள். தாய் பிள்ளை உறவு முழுமையாக அறுந்துவிட்டது.

★★★★★

லாவண்யாவின் கணவன் காண்டீபன். அரச வங்கியொன்றில் பணிபுரிகின்றான். அவனுக்கு உத்தியோகம் அவசியமேயில்லை. பெற்றோர் உடன்பிறந்தோர் பல காலமாக வெளிநாட்டில் வசிக்கின்றார்கள். இங்கே ஏராளமான காணிபூமிகள்! ஏராளமான சொத்துக்கள்! இரண்டு அழகான பெரியவீடுகள். இவைக ளெல்லாவற்றையும் பராம ரிப்பதற்காகவே காண்டீபன் சொந்த மண்ணை விட்டுப் போகாது இங்கேயே வாழ்கின்றான். லாவண்யா! நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளும்! எங்களுக்குத்தான் ஒண்டுக்கு இரண்டு பெரிய ஆடம்பர வீடுகளிருக்குதெல்ல! அதிலும் குடியிருக்க ஆக்களில்லை யெண்டு வாடகைக்கு ஒரு வீட்டைக் குடுத்திட்டு இந்த வீட்டிலை நாங்களிருக்கிறம். இந்தப் பெரிய வீட்டிலை ஆளும் ஆளுமெண்டு நீரும் நானுமிருக்கிறம். தேவையெண்டால் இன்னு மிரண்டு குடும்பங்களைக் குடியிருத்தலாம். அப்படிப் பெரிய இரண்டு வீடுகளை வைச்சுக் கொண்டு உம்மடை அம்மாவோடை வீடு கேட்டுச் சண்டை பிடிக்கிறதிலை என்ன நியாயம்! கொஞ்சம் யோசிச்சுப் பாரும்!

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய காண்டீபன், உடைகளை மாற்றாது, லாவண்யா கொடுத்த தேனீரைப் பருகாது ஐந்து நிமிடங்களாக சப்பென்றிருந்தவன், ஏதோ ஒருவித உளத் தாக்கத்தினால் உந்தப்பட்ட நிலையில் மளமளவென வார்த்தைகளை அடுக்கிக் கொண்டு போனான். இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள், காண்டீபனின் தகுதிதராதரங்களுக்கு அவன் நினைத்திருந்தால் தன்னுடைய அந்தஸ்துக்கேற்ற வகையில் பெரிய குடும்பத்தில் திருமணம் செய்திருக்கலாம். லாவண்யாவின் பெயரில் தான் லாவண்யம். அவளோ அப்படியொன்றும் அழகியல்ல. சுமார் ரகம் தான். தந்தையை இழந்த ஏழைக்குடும்பம். வாழ வழியின்றி வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் இவர்களுக்குத் தன்னாலான ஏதாவது உதவிகள் பண்ணவேண்டும் என்னும் காண்டீபனின் தராள மனத்தின் பிரதிபலிப்புத்தான் லாவண்யாவின் திருமணம். சொத்துச் சுகத்துக்காகவோ வேறெந்த நலன்களை எதிர்பார்த்தோ அவளை அவன் மனைவியாக்கவில்லை. இப்ப உந்தக் கதையளை விட்டிட்டு முதலிலை உடுப்பை மாத்துங்கோ! தேத்தண்ணியும் ஆறியிருக்கும். கொண்டு போய் சூடாக்கிக் கொண்டு வரட்டே' காண்டீபனின் கேசத்தை அன்புடன் வருடிக்கொடுத்தாள். அதை அவன் கண்டு கொள்வதாயில்லை.

★★★★★

'எடி லாவண்யா! நல்லாய் யோசிச்சுப்பார்! என்னட்டை இருக்கிற ஒரேயொரு சொத்து இந்தவீடுதான். உனக்குப் பின்னாலை இரண்டு தங்கச்சியளிருக்குதுகளெல்லே! அதுகளை நான் எப்பிடிக் கரைசேர்க்கிறது! உனக்கு இரக்கமேயில்லையடி. பாசம் மனச்சாட்சி ஒண்டுமேயில்லையே! நீ ஏனிப்பிடிக் கொடுமையாய் நடக்கிறாய்! மகள் லாவண்யாவின் காலைப் பிடித்துக் கெஞ்சாக் குறையாக அழுதிருக்கிறாள் தாய் புனிதவதி.

'எடி லாவண்யா! நல்லாய் யோசிச்சுப்பார்! என்னட்டை இருக்கிற ஒரேயொரு சொத்து இந்தவீடுதான். உனக்குப் பின்னாலை இரண்டு தங்கச்சியளிருக்குதுகளெல்லே! அதுகளை நான் எப்பிடிக் கரைசேர்க்கிறது!

லாவண்யா மிஞ்சி முறைத்தாள். 'எணை! என்ரை மனிசன் ஒரு சதம் சீதனம் வாங்காமல்தான் செய்தவர். இந்தவீட்டை எண்டாலும் எழுதிக் குடுக்காட்டில் என்னை மதிப்பரே! அவர் சும்மா ஏதோ ஒரு ஒப்புக்காகச் சொன்னாலும் நாங்கள் வீடு குடுக்காட்டில் என்ன நினைப்பர்! அவையின்ரை ஆக்களின்ரை கண்ணிலை முளிக்கலாமே! நீயும் ஒரு அம்மாவே! தினமும் தாய்க்கும் மகளுக்கும் நடத்த வாய்சண்டை முற்றிய நிலையில்தான் லாவண்யா இப்போது கணவன் வீட்டிலே நிரந்தரமாக வசிக்கத்தொடங்கி ஆறு மாதங்களாகிவிட்டன.

'பிள்ளை லாவண்யா! நீ தேவையில்லாமல் இப்பிடிக் கோவிச்சுக் கொண்டு போறாய். எப்பவோ ஒரு நாளைக்கு உன்ரை மனச்சாட்சிக்கு நீ பதில் சொல்லித்தான் ஆக வேணும். அப்ப நீ அம்மாவை நினைப்பாய்' கண்ணீருடன் கூறினாள் புனிதவதி.

'ஓமணை ஓ! நீ தான் பெரிய ஒரு அம்மா! எனக்கெண்டு கட்டின வீட்டைத் தராமல் ஏமாத்துற நீயும் ஒரு அம்மாவே! உன்னை இனி அம்மா எண்டே சொல்லமாட்டன். அம்மா எண்ட வார்த்தையே என்ரை வாயிலை வராது. இது சத்தியம். திடமாகக் கூறிவிட்டு நடையைக் கட்டினாள்.

இவையனைத்தும் லாவண்யா, புனிதவதி இருவரதும் மனக் கண்கள் முன்னால் வந்து சென்றுகொண்டிருந்தன.

★★★★★★

லாவண்யா! டொக்டர் சொன்னவரெல்லே! பகல் நித்திரை கொள்ளக்கூடாதெண்டு. ஓடியாடி வேலை செய்தால் தான் பிறக்கப்போற எங்கடை செல்லக்குட்டி சுகமாய்ப் பிறக்குமாம். காண்டீபன் அடிக்கடி புத்திமதிகள் கூறுவான். அலுவலகத்தில் கடமையிலிருந்த காண்டீ பனுக்கு அவசர தொலைபேசி அழைப்பு! லாவண்யாவிடமிருந்துதான் வந்தது. 'ஐயோ! என்ரை அம்மா! வயித்துவலியைத் தாங்கேலாதாம். ஆஸ்பத்திரிக்குப் போக ஓடிவாருங்கோப்பா! மறு முனை யில் லாவண்யா கதறித்துடித்தாள். காண்டீபனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்ல. என்னதான் பணவசதியிருந்தாலும் இது போன்ற இக்கட்டான தருணங்களில் அருகில் பெற்றதாய் நிற்பது போல வருமா? அம்மா என்னும் வார்த்தையைக் கூட நாவால் உச்சரிக்க மாட்டேன் என அடித்துச் சத்தியம் செய்தவள் இப்போது அம்மா அம்மா என அலுறுகின்றாளே! அம்மா என்று மட்டும் அலறவில்லை என்ரை அம்மா! என்றல்லவா அலறுகின்றாள். மிஸ்ரர் காண்டீபன்! உங்கடை வைவ் அவளின்ரை அம்மாவைக் கூப்பிட்டு அழுறா. கடவுளே! எண்டு கடவுளைக் கூப்பிட்டால் அவர் வர மாட்டார். ஆனால் அம்மாவைக் கூப்பிட்டால் பெத்த தாய் எப்பிடியும் வருவா. அவவந்தால் இவவின்ரை வலியும் குறையலாம் சுகமாகப் பிரசவம் நடக்கவும் வாய்பிருக்குது. கூப்பிடுங்கோ அம்மாவை' அந்தப் பெண் மருத்துவர் கனிவாகக் கூறினார். காண்டீபன் லாவண்யாவின் முகத்தை நோக்கினான். அவளிடமி ருந்து எதிர்ப்புக் குரல்களொன்றும் வெளிப்படவில்லை. என்ன அதிசயம்! இப்போது வலி குறைந்துவிட்டது. எத்தனையோ மருந்து மாத்திரைகள் கொடுத்தும் குணமாகாத லாவண்யாவின் பிரசவவலி குறைந்த மாயம்தான் என்ன! புன்னகை பூத்த முகத்துடன் காண்டீ பனுக்கு அருகில் நிற்கும் அந்தப் பெண் வேறுயாருமல்ல. லாவண்யாவின் தாய் புனிதவதியேதான். தாயின் முகத்தைப் பார்த்ததும் அவளையறியாமலே பெண் குழந்தையொன்றை அம்மாவின் சாயலில் பெற்றெடுத்தாள் லாவண்யா!. அம்மா என்றால் சும்மாவா! அவளில்லாமல் அகிலத்தில் எதுவுமில்லை. அம்மா என்றால் அம்மாதான் புரிந்தது லாவண்யாவுக்கு.



'A Letter to Tamil Citizens From a Group of Sinhalese' என்ற தலைப்பில் 'ஐலன்ட்' பத்திரிகையில் பிரசுரமான கடிதத்தின் தமிழாக்கம் இங்கு தரப்படுகிறது. தமிழ் மக்கள் பற்றிய சிங்களவர்களின் மனவோட்டம் என்னநிலையில் இருக்கிறது என்பதையும், எமது பிரச்சினைகள் பற்றிய அவர்களது புரிதல்களில் எந்தளவு தூரம் உண்மை உள்ளது என்பவற்றை எடை போட, இந்த மொழிபெயர்ப்புக் கடிதம் உதவலாம்.

தமிழாக்கம்: ந.பரமேஸ்வரன்



# இனியும் பலியாகாதீர் தமிழர்களே!

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை யிட்டு நாங்கள் மிகவும் கவலைப்படுகிறோம். இந்தத் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட விதம் தமிழீழ வரைபடத்தை மீண்டுமொரு முறை எமக்கு நினைவூட்டியுள்ளது. தமிழர்கள் மத்தியில் அச்ச உணர்வு தோற்றுவிக்கப்பட்டிருந்தமை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். உங்களில் பெரும்பாலானோருக்கு தனிநாடு தேவை என்பது எமக்குத் தெரியும். இந்தச் சிறிய, 65.000 சதுர கி.மீ நிலப்பரப்பைக் கொண்ட நாட்டில் வடக்கு- கிழக்கு இணைப்பு உங்களுக்குத் தேவை என்பது உங்களது 13 அம்ச கோரிக்கைகள் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

நீங்கள் சொல்கிறீர்கள், வடக்கில் வேலையில்லா பிரச்சினை இருப்பதாக. (வேலைவாய்ப்புக்களில் தமிழ் இளைஞர்கள் கைவிடப்பட்டுள்ளதாக). அதேபோல் சிங்கள இளைஞர்களும் வேலையில்லா பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்குவதற்கு ஒரு சிறந்த பொருளாதாரக் கட்டமைப்பு நாட்டுக்குத்தேவை. வடக்கு - கிழக்கிலுள்ள பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது தமிழ் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறீர்கள். தெற்கிலுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது சிங்கள இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று நாம் ஒரு போதும் கேட்கவில்லை. உங்களில் பலர் வடக்கு,கிழக்குக்கு வெளியே, நாடுமுழுவதிலும் எம்முடன் கடமையாற்றுகின்றனர்.

உங்களது வழிபாட்டிடங்களையும் கடைகளையும் நாங்கள் அங்கீகரிக்கிறோம். வடக்கு, கிழக்கிற்கு வெளியே கோயில் கட்டுவதை நாங்கள் தடை செய்யவில்லை. வடக்கு- கிழக்கில் விகாரைகள் அழிக்கப்பட்டிருந்த காலத்திலும் நீங்கள் தெற்கில் தடையின்றி உங்களது மத வழிபாடுகளை மேற்கொண்டீர்கள். வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும் என்று நீங்கள் கூறுவதையிட்டு நாங்கள் மிகவும் கவலையடைகிறோம். வடக்கு, கிழக்குக்கு வெளியே, உதாரணமாக வெள்ளவத்தை ,தெஹிவளை போன்ற பகுதிகளில் வசிக்கும் தமிழர்களை வெளியேறுமாறு நாங்கள் ஒருபோதும் கோரவில்லை.

பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் 30 வருட காலப்பகுதியில் எமது நாட்டின் முதுகெலும்பை உடைத்துள்ளது.

உயிரிழப்பு,உடைமை இழப்புக்களுக்கு முகம் கொடுத்தோம். பெருமளவு சிங்கள மக்கள் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். மேற்குலக ஊடகங்கள் இந்த விடயம் பற்றி பேசுவதில்லை. உங்களது புலம்பெயர் உறவுகளால் மேற்குலக ஊடகங்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றன. ஆனால் உண்மை என்ன என்பது உங்களுக்குத் தெரியும்.

2009ஆம் ஆண்டில் நீங்கள் பிரபாகரனிடம் இருந்து தப்புவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டீர்கள்? நலன்புரி முகாம்களில் தரப்பாள் கொட்டகைகளில் நீங்கள் பட்ட துன்பங்கள் எமக்கும் தெரியும்.உங்களுக்கு மேலதிக வசதிகள் தேவைப்படுகின்றன. உங்களது வலியும் வேதனையும் எமக்கு நன்கு தெரியும். இரண்டு இனத்தவர்களுமே யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளோம். யுத்தம் முடிந்தவுடன் அரசாங்கம் உங்களைச் சாதாரண நிலைக்கு கொண்டு வந்தது.

சிறுவர் போராளிகளாக இருந்த உங்களது பிள்ளைகளைக் காப்பாற்றி, உங்களது பிள்ளைகள் பாடசாலை செல்ல வழிவகுத்தது. நாங்கள் அரசினூடாக உதவிகளை வழங்கினோம். உடைகள், பணம், ஏன் சிலர் தமது சம்பளப் பணத்தைக்கூட வழங்கினார்கள். வெளிநாடுகளிலிருந்த சிங்களவர்களும் உதவிகளைச் செய்தார்கள். சிங்கள மருத்துவர்கள் தொண்டு அடிப்படையில் சேவையாற்றினர்.

இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்திகள் யாவும் மக்களின் வரிப்பணத்தைக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன; வரிப்பணத்தில் 70 சதவிகிதம் சிங்கள மக்களின் வரிப்பணம். சிங்கள மக்களின் வரிப்பணத்தில் தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. யுத்தம் முடிந்த பின்னர் வடக்கில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. உங்களை எங்களது மக்களிலிருந்து நாம் வேறுபடுத்திப்பார்க்கவில்லை. உங்களுக்கு மேலதிக உதவிகள் தேவை என்பதால் உங்களுக்கு உதவுவதில் நங்கள் மகிழ்ச்சியடைந்தோம்.

யாழ்ப்பாணத்துக்கு மீளவும் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டபோது வடக்குக்கு இப்போது தேவையில்லை. அது தெற்குக்குத்தான் தேவை என்று நாங்கள் கூறினோமா? அம்பாந்தோட்டைக்கு இன்னமும் ரயில் சேவை ஆரம்பிக்கப்படவில்லை; மாத்தறைவரையுமே அது நடைபெறுகிறது; இப்போது பெலியத்தைவரை அது நீடிக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை இன்னமும் அபிவிருத்தி செய்யப்படவில்லை அம்பாந்தோட்டையில் தண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. வடக்குடன் ஒப்பிடும்போது, அம்பாந்தோட்டை இன்னமும் அபிவிருத்தி அடையவில்லை. அம்பாந்தோட்டை அபிவிருத்தி அடைய வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

சுனாமி தாக்கியபோது புலம்பெயர்ந்த சிங்களவர்கள் பணம் சேகரித்து அனுப்பியபோது அதைச் சிங்களவர்களுக்கு மட்டும் உதவப் பயன்படுத்த வேண்டும் என நிபந்தனை விதித்தார்களா? இலங்கை மக்களனைவருக்கும் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்கில்தானே அனுப்பினார்கள். நாங்கள் உங்கள் ஒவ்வொருவரையும் எங்களில் ஒருவராகவே பார்க்கிறோம். தமிழர்கள் தெற்கில் காணி வாங்க முடியாது என்று சட்டம் உள்ளதா? ஆனால் வடக்கில் சிங்களவர்கள் காணி வாங்குவதை எதிர்க்கிறீர்கள்.

**இந்த நாட்டையும் அனைத்து மக்களையும் பாதுகாக்கக்கூடிய ஒரு த்லைவர் நாட்டுக்குத்தேவை. இப்போது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இலங்கையராக நடந்து கொள்ளப் பழகுங்கள் உங்களது பாத்திரத்தை சரிவரச்செய்யுங்கள். இந்த நாட்டின் சிறார்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ எம்முடன் கைகோருங்கள்.**

தமிழர்கள் தெற்கில் வசிக்கக்கூடாது என்று சொன்னோமா? தமிழர்கள் தெற்கில் வேலை செய்யக்கூடாது என்று சொன்னோமா? தமிழர் ஒருவர் பிரதம நீதியரசராக வரக்கூடாது என்று சொன்னோமா? அல்லது தமிழர்கள் உயர் பதவிகளை வகிக்கக்கூடாது என்று சொன்னோமா? அது குறிப்பிட்ட பதவிக்குரிய தகுதி தராதரம் என்பவற்றைப் பொறுத்தது.

இதுதான் சந்தர்ப்பம்; தமிழ் அரசியல்வாதிகளின் சுயலாப நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கிப் பலியாகாதீர்கள். அவர்களின் தவறான சிந்தனைகளுக்கு துணை போகாதீர்கள். 70 சதவீத சிங்கள மக்கள் வசிக்கும் நாட்டில் தீபாவளி, தைப்பொங்கல் என்பவற்றுக்கு விடுமுறை வழங்கப்படுகிறது. இன்னொரு பிரபாகரன் வேண்டாம்; தமிழ்த் தீவிரவாதம் தேவையில்லை. இனியும் தாங்க முடியாது.

இந்த நாட்டையும் அனைத்து மக்களையும் பாதுகாக்கக்கூடிய ஒரு தலைவர் நாட்டுக்குத்தேவை. இப்போது உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இலங்கையராக நடந்து கொள்ளப் பழகுங்கள் உங்களது பாத்திரத்தை சரிவரச் செய்யுங்கள். இந்த நாட்டின் சிறார்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ எம்முடன் கைகோருங்கள். எம்மனைவருக்கும் ஒரேவிதமான ஆசைகள், அபிலாஷைகள்தான் உள்ளன; எமது ஆசைகளையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றிக் கொள்ள எம்முடன் கைகோருங்கள்.

# உதிர்ந்த இலைகள்

பார்வை எனும் காந்த சக்தியால்
பாவை நீயென்னைக்
கவர்ந்திழுத்து
ஈர் இதயக் கூட்டின்
இனம் புரியா உணர்ச்சித்
தளத்துடன்
காதல் எனும் பெருக்கினில்
காற்றாகிக் கலந்தோம்.

அகராதியிலுள்ள சொற்களே
அடியோடு விஞ்சும் படி
அளவின்றி நித்தம்
அள்ளிக் கதைத்த
சொத்துகள்
எந்தன் இதயத்தை வருடியபடியே
இன்னும் எந்தன் நினைவறையில்

ஓயாது உற்றுப் பார்த்தால்
ஓரமாய் ஒளிந்து போகும்
மான் கன்றைப் போல்
மருட்சியுடன்
உன் நயனங்களின் நாடகம்
உள் நெஞ்சில் சிலிர்க்கின்றது.

கற்பனை பாயை விரித்து
கட்டுக் கணக்கின்றி
நாள் தோறும் மனதில்
நாம் கட்டி மகிழ்ந்த
குடும்ப எண்ணக் கோட்டைகள்
குதூகலித்த பொழுதுகள்
குற்றுயிராய் உழல்கின்றன.

கடைசியாய் சந்தித்த வேளை
கரை ஒதுங்கா அலைகளாய்
நீ சிந்திய கண்ணீர்த் துளிகளை
கரம் கொண்டு நான்
துடைத்திட எத்தனித்த கணத்தில்
கடைசியாய்ச் சொல்கிறேன்
இனி எதுவும் வேண்டாம்
என்றால்
விம்மலுடன் வெற்றுயிராய் நான்
இங்கு....!

கிளைபரப்பிய விருட்சமதில்
நிழல் பெற்று மகிழ்ந்த கணங்கள்
தழல் கொண்டு சுட்டெரிக்க
உதிர்ந்த இலைகளை
உற்றுப் பார்த்த படி
நான் இங்கு...!

**மிருசுவில் மின்மினி**
பேராதனைப் பல்கலைக்கழகம்







■ அனார்கலி

# தென்கிழக்கு திசையில் இருந்து....



## சுதந்திரதினம்!

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சுதந்திர தினம் தென்கிழக்குப் பிரதேசத்தில் சிறப்புற நடைபெற்றது. குறிப்பாக முஸ்லிம் பிரதேசங்களில் அரச அலுவலகங்கள், பள்ளிவாசல்கள், பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்வுகள் சிரமதான நிகழ்வுகள் சிறப்பு து ஆ பிரார்த்தனைகள் என்பனவும் இடம்பெற்றன.

இதேவேளை இம்முறை பல பிரதேசங்களிலும் தேசியக் கொடி விற்பனையும் அமோகமாக இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

**பயப்பிராந்தியா? நாட்டுப்பற்றா?**

## தமிழ் தேசியகீதம்!


72 ஆவது சுதந்திர தின தேசிய நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடப்படாது புறக்கணிக்கப்பட்ட நிலையில், நிந்தவூர் பிரதேசசபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திர தின நிகழ்வுகளில் தமிழ் மொழியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிரின் ஆலோசனைக்கு அமைவாக தேசிய கீதம் தமிழில் பாடும் முன்னுதாரண செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

சுதந்திர தினபிரதான நிகழ்வு உட்பட அதனையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேலும் நான்கு சபைக்குரிய நிகழ்வுகளின் ஆரம்பங்களிலும் தேசிய கீதம் தமிழிலேயே பாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**உரிமை, உரிமை**
**இது நம் உரிமை!**





## பருவகாலம் ஆரம்பம்!

கடல் மீன்பிடிக்குப் பெயர் பெற்ற கல்முனைப் பிராந்தியத்தில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் கடல் மீன்பிடிக்கான பருவ காலம் தற்சமயம் ஆரம்பமாகியுள்ளது.

குறிப்பாக இந்தப் பிராந்தியத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் கரைவலை கடல் மீன்பிடி தினமும் இடம்பெற்று வருகின்றது.

பெரிய நீலாவணை, மருதமுனை, கல்முனை, காரைதீவு, நிந்தவூர் போன்ற பிரதேசங்களில் நெத்தலி, கீரி போன்ற இன மீன்கள் பெருமளவில் பிடிபடத் தொடங்கியுள்ளன.

**கடல் தாயே கண்திறவாய்!**



## கல்முனைக்கு முதலிடம்!

306 பி 2 லயன்ஸ் கழகங்களின் இரண்டாவது பிரதி ஆளுநர் லயன், றொஷான் காஞ்சனா யாப்பா, கல்முனை நகர லயன்ஸ்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார்.

பிரதி ஆளுநரின் விஜயம் தொடர்பிலான நிகழ்வு, கல்முனை நகர லயன்ஸ் கழகத்தலைவர் லயன், எஸ் அரசரெத்தினம் தலைமையில் காரைதீவில் நடைபெற்றது.

நிகழ்வில் உரையாற்றிய இரண்டாவது பிரதி ஆளுநர் றொஷான் காஞ்சனா யாப்பா பிராந்தியத்திலுள்ள லயன்ஸ் கழகங்களிடையே நிருவாக ரீதியான செயற்பாடுகளில் கல்முனை நகர லயன்ஸ்கழகம் முதலிடத்தில் திகழ்வதாகப் புகழாரம் சூட்டினார்.

**எதிலும் சோடைபோகா கழகம்!**

## 70 ஆவது ஆண்டு விழா!

காரைதீவு நேரு சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு பூர்த்திவிழா, நிலையத் தலைவர் எம். ரமணீதரன்தலைமையில், காரைதீவு விபுலாநந்தாக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் ஆத்மீக அதிதியாகவும், கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர்கே.ஜெயசிறிலும்கலந்து கொண்டமையுடன் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

**சேவைக்கென்றே**
**தடம் பதித்த அமைப்பு**





## அலிசப்ரியின் வருகை!

ஜனாதிபதியின் சட்ட ஆலோசகரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.யூ.எம் அலிசப்ரி அம்பாறை மாவட்டத்துக்குக் கடந்த வாரம் வருகை தந்து பல நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

சில தினங்கள் மாவட்டத்தில் தங்கியிருந்த அவர் கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர் முதலான முஸ்லிம் பிரதேசங்களில் மக்கள் சந்திப்புக்களை நடத்தியதுடன், பொதுஜன பெரமுன சார்ந்த அரசியல் கூட்டங்கள் மற்றும் பொது நிகழ்வுகளிலும் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார்.

இவரதுதிடீர்வருகைமுஸ்லிம்களுக்குள்புதிய அரசியல்தலைமை ஒன்றுதுளிர் விடுகின்றதா? எனும் கேள்வியையும் எழுப்பியுள்ளது.

**காலம் பதில் கூறட்டும்!**

## நிபுணத்துவ ஆலோசனை!

உள்ளூராட்சி. மாகாண சபைகள் அமைச்சின் வழிகாட்டலில். ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ள இரண்டாம் நிலை நகரங்களின் நிலைத்தகு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி வேலைத்திட்ட முன்மொழிவுகள் குறித்து ஆராயும் நிபுணத்துவஆலோசனைக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில், முதல்வர் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நகர திட்ட நிபுணத்துவ ஆலோசகர் எச். கே ஜயசுந்தர உட்பட நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கல்முனை மாநகரசபைத் திட்டமிடல் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

**நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரிஸின் முயற்சியால் கிடைத்த பயன்..**



# 'ஆஸ்விட்ச்' வதை முகாமின் கதை

உலக வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட ஒரு முக்கியமான இடமான ஆஸ்விட்ச் மீண்டும் பேசப்படலாகியிருக்கிறது. இந்த ஆண்டு முழுமையுமே அது பேசப்படும். மனித குலம் மறக்கவே முடியாத இடங்களில் ஒன்றான அது எப்படி பேசப்படாமல் இருக்க முடியும்? நாஜிக்களின் ஆஸ்விட்ச் வதை முகாமிலிருந்து யூதர்கள் விடுவிக்கப்பட்டதன் 75ஆவது ஆண்டு தற்போது அனுசரிக்கப்படுகிறது.

ஆஸ்விட்ச் ராணுவ வதைமுகாம் என்பது வெறும் முகாம் மட்டுமல்ல. நவீனக் கொலைக்களம். ஈவிரக்க மற்றவர்களிடம் அதிகாரமும் படைபலமும் சேர்ந்தால் என்ன ஆகும் என்பதற்கு உலக சாட்சியாக இருப்பது ஆஸ்விட்ச். ஜேர்மானிய நாஜி அரசு, இரண்டாம் உலகப் போரின்போது ஆக்கிரமித்த போலந்தின் தென்பகுதியில் ஆஸ்விட்ச் என்கிற சிற்றூரில் ராணுவ முகாமைத் திறந்தது. தங்களால் பிடிக்கப்படும் எதிரி நாட்டவர்களை அடிமைகளைப் போல் நடத்தி வேலைவாங்கவும், சித்திர வதை செய்யவும் இந்த இடத்தை அவர்கள் பயன்படுத்தினார்கள்.

போரில் ஜேர்மனிக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்த மமதையாலும், மனிதாபிமானம் அறவே இல்லாமல் வறண்டதாலும், ஐரோப்பிய நாடுகளில் தாங்கள் கைது செய்த யூதர்கள் அனைவரையும் வதைமுகாமில் நச்சு வாயுவைப் பயன்படுத்திக் கொன்று, பிறகு எரித்து சாம்பலை அந்த ஊருக்கு அருகில் இருந்த ஏரிகளில் கரைத்துவிட்டனர். விஷவாயுதான் என்றில்லாமல் அடித்துக் கொல்வது, சித்திரவதை செய்து கொல்வது, சுட்டுக் கொல்வது, கூர்மையான ஆயுதங்களால் கொல்வது என்று எல்லா கோரமான வழிகளையும் கடைப்பிடித்தார்கள். நச்சுவாயு போதிய அளவில் கிடைக்காதபோது, அக்னி குண்டத்தை மூட்டி அதில் யூதர்களை உயிரோடு தூக்கிப்போட்டும் பொசுக்கிக் கொன்றார்கள்.

### 75ஆம் நினைவு நாள்

1940 முதல் 1945 வரையில் இந்த மாபெரும் பாதகச் செயல் உலகின் பிற நாடுகளால் அறியப்படாமல் நடந்தது. ரஷ்யாவிலிருந்து புறப்பட்ட செஞ்சேனை வீரர்கள் போலந்தையும் ஆஸ்விட்சையும் கைப்பற்றிய பிறகுதான் இந்தக் கொடுமை நின்றது. யூதர்கள் மட்டுமல்லாது போலந்து, ருமேனியா, சோவியத் நாடுகளைச் சேர்ந்தவர்களும் சின்டி, ரோமா பழங்குடி மக்களும், தன்பாலின உறவாளர்களும், யெஹோவா விசுவாசிகளும், ஹிட்லரின் அரசியல் எதிரிகளும் இங்கே கொல்லப்பட்டனர். ஆஸ்விட்சில் மட்டுமல்ல, மேலும் 20 ஊர்களில் இதே போன்ற வதைமுகாம்கள் நடத்தப்பட்டன. சுமார் 30 சிறுமுகாம்களும் நடத்தப்பட்டன. ரேவன்ஸ்ப்ரக் என்ற ஊரில் பெண்களுக்கு மட்டுமே தனி வதை முகாம் இருந்தது.

### ஆஸ்விட்ச் எப்படி வதைமுகாமானது?

ஆஸ்விட்ச் நகரில் ஒரு தொழிற்சாலையும் தொழிலாளர்களுக்கான குடியிருப்பும் இருந்த இடத்தை 1939 செப்ரெம்பரில் நாஜிக்கள் கைப்பற்றினர். அங்கே ராணுவக் குடியிருப்பு, அலுவலகம், போர்க் கைதிகள் முகாம் ஆகியவற்றை அமைத்தனர். முதலில், போலந்து நாட்டு அரசியல் கைதிகளையும், ஜேர்மனிய குற்றவாளிகளையும் அங்கே கொண்டுவந்தனர்.

அந்த குற்றவாளிகள் அங்கே முகாம் நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டனர். அற்ப விஷயத்துக்குக் கூடப் போர்க் கைதிகளைக் கொடூரமாக அடிப்பது, சித்ரவதை செய்வது என்று வதையை அவர்கள் ஆரம்பித்தனர். சித்திரவதைகளை விதவிதமாகச் செய்து பார்த்தனர்.

1941 ஓகஸ்டில் போலந்து, சோவியத் போர்க் கைதிகளை நாஜிப் படையினர் நச்சுவாயுவைப் பாய்ச்சிக் கொன்றனர். உடனே ஆஸ்விட்ச்II என்ற பெயரில் வதைகூடத்தின் அடுத்த தொகுப்பைப் போர்க் கைதிகளைக் கொண்டே கட்டினர். அந்த வளாகத்தின் பரப்பளவு 472 ஏக்கர்.



அதற்குள் ரயில்கள் வருவதற்கு மூன்று தண்டவாளப் பாதைகளை அமைத்தனர். பிராக், வியன்னா, பெர்லின், வார்சோ போன்ற நகரங்களுடன் ரயில்பாதை இணைக்கப்பட்டிருந்ததால், ஐரோப்பா எங்கும் கைதாகும் போர்க் கைதிகளும் ஆஸ்விட்சுக்கு உடனடியாகச் சரக்கு ரயில்களில் நிற்க வைத்தே கொண்டுவரப்பட்டனர்.

கடுங்குளிரில் பசியும் நோயுமாக வந்தவர்களை உடனடியாக மகளிர், சிறுவர்கள், நோயுற்றவர்கள், முதியவர்கள் என்று வகைப்படுத்தி இவர்களையெல்லாம் நேரடியாக விஷவாயுக் கூடங்களுக்குக் கொண்டுசென்று கொன்றனர். வந்தவர்களின் பெயர்களையோ, ஊரைக் கூடப் பதிவுசெய்யவில்லை. நல்ல உடல் வலுவுடன் இருந்தவர்களைச் சிறிது காலம் அந்த முகாமில் கட்டடப் பணிக்கும் பிற வேலைகளுக்கும் வைத்துக்கொண்டனர். அடுத்த கூட்டம் வந்ததும் முதலில் வந்தவர்களில் உடல் வலுவுடன் இருந்தவர்கள்கூடக் கொலைக்களத்துக்கு அனுப்பப்பட்டனர்.

### 11 லட்சம் சடலங்கள்

ஆஸ்விட்ச் முகாமுக்கு அழைத்துவரப்பட்ட 13 லட்சம் பேரில் 11 லட்சம் பேர் கொல்லப்பட்டனர். 9 லட்சத்து 60 ஆயிரம் யூதர்கள், 74 ஆயிரம் யூதர் அல்லாதவர்கள், 21 ஆயிரம் ரோமா பழங்குடியினர், 15 ஆயிரம் சோவியத் போர்க் கைதிகள், 15 ஆயிரம் பிற ஐரோப்பியக் கைதிகள் இறந்தனர்.

### நாஜிஸம் என்றால் என்ன?

'நேஷனல் சோஷலிசம்' என்ற கொள்கையே 'நாஜிஸம்' என்றானது. ஜேர்மனியர்களுக்கும் தங்கள் இனம்தான் உயர்ந்தது என்ற கர்வம் உண்டு. ஆரியர்கள் என்று ஹிட்லர் தங்களை அழைத்துக்கொண்டார். அவர் அச்சு அசலான ஜேர்மனியரா என்கிற சந்தேகம்கூட வரலாற்றாசிரியர்களுக்கு உண்டு. ஆரிய இனம் ஆளப் பிறந்தது என்ற அகங்காரம் அவரிடம் நிரம்பியிருந்தது.

தாங்கள் இனரீதியாகச் சுத்தமானவர்கள் என்று நினைத்தவர்கள், யூதர்களுக்கு எதிரானவர்கள், இன மேம்பாட்டியல் கருத்தாளர்கள் போன்றோர் இணைந்து 'ஜேர்மனியர்கள்' என்ற தேசிய அடையாளத்தில் இணைந்தனர். தங்களுடைய பிரதேசத்தையும் ஆளுகையையும் விரிவுபடுத்த முடிவெடுத்தார் கள். இப்படியாக 'தேசிய சோஷலிஸ ஜெர்மானியத் தொழிலாளர்கள் கட்சி' (நாஜி) உருவானது.

### ஹிட்லரின் அவதாரம்

போர்ப்படையில் ராணுவ வீரர்களுக்குத் தலைமையேற்க தனக்குத் தந்த பேச்சுப் பயிற்சியை மக்களிடம் காட்டினார் ஹிட்லர். ஜேர்மனியர்கள் உயர்ந்த ஆரிய குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், இழந்த பெருமையை மீண்டும் மீட்க மக்கள் ஒன்றுதிரள வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். சிறு வயதில் யூதர்களைப் பற்றிக் கேள்விப்பட்டவற்றை வைத்து ஜேர்மனியின் வீழ்ச்சிக்கு யூதர்கள்தான் காரணம் என்ற பிரமையை மக்களிடம் உருவாக்கினார். ஜேர்மனி மீண்டும் உலகத் தலைவராக விளங்க, தான் சொல்வதைக் கேட்க வேண்டும் என்று மக்களுக்குப் போதையூட்டினார். ஜேர்மானிய இராணுவமும் அவரைத் தலைவராக ஏற்றது. பிறகு, அவர் சர்வாதிகாரியாக மாறினார். அவருடன் இத்தாலியின் முஸோலினியும் சேர இரண்டாவது உலகப் போரின்போது இவ்விருவரும் முதல் கட்டத்தில் செல்வாக்கு செலுத்தினார்கள்.

ஆரிய இனத்துக்கு எதிரானவர்கள் யூதர்கள் என்று பேசி, அதை ஹிட்லரே தீவிரமாக நம்பத் தொடங்கினார். ஐரோப்பியக் கண்டம் முழுவதும் யூதர்களுக்கு எதிராக இருந்த வெறுப்பைப் பயன்படுத்திக்கொண்டார். ஜேர்மனியை மீண்டும் போர் இயந்திரமாக மாற்றி ஒவ்வொரு நாடாகக் கைப்பற்றினார். தான் கைப்பற்றிய நாடுகளில் இருந்த யூதர்களைக் கைது செய்து ஓரிடத்துக்கு அழைத்துவந்தார். 'உலக மக்களின் ஒரே பிரச்சினை யூதர்கள்தான், அவர்களைக் கொன்றொழிப்பதுதான் பிரச்சினைக்குத் தீர்வு' என்று முடிவுகட்டினார்.



இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு இனி மூன்றாவது உலகப் போர் நடக்காது என்றே உலகம் நம்புகிறது. ஆனால், போர் வெறி பிடித்த ஆட்சியாளர்கள் எப்போது, எங்கே தோன்றுவார்கள்என்றுசொல்ல முடியாது. போர் இல்லாத சமூகம் வேண்டும், மனித மாண்புகளை மதிக்கும் மாட்சிமை வேண்டும்; ஆஸ்விட்சும் ஜேர்மனியும் சொல்லும் வரலாற்றுப் பாடம் இவைதான்.

# நிலவே...





கண்களுக்கு தன்மையாய்
மனதிற்கு மென்மையாய்
என்றும் இனிமையாய்
இருக்கின்றாய் வெண்ணிலவே.
நிலவே! நீ எனக்கு
நன்றாய் கற்பித்து விடுகிறாய்
நிஜவாழ்வு தனை.

வளர்பிறையாய் தோன்றி
வளர்த்து விடுகிறாய் நீ
மனதில் பேர் ஆவலை.
பௌர்ணமியை எதிர்பார்த்து
உற்சாகமாய் மனம் செயற்பட
மகிழ்விக்கின்றாய் நீயும்
முழு நிலவாய் தோன்றியே.

தேய்பிறையாய் நீயும்
தந்து விடுகிறாய் மனதிற்கு
தணிக்க முடியா சோர்வுதனை.
தனித்து விடுகிறேன்
அமாவாசை அன்று
அருகில் நீயும் இல்லாமல்.


நிலவே! நான் இங்கு,
அழுவதும் உன்னாலே,
மகிழ்வதும் உன்னாலே.
இன்பமும் துன்பமும்
பாதி பாதியாய் தந்து
புரிய வைத்து விடுகிறாய்
வாழ்வின் இரகசியமதை.

நிலையில்லா வாழ்வுதனில்
மாற்றம் மட்டும் மாறாது.
என சொல்லித் தந்த நீ
எப்போது மாறிவிடுவாயோ?
எதிர்வுகூற முடியவில்லை
என்னால் இன்று.

நீ மாற விரும்பினால்
நிலவே ஒரு போதும்
அமாவாசை இல்லாமல்
பௌர்ணமியாய் நிரந்தரம்
ஆகிவிடு நிலவே....

**ஆர்த்திகா சுவேந்திரன்**
தொல்புரம் கிழக்கு.

# கற்றுக்கொடு



துயரச்சிகரங்களில்
தேவதாசனாய்
தொங்கிக் கொண்டிருக்கும்
எனக்குக் கற்றுக்கொடு

காதற் பேயெல்லாம்
வெறும் புரட்டு என்று
வேப்பிலை கொண்டு
அதை விரட்ட எனக்குக் கற்றுக்கொடு

காத்திருத்தல் என்பது
கால விரயம்
ஏற்றுக் கொள்ளுதல் என்பது
இனிக் கடினம்
என்பதை எனக்குக் கற்றுக் கொடு

வானத்துக்கும் பூமிக்கும் இடையில் என்
வாழ்க்கை தொலைவதை
வரைபடம் போட்டுக் கொஞ்சம்
கற்றுக் கொடு.

காதல் தோல்விகள்
வெறும் கருநெல்லிக்கனிதான்
ஆரம்பம் என்பது கசக்கும்
அப்புறம் அதுவே இனிக்கும்

கடைசியாய் ஒருமுறை
கற்றுக் கொடு
என்னையே நான்
காதலிக்க...!

**செந்தமிழ்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

# எங்கே சுதந்திரம்...

எங்கே சுதந்திரம் எம் தமிழ்ப் பூமிக்கு
எப்போ சுதந்திரம் நாட்டுக்குச் சுதந்திரம்
நாற்பத் தெட்டில் நமக்குச் சுதந்திரம்
எந்த மட்டில்

ஏக்கியராஜ்ய, சிங்கள பௌத்தம்,
சிகல உருமய, பேரினவாதம்
தேரவாத பௌத்த லங்கா இதுவே
பேரினவாதிகளின் தாரக மந்திரம்
முள்ளிவாய்க்கால் அழிவு முடிந்த பின்
மஹிந்தவின் 13 பிளஸ் என்ற கூப்பாடு
இப்போ 13உம் இல்லை பிளஷும் இல்லை
அபிவிருத்தியிலேயே அரசியல் தீர்வு

குரக்கன் சால்வை போடாமல்
கோட்டுப் போட்ட கோத்தாவின்
'மொட்டை முழந்தாள் முடிச்சு'
அடித்து உடைக்கப்படும் எம்
தமிழ்ப் பண்பாட்டுத் தலங்கள்
அமைக்கப்படும் புத்தர் சிலைகள்
விகாரைகள் சிங்கள குடியேற்றம்
சிங்கள மயமாக்கப்படும்
எங்கள் அரச அலுவலகங்கள்

வடக்கில் ஒன்றரை லட்சம் படைகள்
வாள்வெட்டு, வன்செயல், வல்லுறவு
இது தான் மொட்டுக்கட்சியின்
முறை கெட்ட அரசியல்
முடங்கிப் போய் இருக்கும்
எம் தமிழ்த் தலைமைகள்
எதுவுமே தர மாட்டோமென
எட்டி உதைக்கும் சிங்களம்

ஏதாவது தருவார்கள் என்று
காலைப் பிடிக்கும் அமைச்சர்கள்
எந்த ஆட்சி வந்தாலும் பேரினவாத
குட்டையில் ஊறிய மட்டைகளே
எங்கள். தமிழ்ப் பூமியெல்லாம்
எல்லைக் கற்களாய்ப் புத்தர் சிலைகள்
இந்த நிலை மாறுமட்டும்
எம் தமிழ்ப் பூமிக்கு ஏது சுதந்திரம்!

**கவிதா ஏறாவூர்**





# அன்பு

அன்பு
எனும் விதை
தரமாக இருந்தால்
நட்பு
எனும் கனிகள்
சுவையாக கிடைக்கும்

உண்மையான அன்புக்கு
முகங்கள் தேவையில்லை
முகவரியும் தேவையில்லை
நம்மை நினைக்கும்
உண்மையான நினைவுகள்
மட்டுமே போதும்

காலங்கள் சிலரை
மறக்க செய்துவிடும்
ஆனால்
ஒரு சிலரின்
அன்பு காலத்தையே
மறக்கச் செய்துவிடும்

உண்மையான
அன்புகள்
நம்மைச் சுற்றி
இருக்கும் போது
நாம் யாரும்
தனி நபர் இல்லை

**ஜீவிதா**



# உன்னை காண தவிக்கின்றேன்!

நீலவானமே
நிறைமதியின் அழகே!
நீலக்கடலின் அமுதே
ஆறாத்த தழுவும் அலையே
நிலவு மகளே!
காலை கதிரின் ஒளிக்கீற்றே
காதல் மொழி பேசும் காற்றே! என்
காதலியே நீ எங்கே!

நீண்டதூரம் உன்னைக் காண
என் பயணங்கள்அந்த
காலைப் பொழுதில்
மெல்ல தலைசாய்த்தேன் என்
மேனி தழுவிய தென்றலில்
உன் முகம்....
காதலியே என்
காதல் கவியே.

காத்திருந்து காத்திருந்து
காலங்கள் போயிற்று
பூத்திருந்த காதல் மலர்என்
கை நழுவிப்போயிற்று
நேற்றிருந்த என் நெஞ்சத்து
அகல் விளக்கு ஒளியற்று
போயிற்று உன்
நினைவுகள் தாங்கிய
உன்னவன் நான்
தவிக்கின்றேன்
உன்னைக் காண என்
காதலியே காதல் மொழியே

கனத்த இதயங்களில் உன்
நினைவுடன்
நிதம் உன்னைக் காண
தவிக்கின்றேன்.

**உருத்திரபுரம் இசை**




## சாதிக்கு எதிரான சாட்டையடி

**நடிகர் : சசிகுமார்**
**நடிகை : அஞ்சலி**
**இயக்குநர் : சமுத்திரகனி**

சமூக அக்கறையுடன் இருக்கும் சசிகுமார், மக்களுக்கு எதிராக நடக்கும் சம்பவங்களுக்கு குரல் கொடுக்கிறார். குறிப்பாக சாதியை கடுமையாக எதிர்க்கிறார். அஞ்சலி, பரணி மற்றும் பெரியவர் ஒருவர் சசிகுமாருக்கு ஆதரவாக செயல்படுகின்றனர். சாதியற்ற இளம் தலைமுறையை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் சசிகுமாருக்கு தான் சார்ந்த சாதியிலிருந்து கடும் எதிர்ப்பு வருகிறது. இதனால் சொந்த தாய்மாமா உட்பட யாரும் பெண் கொடுக்க மறுக்கிறார்கள்.


இவ்வாறு இருக்கையில், தன்னை தேடி வந்து யாராவது பெண் கொடுத்தாலே போதும் என்ற மனநிலையில் இருக்கிறார் சசிகுமார். இந்த சூழலில், சசிகுமார் சாதியைச் சேர்ந்த பெண்ணான அதுல்யா ரவியை அவருக்கு திருமணம் செய்து வைக்கின்றனர். திருமணத்தன்று இரவு சசிகுமாருக்கு அதிர்ச்சி காத்திருக்கிறது. அந்த அதிர்ச்சி என்ன? சாதியற்ற இளம் தலைமுறை என்ற சசிகுமாரின் ஆசை நிறைவேறியதா? என்பதே படத்தின் மீதிக்கதை.

நாயகன் சசிகுமார், நாடோடிகள் முதல் பாகத்தைப் போன்று அதே துறுதுறு நடிப்புடன் வருகிறார். சமுத்திரகனியின் கருத்துகளைப் பேச இவரைவிட யாரும் சரிவர மாட்டார்கள் எனத் தோன்றும் அளவுக்குச் சிறப்பாக நடித்துள்ளார். சசிகுமார்அஞ்சலி இடையேயான காதல் காட்சிகள் ரசிக்க வைக்கின்றன.

செங்கொடி எனும் கதாபாத்திரத்தில் வரும் நாயகி அஞ்சலி, போராட்டத்தில் இறங்கி குரல் கொடுக்கும் தைரியமான பெண்ணாகவும், சசிகுமாருக்கு பக்கபலமாகவும் இருக்கிறார். சசிகுமாருக்கும் இவருக்கும் இடையேயான கெமிஸ்ரி சரிவரப் பொருந்தியிருப்பது படத்துக்குக் கூடுதல் சாதகம். இதேபோல், பரணியின் கதாபாத்திரத்தை யதார்த்தமாக வடிவமைத்துள்ள விதம் சிறப்பு. காதலர்களாக வரும் அதுல்யா ரவி, இசக்கி மற்றும் பொலிஸாக வரும் திருநங்கை நமீதா ஆகியோர் கொடுத்த வேலையை கச்சிதமாக செய்துள்ளனர். சாதி ஒழிப்பு என்பதை மையமாக வைத்து திரைக்கதையை அமைத்துள்ள சமுத்திரகனி, ஒரு விஷயத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, அதைப் பற்றி விரிவாகப் பேசாமல், நாட்டில் நடக்கும் எல்லாப் பிரச்சினைகளையும் படத்தில் புகுத்தியிருக்கின்றமை பின்னடைவாக அமைகிறது.

ஜஸ்டின் பிரபாகரின் இசையில் பாடல்கள் மனதில் பதியவில்லை. இருப்பினும் பின்னணி இசை படத்திற்கு பலம் சேர்க்கின்றது. ஏகாம்பரத்தின் நேர்த்தியான ஒளிப்பதிவில் காட்சிகள் பளிச்சிடுகின்றன. மொத்தத்தில் 'நாடோடிகள் 2' சாதிக்கு எதிரான சாட்டையடி.





# கமல்ஹாசன் புதுஅவதாரம்

ஷங்கர் இயக்கத்தில் இந்தியன் 2 படத்தில் நடித்து வரும் நடிகர் கமல்ஹாசன் புதிய அவதாரம் ஒன்றை எடுத்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் இணைய தொடர் தளத்துக்குள் அடியெடுத்து வைக்கிறார். இதை அவரே அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். 'ஹாஸ்டேஜஸ்', 'ரோர் ஒவ் தி லயன்', 'நச் பலியே' உள்ளிட்ட வெப் சீரிஸ் மற்றும் நிகழ்ச்சிகளைத் தயாரித்திருக்கும் நிறுவனம் பனிஜாய் ஏஷியா.

இந்த நிறுவனம், டர்மரிக் மீடியா என்ற நிறுவனத்துடன் இணைந்து மாநில மொழிகளில் இணையதளங்களுக்கான நிகழ்ச்சிகளை உருவாக்க உள்ளது. இவர்களுடன்தான் நடிகர் கமல்ஹாசன் இணைந்துள்ளார். விரைவில் இந்தக் குழுவுடன் அவர் தயாரிக்க உள்ள வெப் சீரிஸ் பற்றிய அறிவிப்பு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் டுவிட்டரில் இது பற்றிப் பகிர்ந்துள்ள கமல்ஹாசன், 'எடுத்து வரும் முதல் முயற்சிகளில் ஒன்றாக, பனிஜாய் ஏஷியா மற்றும் டர்மரிக் மீடியாவுடன் இணைந்து, நிகழ்ச்சி உருவாக்கும் அற்புதமான உலகத்துக்குள் நுழைவதை அறிவிப்பதில் மகிழ்ச்சி. கதை சொல்வதில் என்றும் நம்பிக்கையுடையவன் நான். மிகப்பெரிய ரசிகர் கூட்டத்துக்கு மிகச்சிறந்த கதைகளை எடுத்துச் செல்வதில் இது அடுத்த அடி' என்று குறிப்பிட்டுள்ளார்.



# காஜலுக்கு மெழுகுச்சிலை

சிங்கப்பூரில் உள்ள மேடம் டுசாட்ஸ் அருங்காட்சியகத்தில் நடிகை காஜல் அகர்வாலின் மெழுகுச் சிலை திறக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் அமைந்துள்ள மேடம் டுசாட்ஸ் அருங்காட்சியகத்தில் உலக அரசியல் தலைவர்கள், ஹொலிவுட் முதல் பொலிவுட் வரையில் பல முன்னணி நட்சத்திரங்கள், விளையாட்டுப் பிரபலங்களின் மெழுகுச்சிலைகள் அமைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். பொலிவுட் நடிகைகளில் மறைந்த நடிகை ஸ்ரீதேவி, ஐஸ்வர்யா ராய், அனுஷ்கா சர்மா, பிரியங்கா சோப்ரா, முன்னணி நடிகர்களான ஷாருக் கான், நடிகர் மகேஷ் பாபு ஆகியோரின் சிலைகளும் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறிருக்கையில் தமிழ், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகையாக வலம் வரும் காஜல் அகர்வாலின் மெழுகுச் சிலையும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் திறக்கப்பட்டுள்ளது.

நடிகை காஜல் அகர்வாலே, அவரது மெழுகு சிலையை திறந்து வைத்தார். காஜல் அகர்வாலின் மெழுகுச் சிலை புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

# தரம் ஐந்து மாணவர்களின் இன்றைய கற்றல் போக்கு!



பொ.யந்துஜா,
இரண்டாம் வருட மாணவி,
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக் கழகம்

இலங்கையைப் பொறுத்தவரையில் கல்வி கற்கும் மாணவர்களின் கற்றலை வலுப்படுத்தும் நோக்கிலே இலங்கை அரசானது கலைத்திட்டத்தினை வகுக்கின்றது. இந்தக் கலைத்திட்டமானது பல்வேறு தேவைகளின் அடிப்படையிலும், நோக்கங்களின் அடிப்படையிலுமே மாணவர்களுக்கு கிடைக்கின்றது என்பது நாம் அனைவரும் உணர்ந்த விடயமே. அந்தவகையில் கலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பப் பிரிவு, இடைநிலைப் பிரிவு, கனிஷ்ட பிரிவு எனும் வகையில் வகுக்கப்பட்டுள்ளன,

இங்கு ஆரம்பப் பிரிவுக்குள் உள்ளடங்கும் தரம் ஐந்து மாணவர்களுக்குப் பல்வேறு அடிப்படையிலும் கல்வியானது புகட்டப்படுகின்றது. இந்தக் கல்வியானது ஆரம்பத்தில் மாணவர்களின் கற்றல் தேர்ச்சிகளை வலுப்படுத்தும் நோக்கிலே வழங்கப்பட்டது. ஆனால் தற்காலத்தில் ஏன் இன்றைய நாளில் பெற்றோர்களின் கௌரவத்திற்காகவும், கற்பிக்கும் ஆசிரியர்களின் போட்டித் தன்மைக்காகவும், பாடசாலையின் வலுவை உறுதிப்படுத்துவதற்காகவும் மாத்திரமே கல்வியானது புகட்டப்படுகின்றது என்றால் அது மிகையாகாது.

### சுமையாகும் கல்வி

தரம் ஐந்து மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி குறிப்பிட்டளவு கற்றல் தேர்ச்சியினை வலுப்படுத்தும் நோக்கில் கற்பிக்கப்பட்டாலும் தற்காலத்தில் அது ஒரு சுமையாகவே எண்ணிக்கொள்ளத் தூண்டுகின்றது. தரம் ஐந்து புலமைப்பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களில் குறைவான எண்ணிக்கையினரே உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழகம் செல்கின்றனர். காரணம் கல்வியானது தரம் ஐந்தில் திணிக்கப்படுவது போல் தரம் ஆறில் கற்பிக்கப்படுவதில்லை.

இவ்வடிப்படையில் பார்த்தால் பத்து வயதினை உடைய பிள்ளைகளுக்கு போதிக்கப்படும் கல்வியின் வேகத்தினை அறியக்கூடியதாக உள்ளது.

தரம் ஐந்தில் புகட்டப்படும் கல்வியைப்போல் அடுத்து வரும் தரங்களில் கல்வியானது புகட்டப்படும் வீதம் குறைவாக இருப்பதனால் மாணவர்களின் இடைநிலைக் கல்வியானது வற்றிப்போவதற்கான வாய்ப்பானது அங்கு தோன்றுகின்றது. உளவியலாளர்களின் கருத்துப்படி பத்து வயது பிள்ளைகள் விளையாட்டிலும், கல்வியிலும் சரிசமனாகவே ஈடுபடுதல் வேண்டும்.

ஆனால் இங்கு தரம் ஐந்து மாணவர்கள் என்றாலே விளையாட்டுக்கு இடமில்லை. இதனால்தான் என்னவோ இந்த மாணவர்களுக்கு இந்தக் கல்வி ஏற்புடையதுதானா என்றும் எண்ணத் தோன்றுகின்றது. இந்த் மாணவர்களைப் பார்த்தால் எந்நேரமும் பாடசாலையிலும், தனியார் வகுப்புச்சூழலிலுமே காணக்கூடியதாகவே இருக்கின்றது. ஆனால் ஒரு மாணவன் தனது கற்றலினை பாடசாலைச் சூழலில் இருந்து மாத்திரம் பெற்றுக்கொள்வது சாத்தியமற்றதொரு விடயமாகும். மாறாக பல்வேறு சூழல்களில் பல்வேறு விதமான கற்றலையே பெற்றுக் கொள்கின்றான் என்பதே மெய்.

### ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது

தரம் ஐந்து மாணவர்களுக்கு பாடசாலையிலும் சரி, தனியார் வகுப்புக்களிலும் சரி வெறும் புத்தகப்பாடமே புகட்டப்படுகின்றது. மாறாக செய்முறைப் பயிற்சிகள் அதாவது பரிசோதனையுடன் கூடிய கற்றல் முறையானது பெரியளவில் கற்பிக்கப்படுவதில்லை. இன்றைய நிலையில் ஒரு மாணவன் எவ்வளவு மனனம் செய்து படிக்கின்றானோ அதைவிட பரிசோதனை செய்து சுயகற்றல் மூலமே அதிகமான விடயங்களை உள்வாங்குகின்றான் என பல ஆய்வுகள் கூறுகின்றன. இவ்வாறிருக்கையில் வெறும் புத்தகப்படிப்பானது எவ்வகையில் நினைவிலிருக்கும் என்பது வினாவாகக் காணப்படுகின்றது.

மாணவர்களுக்கு இந்த குறிப்பிட்ட வயதினிலே தாய்ப்பாசம் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் அரவணைப்பு என்பது அத்தியாவசிய தேவையானதொன்றாக காணப்பட்ட பொழுதும் தரம் ஐந்து மாணவர்களுக்கு இது சாத்தியமற்றதொரு செயன்முறை ஆகும்.

காரணம் இம் மாணவர்கள் தங்களது வீடுகளில் இருப்பதற்கே நேரம் போதவில்லை என்பதே உண்மையாகும். இவ்வடிப்படையில் தங்களது பிள்ளை கட்டாயம் பரீட்சையில் சித்திபெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எவ்வகையில் சரியானது? அதுமட்டுமன்றி பரீட்சையில் சித்திபெறாத மாணவர்களின் நிலைகளைப் பார்த்தால் பெரும்பாலானவர்கள் சிறுவயதிலேயே உளரீதியாக பாதிக்கப்பட்டிருக்கின்றமை மட்டுமன்றி பலர் ஏமாற்றங்களுக்கும் உள்ளாகி இருக்கின்றமையையும் அவதானிக்க முடிகின்றது. இவ்வண்ணம் சற்று நோக்கினால் இவ்வளவு சிக்கல்களையும் தாண்டி பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை தற்பொழுது அதிகமாகக் காணப்படுகின்றமை மேற்கூறிய சில கருத்துக்களையும் தகர்த்து எறியவும் செய்கின்றது.

எது எவ்வாறு இருப்பினும் இலங்கையின் எழுத்தறிவு வீதமானது 98 வீதமாகக் காணப்படுவதற்கு இந்த தரம் ஐந்து மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வியும், அதன் வெற்றியும் ஒரு வகையில் காரணமாக இருந்தாலும் இது பயனற்றதே. சர்வதேச அடிப்படையிலும், ஆசிய அடிப்படையிலும் தொழில்நுட்ப அறிவில் இலங்கை பின்னடைவே கண்டுவருகின்றது என்பது யாவரும் அறிந்த விடயமே. அந்த வகையில் தரம் ஐந்துக்கு வழங்கப்படுகின்ற கல்வி மாணவர்களுக்கு ஒரு சுமையாக இல்லாத வண்ணமும், வாழ்க்கைக்கு அவசியமான தொழிற்கல்வியாகவும் இருந்தால் அது போற்றுதற்குரிய விடயமாகும்.





**தரம் ஐந்து மாணவர்களுக்கு பாடசாலையிலும் சரி, தனியார் வகுப்புக்களிலும் சரி வெறும் புத்தகப்பாடமே புகட்டப்படுகின்றது. மாறாக செய்முறைப் பயிற்சிகள் அதாவது பரிசோதனையுடன் கூடிய கற்றல் முறையானது பெரியளவில் கற்பிக்கப்படுவதில்லை.**

## என்னையும் காப்பாற்று!


மனையமைக்க வந்தவூர்தி
என் காணியில் தஞ்சம்கொண்ட
தாவரங்கள் மீதும் தன் வீரத்தை
காட்டிச் சென்றது

என்னைக் காப்பாற்றென்ற
ஓலக்குரல் கேட்டதிசை
நாடிச்சென்று பார்த்தபோது
பாக்குமரக் கன்றொன்று
படுக்கையில் துவழ்ந்தது
பக்குவமாய் அதற்கு உயிரூட்ட
மஞ்சல் பூங்கன்றொன்று
வாடியென் உதவிநாட
பாக்கோர் கையில்
மஞ்சல் பூக்கன்று மறுகையில்
மூச்சை முட்டியது
முள்ளிவாய்க்கால் நினைவுகள்

கையிழந்த பெண்ணின்
'காப்பாற்றுங்கள்'என்ற ஓலக்குரலும்
வலுவிழந்த முதியவரின் முனகலொலியும்
பாலுக்கழுத தாழிந்த குழந்தையின்
அழுகுரலும்
என் செவிகளில் மீண்டு மொலித்தன

கரைபுரண்ட கண்ணீரில்
நிரம்பியிருந்தது கண்கள்
கடந்தகாலக் கசப்புக்களை
உமிழ்ந்தபடி

மஞ்சல் பூக்கன்றை
உற்றுப் பார்க்கையில்
என் கண்ணீரில் நனைந்த
மொட்டொன்று மலர்ந்திருந்தது
மறுகணம் கொடிய
நினைவுகள் விலகிட
மனமும் மெல்ல மலர்ந்தது



**வேலணையூர்**
**யோ.தாட்சா**

## மேடம்

பெரும்பான்மை கிரகங்களால் அளப்பரிய நற்பலன் கிடைக்கும். கருணை நிறைந்த மனதுடன் பணிபுரிவீர்கள். வாழ்வியல் நடைமுறை சிறப்பாகும். குடும்பத்தில் சுப நிகழ்வு ஏற்படும். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்தி ருக்கும். வாகனத்தில் சில நல்ல மாற்றத்தைச் செய்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். பிள்ளைகளுக்கு நல்வழி காட்டி மகிழ்ச்சி அடைய வைப்பீர்கள். மனைவியின் ஆலோசனை நன்மை தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பம் அறிந்து சிறப்பாகப் பணிபுரிவர். மாணவர்கள் படிப்பில் அதிக மதிப்பெண் பெறுவர்.

## இடபம்

புதன், சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். செயல்களில் கூடுதல் நேர்த்தி உருவாகும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வீடு, வாகனத்தில் தகுந்த பாதுகாப்பு வேண்டும். பிள்ளைகள் நேர்மறை எண்ணங்களுடன் செயல்பட்டு படிப்பு, வேலையில் முன்னேறுவர். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவியின் நற்செயல்களை முழுமனதுடன் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகி முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் அக்கறையுடன் படித்து நல்ல மதிப்பெண் பெறுவர்.

## மிதுனம்

செவ்வாய், குரு, சந்திரனால் கூடுதல் நற்பலன் கிடைக்கும். பணிகளை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். பேச்சில் ஆன்மிக கருத்து வெளிப்படும். உறவினர்களை சந்தித்து மகிழ்ச்சிகளை பகிர்வீர்கள். வாகனத்தில் மித வேகத்தை பின்பற்றவும். பிள்ளைகளின் வளர்ச்சிக்கான செயல்களில் ஈடுபடுவீர்கள். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். வெளியூர் பயணத்தில் பாதுகாப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி அபரிமிதமான வளர்ச்சி காணப்படும். மாணவர்கள் படிப்பில் புதிய இலக்கை எட்டுவர்.

## கடகம்

கேது, சனீஸ்வரர், புதன், சுக்கிரனால் அளப்பரிய நன்மை சேரும். உற்சாக மனதுடன் செயல்பட்டு நண்பர், உறவினரின் பாராட்டை பெறுவீர். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். வெளியூர் பயணங்கள் இனிய அனுபவம் தரும். பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல்கள் நிறைவேற உதவுவீர்கள். எதிரியால் உருவான தொந்தரவு மறையும். நோய், தொந்தரவு குறையும். மனைவி வழி உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபர்ரத்தில் அபரா வளர்ச்சி ஏற்படும். பணியாளர்களுக்கு பண வரவில் முன்னேற்றம் உண்டு. பெண்கள் வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்கி மகிழ்வர்.

## சிம்மம்

சூரியன், குரு, சுக்கிரன், ராகு, சந்திரன் ஆதாய பலன் தருவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். சமூகநலப்பணியில் ஈடுபடுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்கு தேவையான செயல்களை செய்வீர்கள். பூர்வ சொத்தை பராமரிக்க கூடுதல் பணம் செலவாகும். அறிவுப்பூர்வ செயலால் பகைவரையும் வியக்கச் செய்வீர்கள். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். இன்பச் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாய பணவரவு உண்டு. பணியாளர்களின் சிறப்பான பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

## கன்னி

செவ்வாய், புதன், சந்திரன் கூடுதல் நற்பலன் தருவர். செயல்களில் நிதானம் காணப்படும். குடும்பத் தேவை அதிகரிக்கும். வீடு, வாகனத்தில் அறிமுகமில்லாதவருக்கு இடம் தர வேண்டாம். பிள்ளைகளின் செயல்களை மேம்படுத்துவது நல்லது. பணப்பரிவர்த்தனையில் தகுந்த பாதுகாப்பை பின்பற்றவும். மனைவியின் ஆர்வம் மிகுந்த செயலில் சிறு குளறுபடி ஏற்படலாம். அரசாங்க உதவி கிடைப்பதில் தாமதம் ஆகலாம். கடன் பெறுவதில் நிதானம் வேண்டும். பணியாளர்கள் பொறுப்புடன் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும்.

# இந்த வார ராசிபலன்

**09.02.2020 முதல் 15.02.2020 வரை**

## துலாம்

கேது, சனீஸ்வரர், சந்திரனால் நன்மை ஏற்படும். சமூக நிகழ்வு மனதில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தலாம். செயல்களில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதமாகலாம். வெளியூர் பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகளின் குழப்பமான சிந்தனையை போக்க உரிய ஆலோசனையை வழங்குவீர்கள். நேரத்திற்கு உணவு உண்பதால் உடல் ஆரோக்கியம் சீராகும். ஆடம்பரச் செலவை தவிர்க்கவும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பை ஏற்றுக்கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## விருச்சிகம்

குரு, சுக்கிரன், சூரியன், புதன் ராஜயோக பலன் தருவர். மனதில் தெளிவு பிறக்கும். பேச்சு, செயலில் வசீகரம் வெளிப்படும். உங்களின் செயல்கள் நண்பர்களால் பாராட்டை பெறும். உடன்பிறந்தவர்களுக்கு தக்க சமயத்தில் உதவி செய்வீர்கள். குடும்பத்திற்கான செலவில் தாராளம் இருக்கும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்கேட்டு நடப்பர். உடல் நலனில் அக்கறை தேவை. மனைவியுடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து பணசேமிப்பு கூடும். பணியாளர்கள் சூழல் உணர்ந்து சிறப்பாக பணிபுரிவர். மாணவர்கள் நண்பர் உதவியால் படிப்பில் நல்ல முன்னேற்றம் காண்பர்.

## தனுசு

சந்திரன், சுக்கிரனால் நன்மை உண்டாகும். பணம் கொடுக்கல், வாங்கலில் நிதானம் தேவை. வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளின் எண்ணங்களை புரிந்து கொண்டு நடப்பீர்கள். சத்தான உணவு, சீரான ஓய்வு உடல் நலத்தை பாதுகாக்கும். பகைமை குணம் உள்ளவரிடம் விலகுவதால் மன அமைதியை பெறலாம். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், அதிக உழைப்பு கூடுதல் வளர்ச்சி தரும். பணியாளர்கள் பணியிடச் சூழல் உணர்ந்து பணி புரிந்தால் நல்லது.

## மகரம்


செவ்வாய், சுக்கிரன், ராகு, சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி உரிய நேரத்தில் கிடைக்கும். உடன்பிறந்தவரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். வெளியூர் பயணம் இனிய அனுபவத்தை தரும். பிள்ளைகளின் செயலில் நல்ல முன்னேற்றம் காணப்படும். வழக்கு, விவகாரத்தில் சமரசத் தீர்வை எளிதாக பெறலாம். நிலுவைத் தொகை இதமான அணுகுமுறையால் வசூலாகும். மனைவியின் ஆர்வமிகு செயல் குளறுபடியாகலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றி பாராட்டு பெறுவர்.

## கும்பம்

குரு, சனீஸ்வரர், கேது, சுக்கிரனால் தாராள நன்மை கிடைக்கும். புதிய யுக்தியுடன் செயற்பட்டு பணிகளை எளிதாக முடிப்பீர்கள். சமூக நிகழ்வு மனதில் நல்ல மாற்றத்தை தரும். தாயின் அன்பு, பாசம் கிடைக்கும். வெளியூர் பயணம் அளவுடன் இருக்கும். பிள்ளைகளின் மனக்குறையை சரி செய்வீர் கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயல் குடும்ப நலனுக்கு பெரிதும் உதவும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி, பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்புடன் கலை களையும் ஆர்வமுடன் பயில்வர்.

## மீனம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். பணிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். சத்தான உணவு உண்டு உடல் ஆரோக்கியத்தை பாதுகாப்பீர்கள். பகையாளியிடம் விலகுவதால் மன அமைதியை பாதுகாக்கலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். கூடுதல் உழைப்பினால் பொருளாதாரம் அதிகரிக்கும். பணியாளர் குறிப்பிட்ட கால அவகாசத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் நகை கடன் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் புதிய முயற்சியால் படிப்பில் வெற்றி காண்பர்.



## யோகா செய்வதால் இவ்வளவு நன்மைகளா?

நமது முன்னோர்கள் நமக்கு விட்டுச் சென்ற வைகளில் முக்கியமான பாரம்பரியமான ஒரு கலை யோகா. சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே யோகா கலை இருந்து வருகிறது. யோகா, உடலையும், மனதையும் கட்டுக்கோப் பாக வைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.
யோகாவில் மூச்சுப்பயிற்சியே அடிப்படையாக இருப்பதால் சுவாசம் சீராக இருக்கும். இதன் மூலம் உங்களது ஆயுள் காலமும் நீடிக்கும். நீண்ட நாள்கள் நல்ல உடல்நலத்துடன் ஆரோக் கியத்துடன் இருக்கலாம்.
யோகா தினமும் தவறாமல் செய்யும் போது நம் மிடம் உள்ள எதிர்மறை எண்ணங்கள் நம்மை விட்டு ஓடிவிடும். கோபம், பொறாமை, பேராசை உள்ளிட்ட கெட்ட எண்ணங்கள் நம்மை விட்டு அகலும்.

# கருமையாக உள்ள சருமத்தை வெள்ளையாக்க அழகு குறிப்புகள்



ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாற்றுடன் 1 தேக்க ரண்டி தேன் சேர்த்து கலந்து முகத்தில் தடவி உலர வைத்து கழுவவேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால் நல்ல மாற்றத்தைக் காணமுடியும்.
பாலில் சில துளிகள் எலுமிச்சை சாற்றினை விட்டு நன்கு கலந்து அந்த கலவையை முகத்தில் மற்றும் கருமையாக உள்ள இடங்களில் தடவி உலரவைத்து கழுவவேண்டும். இவ்வாறு செய்து வந்தால் சருமம் வெள்ளையாக மாறும்.
எலுமிச்சை சாற்றுடன் ஒரு முட்டையின் வெள்ளைக் கருவை சேர்த்து கலந்து முகத்தில் தடவி உலர வைத்து பின் கழுவ வேண்டும். இப்படி 4 நாள்களுக்கு ஒரு முறை மாஸ்க் போட்டால் சருமத்தில் உள்ள கருமை நீங்கி சருமம் வெள்ளையாவதைக் காணலாம்.
எலுமிச்சையை பாதியாக வெட்டி அதனை சாறு எடுத்து அதில் சிறிது தண்ணீர் சேர்த்து பின் அதனை முகம் மற்றும் கழுத்தில் தடவி 10 நிமிடம் ஊற வைத்து பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இப் படி தினமும் செய்து வந்தால் சருமத்தில் உள்ள கருமையானது நீங்கிவிடும்.
எலுமிச்சை சாற்றில் தயிர் சிறிது சேர்த்து கலந்து முகத்தில் தடவி உலர வைத்து கழுவவேண்டும். இப் படி வாரம் ஒருமுறை முகத்திற்கு மாஸ்க் போட்டால், நல்ல மாற்றத்தைக் காணலாம். ஒலிவ் ஒயிலுடன் எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து முகத்தில் தடவி வந்தால், சருமத்தின் நிறம் அதிகரிப்பதோடு சருமத்தில் உள்ள தேவையற்ற தழும்புகளும் மறைந்துவிடும்.

# செம்பருத்தியின் அற்புத குணாங்கள்

செம்பருத்தி பூவின் சாற்றுடன் சம அளவு தேங்காய் எண்ணெய் சேர்த்து சட்டியில் இட்டு காய்ச்சி, வடி கட்டி, கண்ணாடி போத்தல்களில் பத்திரப்படுத்த வேண்டும். இந்த எண்ணெயை தினமும் தடவி வர தலை முடி கறுத்து அடர்த் தியாக வளரும்.
மாதவிடாய் காலத்தில் அதிகமாக உண்டாகும் குருதி பெருக்கிற்கு பத்து செம்பருத்தி பூவின் இதழ்களை நெய் யில் வதக்கி சாப்பிட வேண்டும். செம்பருத்தி பூ இதழின் வடிசாறு சிறுநீர் கழிக்கும் பொழுது உண்டாகும் எரிச்சலை நீக்கும். நீர் சுருக்கை போக்கி சிறுநீரை பெருக்கி நஞ்சுகளை வெளியேற்றும். இனப்பெருக்க உறுப்பு நோய்க ளுக்கும் இது மருந்தாகின்றது. செம்பருத்தி பூ இதய நோய் அணுகாமல் தடுக் கும் அற்புதமான டானிக்.



செம்பருத்தி பூவைப் பசுமையாகவோ, காய வைத்து பொடி செய்தோ வைத்துக் கொண்டு, பாலில் கலந்து காலை, மாலை வேளைகளில் குடித்து வர இதய பல வீனம் தீரும்.
உடல் சூடு காரணமாக பலருக்கு வாய்ப் புண், வயிற்றுப் புண் உண்டாகும். அவர்கள் தினம் 10 பூவின் இதழ்களை மென்று சாப்பிட்டால் புண்கள் ஆறும். ஒரு மாதகாலம் தொடர்ந்து சாப்பிட்டு வரவேண்டும்.
செம்பருத்தி பூ குளிர்ச்சி பொருந்தியது. சருமத்திற்கு இத மும், சுகமும் அளித்து ரத்தத்தை சுத்தம் செய்து உடலை பளபளப்பாக்கும்.



## தக்காளி குழம்பு

**தேவையான பொருள்கள்**


எண்ணெய் - 4 தேக்கரண்டி
கறுவா- 1 துண்டு
கடுகு - 1/2 தேக்கரண்டி
உளுந்தம்பருப்பு - 1/4 தேக்கரண்டி
வெங்காயம் - 2
தக்காளி - 4
பூண்டு - 5 பல்
மிளகாய்த்தூள் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு
சீரகத்தூள் - 1 தேக்கரண்டி
மல்லித்தூள் - 1/2தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி
கொத்தமல்லி - சிறிதளவு

**தக்காளி குழம்பு செய்முறை**

ஒரு சட்டியில் எண்ணெய் ஊற்றி அது சூடானதும் பட்டை சேர்த்து அதனுடன் கடுகு, உளுந்தம்பருப்பு மற்றும் வெங் காயம் சேர்த்து நன்றாக வதக்கிக் கொள்ளவும்.
பிறகு நன்றாக் வதங்கியதும் அதனு டன் பச்சைமிளகாய் சேர்த்து மீண்டும் வதக்கவும்.
பிறகு, நறுக்கிய தக்காளி மற்றும் இடித்த பூண்டு சேர்த்து அதனுடன் மிள காய்த்தூள் சேர்த்து மீண்டும் நன்றாக வதக்கவும். பிறகு உப்பு, சீரகத்தூள், மல்லித்தூள் மற்றும் மஞ்சள்தூள் சேர்த்து தண்ணீர் ஊற்றி நன்றாக கொதிக்க விடவும்.
ஒரு 15 நிமிடம் வரை நன்றாக கொதிக்க விட்டு இறக்கினால் சுவையான தக் காளி குழம்பு தயார்.

# செவ்வாழை

செவ்வாழையில் அதிக அளவு நார்ச்சத்து, பொட்டா சியம், விற்றமின் ஏ, புரதம் ஆண்டி ஆக்ஸிடண்ட்ஸ், போன்ற பலவித சத்துக்கள் நிறைந்துள்ளன. ஒரு செவ்வாழை பழத்தில் 4 கிராம் அளவுக்கு நார்ச்சத்து உள்ளது. இது உங்கள் உடலிற்கு முக்கிய தேவை யான கரையும் நார்ச்சத்து ஆகும்.
செவ்வாழையில் அதிக அளவில் பொட்டாசியம் சத் துக்கள் நிறைந்துள்ளன. பொட்டாசியம் உங்க ளுக்கு சிறுநீரக கற்கள், இரத்த அழுத்தம், இருதய நோய், புற்று நோய் போன்ற பிரச்சினைகள் ஏற்ப டாமல் தடுக்கும்.
தினமும் ஒரு செவ்வாழை பழம் உண்டு வருபவர்க ளுக்கு இரத்த அழுத்தம், சிறுநீரக கற்கள் போன்ற பிரச்சினை வராமல் தடுக்கும். நமது சருமம், முடி, மூட்டு மற்றும் உடலின் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியம் வாய்ந்தது. ஒரு செவ்வாயில் தினமும் தேவையான அளவில் 16% விற்றமின் சி நிறைந் துள்ளது.
செவ்வாழையில் இரத்த உற்பத்திக்கு தேவையான இரும்புச்சத்து, விற்றமின் சி, பொட்டாசியம் போன்ற முக்கிய சத்துக்கள் உள்ளது. தினமும் ஒரு செவ் வாழை பழத்தினை உண்டு வந்தால் உங்களுக்கு இரத்த சோகை, இரத்த குறைபாடு போன்ற பிரச்சி னைகள் ஏற்படாமல் தடுக்கும்.
தினமும் ஒரு செவ்வாழை பழத்தினை உண்டு வந் தால் உங்களுக்கு இளமையான மற்றும் மின்னும் சருமம் கிடைக்கும். ஏனெனில் இதில் விற்றமின் சி, ஆன்டிஆக்ஸிடண்ட்ஸ் போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன.
செவ்வாழையில் அதிக அள வில் விற்றமின் ஏ சத்துக்கள் நிறைந்துள்ளது. இதனை நீங்கள் உண்டுவந்தால் உங்களின் கண் ஆரோக்கி யம் மேம்படும். மேலும் உங்க ளுக்கு பார்வை கோளாறு ஏற் படாமல் தடுத்து கண்பார்வைத் திறனை அதிகரிக்கும்.




வாழை பழத்திற்கு உண்டவுடன் உடலிற்கு உடனடி சக்தி அளிக்கக்கூடிய தன்மை உண்டு. விளையாட்டு வீரர்கள், உடல் உழைப்பு உள் ளவர்கள் மற்றும் உடற்பயிற்சி செய்பவர்கள் தினமும் ஒரு செவ்வாழை பழத்தை உண்டு தங்களின் வேலைதொடர்ந்தால் அவர்களின் செயல்திறன் அதிகரிக்கும்.



# நித்திய சுகம் 456

உடலே கோயில்





# நம் கைக்கு எட்டியவை வாய்க்கும் எட்ட வேண்டும்

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது போசனையான உணவு. இயற்கையின் மூலவளங்களைப் பயன்படுத்தி அதனோடு இணைந்து செய்யும் தொழில் தான் விவசாயம். எமக்கு சிறந்த போசனையைத் தருவது இந்த விவசாய உற்பத்திப் பொருள்களே. எங்கள் வீட்டுத்தோட்டங்களாலும் சேதன விவசாய முறைகளாலும் நாம் போசணையான உணவுப்பொருள்களை பெற்றுக் கொள்கின்றோம். இது தவிரவும் எமது நாட்டு சீதோவ்ண நிலையும் எமக்கு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது. ஆகவே எமது சுற்றாடலில் இயல்பாகவே கிடைக்கும் கீரை வகைகளின் எண்ணிக்கையோ சொல்லில் அடங்காது.

எமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உடலுக்குப் பெற்றுக்கொள்ள எமது நாளாந்த உணவில் கீரைவகை களைச் சேர்த்துக்கொள்வது அத்தியாவசியம். தோட்டங்களிலும் வயல்களிலும், வேலிகளிலும் படர்ந்து வரும் கீரை வகைகள் பல. முடக்கொத்தான் முசுட்டை, கொவ்வை, தூதுவளை, முசுமுசுக்கை, சாரணை, பயிரி, பசளி, பணங்கீரை, குப்பைமேனி, தேங்காய்ப்பூக்கீரை என பலவகை உண்டு. அது தவிர மழைக் காலங்களிலும் பயமில்லாது உண்ணக் கூடிய அகத்தி, முருங்கை, சண்டி, அம்பெரெல்லா போன்ற இலைவகைகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

பயனுள்ள கீரை வகைகளை நாம் தேர்ந்தெடுத்துச் சமைத்தாலும் வளரும் பிள்ளைகள் அவற்றை உண்ணாது ஒதுக்கிவிடலாம். ஆகவே அவர்களும் விரும்பி உட்கொள்ளும் வகையில் பச்சையாக சாப்பாட்டில் சேர்க்கலாம். பச்சைமிளகாய் சம்பல் அரைக்கும்போது இரண்டு கைப்பிடி கீரை, அல்லது வல்லாரை, கறிவேப்பிலை, தூதுவளை, மணித்தக்காளி போன்றவற்றைச் சேர்த்து அரைக்கலாம். கீரையை அரிந்த பச்சை மிளகாய், சின்ன வெங்காயம் சேர்த்து பிட்டுடன் அவிக்கலாம். இடியப்பப் பிரட்டல் செய்யும் போது லீக்ஸ் சேர்ப்பதுபோல் அரிந்த கீரையை சேர்க்கலாம். கரைத்து வைத்து இருக்கும் தோசை மாவுடன் கலந்து சுட்டெடுக்கலாம். இவற்றை சுவையான கறியுடன் சேர்த்து சாப்பிடும்போது சிறு பிள்ளைகள் இது கீரை என ஒதுக்கி விடமாட்டார்கள். ஆகவே சமையலில் சத்தான உணவுகளை சமைக்கும்போது அதனைச் சுவையாகவும் விரும்பி உண்ணக்கூடிய வகையிலும் தயாரிக்க வேண்டும். மிளகு சீரகத்தூள், வெந்தயம் பெருஞ்சீரகத்தூள், கறுவா, கராம்பு, ஏலம் என இயற்கையான மணமூட்டிகள், சுவையூட்டிகள் சேர்த்து சமைத்தல் சாலச் சிறந்தது.

## போசணைக் குறிப்பு

நாம் உண்ணும் உணவு வகைகளில் காணப்படும் இரும்புச் சத்து, உடலில் அகத்துறிஞ்சப்பட, விற்றமின் 'சி' அவசியம். ஆகவே கீரை வகைகள் சமைத்த பின் விற்றமின் சி நிறைந்த தேசிப்புளி சேர்ப்பது அத்தியாவசியம். கொதிக்கும் கறிவகைகளுக்கு தேசிப்புளி சேர்த்தால் அதில்காணப்படும் விற்றமின் 'சி' அழிந்துவிடும்.

## கொவ்வை

இயல்பாகவே வேலிகளில் படரும் கொவ்வை அதிக சத்து நிறைந்தது. மருத்துவ பலன் உடையது. விற்றமின் 'பி, சி' போன்ற உயிர்ச்சத்துக்கள், இரும்பு, கல்சியம், பொட்டாசியம் போன்ற கனியுப்புக்களும் காணப்படுகின்றன. கொவ்வைக்காய், கொவ்வை இலை குறிப்பாக நீரிழிவு அதிக எடை மற்றும் சமிபாட்டுச் சிக்கல்களுக்கும் சிறுநீரகக் கல் போன்ற நோய்களுக்கும் தீர்வாக அமைகிறது. அந்த வகையில் இன்று நாம் கொவ்வை இலையின் சமையல் முறை ஒன்றைப் பார்ப்போம்.


## கொவ்வை இலைச் சுண்டல்

### தேவையான பொருள்கள்

கொவ்வை இலை - 5 கைப்பிடி
பச்சை மிளகாய் 2-3
சின்னவெங்காயம் - 5-6
தேங்காய்ப் பூ - அரை கோப்பை
தேசிப்புளி, உப்பு - அளவாக

### செய்முறை

கொவ்வை இலைகளை ஒடித்து நன்கு அலசி கழுவி எடுக்கவும். கொவ்வை இலை, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் குறுணலாக அரிந்து கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் அரிந்த கொவ்வை இலை, பச்சை மிளகாய், வெங்காயம், தேங்காய்ப்பூ, அளவாக உப்புச் சேர்த்து நன்கு கலந்து எடுக்கவும்.



தாச்சி சட்டியை (மண் சட்டி விசேடமானது) அடுப்பில் வைத்து சூடாக்கவும் பாத்திரம் சூடான பின்பு கொவ்வை இலைக் கலவையை கொட்டி அகப்பை காம்பால் கிளறவேண்டும். இலையிலுள்ள நீரும், உப்பும் சேர்ந்து அவிந்து வரும். சுண்டல் நன்கு அவிந்து ஒரு சுண்டல் பதமாக வரும்போது பாத்திரத்தை அடுப்பில் இருந்து இறக்கி உப்பு சுவை பார்த்து தேசிப்புளி சேர்க்கவும். இந்தக் கீரைச் சுண்டலை சுடு சோற்றுக்கு மட்டுமல்லாது பிட்டுடனும் சாப்பிடலாம். கரைத்து வைத்த தோசைமாவுடன் சேர்த்து சுட்டு எடுக்கலாம். கீரைச் சுண்டல் வகைகளை சமைக்கும்போது அதிக நீர்விட்டு அவியவிடாது வெறும் சட்டியில் போட்டுச் சூடாக்க வேண்டும்.

**நாம் உண்ணும் உணவு வகைகளில் காணப்படும் இரும்புச் சத்து. உடலில் அகத்துறிஞ்சப்பட. விற்றமின் சி அவசியம். ஆகவே கீரை வகைகள் சமைத்த பின் விற்றமின் 'சி' நிறைந்த தேசிப்புளி சேர்ப்பது அத்தியாவ சியம். கொக்கும் கறி வகைகளுக்கு தேசிப்புளி சேர்த்தால் அதில் காணப்படும் விற்றமின் 'சி' அழிந்துவிடும்.**

# இறையடியார் தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்துக்காக செபியுங்கள்!

## யாழ் ஆயர் அழைப்பு

அருள்திரு ஜுபன் மரியாம்பிள்ளை
*ஊடக வருகை விரிவுரையாளர்,*
*இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*



இலங்கை மண்ணில் உருவான ஒரே ஒரு துறவற சபை என்ற பெயருடனும் பெருமையுடனும் தோலகட்டியில் உருவாகி 92 ஆண்டுகளை (1928 2020) நிறைவு செய்கிறது செபமாலைத்தாசர் துறவறசபை. இச்சபையின் நிறுவுநர் இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர்பட்ட நிகழ்வுகளின் அண்மைக்கால செயற்பாடுகள் பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

செபமாலைத்தாசர் சபையின் மாகாண முதல்வராக மூன்று தடவைகள் பணியாற்றியவரும் செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவராக 2006 முதல் 2012 வரை பணியாற்றியவருமான ஏ.எம்.ஸ்ரீபன் அடிகளார் இவ்வாக்கத்திற்கான தகவல்களை வழங்கினார்.

26 ஜனவரி 2020 அன்று இறையடியார் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் இறப்பின் 56ஆவது ஆண்டு நிறைவு தினமாகும். இந்தத் தினத்தோடு பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் எப்போது நிகழும் என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஒருநல்லசெய்திகிடைத்துள்ளது.

18 ஜனவரி 2020 அன்று யாழ் ஆயர் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் பி.ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர்பட்ட நிகழ்வு பற்றிய விடயங்களை முடிவிற்கு கொண்டு வரும் கூட்டம் ஒன்று யாழ் ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் முக்கிய பிரமுகராக உரோமாபுரியில் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான வியடங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் றோலண் அடிகளார் கலந்து கொண்டார். மேற்படி கூட்டத்தில் இலங்கையில் பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டம் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக செயற்படும் ஏ.ஸ்ரீபன் அடிகளாரும் கலந்து கொண்டார். மேற்படி கூட்டத்திலேயே யாழ் ஆயர் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பி.ஏ.தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்காக யாழ் மறைமாவட்டத்தில் செபிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

மேலும் இக்கூட்டத்தில் ஆயரின் பதிலாளியாக திருச்சபை சட்டவியலாளர் கலாநிதி கிருபாகரன் அடிகளார், வரலாற்றுக் குழுவின் தலைவராக எஸ்.வி.பி.மங்களராஜா அடிகளார், குழு உறுப்பினர்களாக ஜெறோம் அ.ம.தி அடிகளார், நிர்மல்ராஜ் செ.தா அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டனர். செபமாலைத்தாசர் இலங்கை மாகாணத்தலைவர் ஜெயசீலன் அடிகளார் குறிப்பேட்டாளராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் செயலாற்றினார். ஏற்கனவே அனுப்பப்பட்ட 20 புண்ணியங்கள் விவரம் பொதுவானதாகவும் விவரம் குறைந்தனவாகவும் இருந்தமையால் திரும்பவும் அவர்கள் அழைக்கப்பட்டு மேலும் தகவல்கள் திரட்டப்பட்டு றோலண் அடிகளார் உரோமாபுரிக்கு எடுத்துச் சென்று பொறுப்பான கர்தினாலிடம் ஒப்படைக்கப்பட்டு பெற்றுக்கொண்ட பதிலும் கிடைக்கப் பெற்றுள்ளது. பி.ஏ. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்கான செயற்பாடுகள் விரைவு படுத்தப்பட்ட நிலையில் அவரின் புனிதர் பட்டத்திற்காக செபிக்க எல்லா தமிழ் மறை மாவட்டங்களிலும் தமிழ் ஆயர்கள் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### அசாத்திய வாழ்வு

எலும்பும் தோலுமாக நலிந்து மெலிந்த தோற்றத்துடன் ஒரே ஒரு சுவாசப்பையுடன் பிறந்து சுவாசிக்கவே திணறிக் கொண்டு ஒரு சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக் கருதப்பட்டு அன்றைய தினமே திருமுழுக்குப்பெற்று 78 ஆண்டுகள் வாழ்ந்து (1886-1964) முதல் சுதேச தியான யோக செபமாலைத்தாசர் சபையை குருக்களுக்கும் கன்னியர்களுக்கும் நிறுவி ஆசியாவின் ஜோதி என அழைக்கப்படுபவர் யாழ் பாண்டியன் தாழ்வு மண்ணின் மைந்தர் தவத்திரு பி.ஏ.தோமஸ் அடிகளார். பிறப்பிலிருந்தே நோயாளியான இவர் அன்றாடம் நோயோடு போராட வேண்டிய ஒருவராகவே இருந்தார். ஆனால் யாருக்குமே பாரமாகாமல் எந்தப் பணியிலுமே குறை விடாமல் இறுதி வரை பயணித்தார் என்றே அறிய வருகிறது. திரு திருமதி பஸ்தியாம்பிள்ளை லூசியா தம்பதிகளின் முதல் ஆண் குழந்தை பிறந்தவுடன் இறந்தது. இரண்டாவது குழந்தையான அந்தோனிப்பிள்ளை என்ற நாமம் பூண்ட தோமஸ் அடிகளாரின் நிலையும் கவலைக்கிடமாய் இருந்தமையால் பெரும் அங்கலாய்ப்பே நிலவியது. ஆனால் இறைவன் உயிர்வாழ மாட்டார் எனக் கருதப்பட்டவரை பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை தோமஸ் அ.ம.தி அடிகளார் என்ற நிலைக்கு உயர்த்தி தம் கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.

### முனிவர் தோற்றம்

ஆரம்பக் கல்வி புனித சாள்ஸ் ஆரம்பப் பள்ளி (1893 ஜூலை 20) புனித பத்திரிசியார் கல்லூரி புனித மாட்டீனார் குருமடம் (1904) சீனியர் கேம்பிறிச் பரீட்சையில் தேர்ச்சி (1904) அரசதுறை எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி (1904) நவசன்னியாசம் கொழும்பு அலோசியஸ் நவ துறவு இல்லம் (1907) துறவற அர்ப்பண வார்த்தைப்பாடு (1910 பெப்ரவரி 02) குருப்பட்டம் (1912 ஜனவரி 06) அந்தோனிப்பிள்ளை என்னும் பெயர் தோமஸ் என மாற்றம் செபமாலைத்தாசர் தியானயோக துறவுசபை தோலகட்டியில் நிறுவல் (1928 பெப்ரவரி 02) கன்னியர்க்கான செபமாலைக் கன்னியர் சபை வயாவிளானில் நிறுவல் (1948 செப்ரெம்பர் 8) குருத்துவப் பொன்விழா (1962) இறப்பு (1964 ஜனவரி 26) என இவரின் வாழ்வும் பணியும் 78 ஆண்டுகள் (1886- 1964) வேகமாக முடிந்தன. மெலிந்த உடல், சாந்தமான தோற்றம், வட்டக் கண்ணாடி, தாடி வளர்ந்த முகம், நிமிர்ந்த பார்வை கையினில் செபமாலை நிதானமான நடை, அன்பான பேச்சு என்பன எல்லாம் இவரை ஒரு முனிவராகவே இனம் காட்டின.




### ஆசியாவில் முதல் துறவு சபை

இலங்கை நாட்டிலே போர்த்துக்கேயருடைய காலம் தொடக்கம் துறவற சபைகள் இருந்துள்ளன. ஆனால் இந்தத் துறவற சபைகள் அனைத்தும் வெளிநாட்டில் இருந்து வந்து இங்கு உருவானவை. ஆசியாக் கண்டத்திலே முதல் முதலாக ஆசிய நாட்டவரால் ஸ்தாபிக்கப்பட்ட காட்சி தியான யோகசபை என்றால் இறையடியார் பி.ஏ தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட செபமாலைத்தாசர் சபையே ஆகும். குருப்பட்டத்தின் பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியில் இந்து மாணவர்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட தோமஸ் அடிகளாருக்கும் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்த பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஜே.ஏ.கியோமர் அ.ம.தி அடிகளாருக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அப்போது இருவரும் தியான யோக துறவு சபைகள் ஆசியாவில் தோற்றம் பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். ஜே.ஏ.கியோமர் அமதி அடிகளார் யாழ் ஆயராக 1924 ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டார். 1926 பெப்ரவரி 28 ஆம் திகதி 11 ஆம் பத்திநாதர் பாப்பரசர் திருச்சபையின் பணிகள் என்ற சுற்றுமடலில் கீழைத்தேய நாடுகளில் நடைபெறும் மனம் திரும்பல் பணிக்கு செப தப துறவு கொண்ட துறவற சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார். ஆயர் ஜே.ஏ.கியோமர் ஆண்டகை தோமஸ் அடிகளாருடன் தாம் கொண்டிருந்த எண்ணப்பாட்டை மனதில் கொண்டு இப்பணியை தோமஸ் அடிகளாரிடமே ஒப்படைத்தார்.

### புனிதர் பட்டத்துக்கான வேண்டுகைகள்

புனித தோமஸ் அடிக்ளார் புனிதராக அறிவிக்கப்பட வேண்டும் என்ற மன்றாட்டை ஒவ்வொரு கத்தோலிக்கனும் மேற்கொள்ள வேண்டுமென யாழ். ஆயர் அழைத்துள்ளார். அவ்வாறு தோமஸ் அடிகளாரிடம் வேண்டும் வரங்கள் எவையேனும் கிடைத்தால் அருள் ஆச்சிரமம் இலக்கம் 05 கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அறியத் தரவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.




# குலதெய்வ கோயிலில் நடிகர் யோகிபாபு திருமணம்

## திரைத்துறையினர் வாழ்த்து!

நகைச்சுவை நடிகர் யோகிபாபுவுக்கு அவரது குலதெய்வ கோயிலில்நேற்றுமுன்தினம்காலைதிருமணம்நடைபெற்றது. தமிழ் சினிமாவில் முன்னணி காமெடி நடிகராக வலம் வருபவர் யோகிபாபு. ரஜினி, அஜித், விஜய் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் நடித்துள்ள இவருக்கு ரசிகர்கள் பட்டாளம் உண்டு.

இந்த நிலையில் யோகிபாபுவின் திருமணம் திருத்தணி அருகேயுள்ள அவரது குலதெய்வ கோயிலில் நடைபெற்றது. மஞ்சு பார்கவி என்ற பெண்ணை அவர் திருமணம் செய்துள்ள நிலையில், வரும் மார்ச் மாதம் சென்னையில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. யோகிபாபுவுக்கு சினிமாத்துறையினர், ரசிகர்கள் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.

# வாக்குறுதியை நிறைவேற்றுவோம்




அமெரிக்காவில் கடும் பனி இரவில் தன் வீட்டின் முன் ஏழை மனிதன் இருப்பதை அவதானித்தார் ஒரு செல்வந்தர்.
முதியவருக்கு அருகில் வந்து கேட்டார்
" வெளியே குளிர், உங்களுக்குச் சூடான உடைகள் இல்லையா? உங்களுக்குக் குளிர் இல்லையா?
முதியவர் பதிலளித்தார்,
" எனக்கு சூடான உடைகள் இல்லை. ஆனால் நான் இப்போது அதற்கு பழக்கப்படுகிறேன்"
கோடீஸ்வரன் பதிலளிக்கிறார்
" நான் வரும் மட்டும் காத்திருங்கள் நான் உங்களுக்கு ஆடை தருகிறேன்"
அந்த ஏழை மனிதன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான், அவர் காத்துக்கொண்டிருந்தான். அந்த ஏழை மனிதன் தன் வேலையால் ஏழை மனிதனை மறந்து விட்டான்.
காலையில் அவர் அந்த ஏழை மனிதனை நினைவு கொண்டார். அவர் உடனடியாக வீட்டை விட்டு வெளியே சென்றார். ஆனால் அந்த முதியவர் குளிரால் இறந்துவிட்டார்.
அந்த மனிதன் கையில் எழுதப்பட்டுள்ளது
" எனக்கு சூடான உடைகள் இல்லாத போது. நான் குளிருக்கு போராட முடிந்தது. ஆனால் நீங்கள் எனக்கு உதவ வாக்குறுதி அளிக்கும் போது. நான் உங்கள் வாக்குறுதிக்கு அடிமையாகி. நான் குளிர்க்கு எதிராக இருக்கும் திறனை இழந்துவிட்டேன்."
வாக்குறுதி அளிக்கும் முன் பொய்யான வாக்குறுதிகளை உருவாக்கும் முன் யோசியுங்கள். அது ஒருவரின் மரணத்தை கூட காரணமாக இருக்கலாம்.

# வீடற்றவனின் வார்த்தைகள்

வீடிருப்பவனுக்கு
வெள்ளம் என்றும்
வேக்காலம் என்றும்
கடுங்குளிர் என்றும் சொல்ல
சொல்லிருக்கிறது
வீடற்றவனுக்கு
வீடு என்ற ஒற்றைச் சொல்லே
எல்லாமாக இருக்கிறது
வியர்வையோ
ஊதக் காத்தோ
மழையோ
வீடற்ற தன்மையிலேயே
எல்லாவற்றையும்
ஒன்றெனபாவித்துக்
கடந்துவிடும் அவன்
ஒதுங்கிக்கொள்ள
ஒரு வீட்டின் வெளி
ஓரம் போதும் என்று
ஓடிக்கொண்டே
இருக்கிறான்.






## மூளையை இளமையாக்க சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | | 8 | | 5 | |
| 6 | | | 7 | | | | | 4 |
| | | 8 | 4 | | | | 6 | 3 |
| 1 | 2 | | | | | | | |
| | | 4 | | | | 5 | | |
| | | | | | | | 7 | 9 |
| 8 | 1 | | | | 9 | 4 | | |
| 3 | | | | | 7 | | | 8 |
| | 9 | | 5 | | | | | |

முந்தைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 9 | 3 | 6 | 8 | 1 | 5 | 2 |
| 6 | 3 | 1 | 7 | 5 | 2 | 9 | 8 | 4 |
| 2 | 5 | 8 | 4 | 9 | 1 | 7 | 6 | 3 |
| 1 | 2 | 3 | 9 | 7 | 5 | 8 | 4 | 6 |
| 9 | 7 | 4 | 8 | 3 | 6 | 5 | 2 | 1 |
| 5 | 8 | 6 | 2 | 1 | 4 | 3 | 7 | 9 |
| 8 | 1 | 7 | 6 | 2 | 9 | 4 | 3 | 5 |
| 3 | 6 | 5 | 1 | 4 | 7 | 2 | 9 | 8 |
| 4 | 9 | 2 | 5 | 8 | 3 | 6 | 1 | 7 |

சுடோக்கு என்பது 9x9 என அமைந்த 81 சிறு கட்டங்கள் அடங்கிய ஒரு பெரிய கட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுடன். ஒரு குறிப்பிட்ட பண்பு பொருந்துமாறு எண்களைக் கொண்டு விளையாடும் ஒரு புதிர் விளையாட்டு. தற்போது உலகெங்கும் மிகவும் விரும்பி விளையாடும் ஓர் எண் விளையாட்டாக இது உள்ளது.



# பணத்தால் எதை வாங்க முடியும்

இந்த படம் சீனாவின் ஹார்பின் மாகாண மருத்துவமனையில் எடுக்கப்பட்டது. ஒரு புற்றுநோய் நோயாளி பணம் நிறைந்த ஒரு பையை சுமந்துகொண்டு தனது உயிரைக் காப்பாற்றும்படி மருத்துவரிடம் கேட்டார். அவருக்கு பணம் கொடுக்க அவளிடம் நிறைய பணம் இருக்கிறது. ஆனால் அவரது புற்றுநோய் இறுதிக் கட்டத்தில் இருப்பதால் அவரால் எதுவும் செய்ய முடியாது என்று மருத்துவர் கூறினார். அவள் மிகவும் கோபமாகவும் விரக்தியுடனும் இருந்தாள், பணத்தை மருத்துவமனையின் முழு நடைபாதையிலும் எறிந்தாள்.
"பணம் வைத்திருப்பதன் பயன் என்ன" என்று கத்துகிறது.
"பணத்தை வைத்திருப்பதன் பயன் என்ன?"
"பணத்தால் ஆரோக்கியத்தை வாங்க முடியாது. பணத்தால் நேரத்தை வாங்க முடியாது, பணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது."
நம்மிடம் நேரமும் பணமும் இருக்கும்போது நல்ல ஆரோக்கியத்தைப் பேணுவது மிகவும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது.
**ஆரோக்கியமே செல்வம். பணக்காரனாக இருப்பதை விட ஆரோக்கியமே முக்கியம்.**

# உப்பு வியாபாரியும் கழுதையின் தந்திரமும்

முன்னொரு காலத்தில் ஓர் உப்பு வியாபாரி இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூடைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஓர் ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்குள் போக வேண்டும்.

ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூடையை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றை கழுதை கடந்த போது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிட்டன. எனவே, கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்து விட்டது.



கழுதை தவறி விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூடை நனைந்து விட்டன. கழுதையை வியாபாரி மெல்ல தூக்கிவிட்டான். ஆனால், நீரில் மூழ்கியதால் உப்பு மூடை நனைந்தது அல்லவா? அது ஒரு சில நிமிடத்தில் அப்படியே, தண்ணீரில் கரைந்து பாதி மூடையாகிவிட்டது. எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூடை வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா என்ன ஆச்சரியம் இப்போது கழுதைக்கு முதுகில் சுமையே தெரியவில்லை.

கழுதைக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் வியாபாரிக்கு பெரிய நஷ்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு திரும்பினான்.

மறுநாளும் வழக்கம் போல வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூடை கழுதைக்கு கனமாக இருந்தது. கழுதை மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது. திடீரென அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்ல தடுமாறுவது போல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது.

அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூடை நீரில் கரைந்து விட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாது போய்விட்டது.

கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்து வந்தது. இதனால் தினமும் வியாபாரத்திற்குப் போக முடியாமல் வியாபாரி சிரமப்பட்டான்.

அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிந்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.


அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூடை ஏற்றவில்லை வியாபாரி. மாறாகப் பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூடையை கழுதை முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம் போல ஆற்று பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது.

மூடையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அடக் கஷ்டமே! கழுதையின் முதுகில் இருந்த பஞ்சு மூடை முன்பைவிட அதிகமாக கனத்தது. கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது.

தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றிவந்த வியாபாரிக்குத் தெரிந்துவிட்டதை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது.

நாமும். நம்மை நம்பியவர், நம்பாதவர் யாரையும் ஏமாற்றக் கூடாது. அப்படி செய்தால் ஒரு நாள் நம் செயல் அவர்களுக்குத் தெரியவரும். அன்று அவமானம் அடையும் நிலை வரும். அதற்கான தண்டனையும் நமக்குக் கிடைக்கும்.

## வர்ணம் தீட்டுவோம்




## தெரிந்து கொள்வோம்

1. உடல் வெப்பநிலையைப் பராமரிக்க உதவுவது எது?
   கொழுப்பு
2. மனித உடல் உறுப்புகளில் ரத்தம் பாயாத இடங்கள் எவை?
   நகங்கள், மேல்தோல், ரோமங்கள்
3. எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் என்ன?
   8848 மீற்றர்கள்
4. வெறும் கண்களால் பார்க்கக்கூடிய கோள்கள் எவை?
   புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி.
5. ஹிரோஷிமா நகரில் அணுகுண்டு வீசப்பட்ட ஆண்டு ?
   1945



## சிந்தனைத்துளிகள்

- பயன் கருதி அன்பு காட்டுவதைவிட காட்டாமல் இருப்பதே மேல்.
- நிலைமைக்குத் தக்கபடி நடந்துகொள். அதுவே புத்தி சாலித்தனம்.
- நிதானமாகத்தான் சிந்திக்க வேண்டும், ஆனால் விரைவாக செயல்பட வேண்டும்.
- தன்னை அறிவது அறிவு,தன்னை மறப்பது மடமை.
- நாம் முன்னேற நட்பு ஒரு வாயிற்படி.
- ஆபத்துக்கு உதவுவது சொந்தம் இல்லை, நட்புதான்.
- அன்பும் மரியாதையும் கொண்டிருப்பவன் இந்த உலகில் எதையும் சாதித்துவிடுவான்.



## ஊஞ்சல் ஆடுவோம்...

ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்
உயரமான மரத்திலே
ஊஞ்சல் கட்டி ஆடுவோம்


வலித்து மேலே ஏறுவோம்
வந்து கீழே சேருவோம்
குலுக்கி மரத்தை ஆட்டுவோம்
குருவி நுழைந்தும் ஓடுவோம்


கூடிக் கூடி ஆடுவோம்
கும்மி கொட்டிப் பாடுவோம்
தேடி வந்த சேயுடன்
சேர்ந்து ஊஞ்சல் ஆடுவோம்

தம்பி வந்து பாரெடா
தமிழும் ஊஞ்சல் ஆடிறாள்
வெம்பி வெம்பி அழுதவள்
மெத்தப் புளுகாய் ஆடுறாள்

எண்ணிப் பத்து முறைக்குமேல்
இருந்து கண்ணன் ஆடுறான்
கண்ணீர் விட்டுக் கதறுவாள்
கமலராணி ஆடட்டும்

துண்டுகளாக சிதறியிருக்கிறார் யானை அண்ணா. கவனமாக வெட்டி எடுத்து சரியாக ஒட்டுங்கள்!





# 11,232 ஏக்கர் காணிகள் மகாவலியால் அபகரிப்பு

## பிரதமரின் தகவல் பொய் என்கிறார் ரவிகரன்

முல்லைத்தீவு,பெப்.9

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட ஏறத்தாள 3744 ஏக்கர் காணிகள் முல்லைத்தீவில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் அருகிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு, தற்போது மூன்று மடங்காக 11,232 ஏக்கர் காணிகள் மகாவலி (எல்) என்ற பெயரில் அபகரிக்கப்பட்டுள்ளன. அவற்றைச் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகள் கச்சிதமாக நடைபெறுகின்றன என்று வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.



கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இந்தக் காணிகள் தொடர்பில் கேள்வி எழுப்பிய போது, பிரதமர் மஹிந்த ராஜபக் ஷ சில கருத்துக்களைச் சபையில் தெரிவித்திருந்தார். பிரதமரின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் ரவிகரன் ஊடக சந்திப்பை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்தினார்.

அவர் தெரிவித்ததாவது:

1984ஆம் ஆண்டு கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் கருநாட்டுக் கேணி மக்கள் வலுக்கட்டாயமாக இராணுவத்தினரால் வெளியேற்றப் பட்டிருந்தனர். பின்னர் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். அப்போது மக்களுடைய பூர்வீக வாழ்வாதார நிலங்கள் முழுமையாகச் சிங்கள மக்களால் அபகரிக்கப்பட்டிருந்தன.

கிட்டத்தட்ட 3744 ஏக்கர் காணிகள் அங்கு அபகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் பிரதமர் 408 ஏக்கர் காணிகள் அதில் 103 பேர் பயிர் செய்கையில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவித்துள்ளார். சிங்கள மக்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்றும் கூறியிருந்தார். தொடர்ந்து அவருடைய கருத்தில் சிங்கள மக்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். ஆனால் நெலும்வெவ என்ற குளத்தைப் பற்றி மாத்திரம் தான் அவர் சொல்லியிருக்கின்றார். அதுவும் பொய்யான தகவலாகும்.

மாவட்டச் செயலகப் புள்ளி விவரத்தின்படி உந்துராயன்குளத்தின் (நெலும் வெவ) கீழ் சுமார் 899 ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆமையன் குளம் (கிரிப்பன் வெவ) 103 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியில் மறுசீரமைக்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரடியாக வருகை தந்து (கிரிப்பன் வெவ ) என பெயர் மாற்றம் செய்து சிங்கள மக்களின் பாவனைக்காகக் கையளித்திருந்தார்.

குளத்தின் கீழ் தமிழ் மக்கள் 360 ஏக்கர்களில் தான் பயிர்ச்செய்கை மேற்கொண்டிருந்தனர். 900 ஏக்கர் வரையில் நீர் பாய்ச்சக்கூடிய அளவுக்குக் குளம் தற்போது மறுசீரமைக்கப்பட்டுள்ளது. காடுகள் அழிக்கப்பட்டு, 900 ஏக்கர் வரையில் காணிகள் எடுக்கப்பட்டு, சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக அபிவிருத்தி என்ற போர்வையில், தமிழ் மக்கள் ஏற்கனவே பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. அருகே உள்ள எமது காட்டு வளங்கள் அழிக்கப்பட்டு மேலதிகமான காணி அபகரிப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கமநல சேவைத் திணைக்களத்தினூடாக மாவட்ட செயலகம் வெளியிட்ட புள்ளிவிவரத்திலும் காணிகளின் விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அரச திணைக்களங்களாலும் புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டுள்ள போதும், பிரதமர் இவ்வாறான பொய்த் தகவல்களை வெளியிடுகின்றமை அழகல்ல.

தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட, குளங்களோடு சேர்ந்த வயல்நிலங்கள் பெரிய அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. முன்பு ஒரு ஏக்கர் எனில், தற்போது அதை மூன்று ஏக்கர் அளவுக்கு விருத்தி செய்து, குளங்களும் அதற்கு ஏற்றால் போல் பெரிதாக்கப்பட்டு, மறுசீரமைக்கப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கும் வேலைகள் கச்சிதமாக இடம்பெறுகின்றன.

இந்த விடயத்துடன் ஒப்பிடும் போது, தமிழ் மக்களுக்கு மாற்றுக்காணி எங்கு தரப்போகின்றனர்: அவ்வாறு மாற்றுக்காணியாக வழங்கப்படும் என்ற அந்தக் காணிகள் கூட, ஏற்கனவே அரசாங்கத்தால் தமிழ் மக்களுக்கு 45 ஏக்கர் வரையில் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் தான். அதற்கான ஆவணங்கள் தமிழ் மக்களிடம் உள்ளன.

கோட்டைக்கேணி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ள காணிகளை அபகரித்து ஒருவருக்கு தலா 25ஏக்கர் வீதம், 33 சிங்கள மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. சிங்கள மக்களுக்கு 25 ஏக்கர் வீதம் காணிகளை வழங்கி விட்டு, ஏற்கனவே தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகளை, மீண்டும் தமிழ் மக்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் வழங்குகின்றோம் என்று சொன்னால் அதைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்வார்களா. குளங்களின் கீழான தமிழ் மக்களின் வயல் நிலங்களை அத்துமீறி அபகரித்துவிட்டு, மானாவாரிக்காணிகள் வழங்கும் நடவடிக்கையைச் செய்யவேண்டாம். குளங்களின் கீழான தமிழ் மக்களின் காணிகள் வழங்கப்படுவதுடன், மானாவாரிக் காணிகளிலும் தமிழ் மக்களுக்குரிய காணிகள் வழங்கப்படவேண்டும்-என்றார். (க-246)

காலை நேர உடற்பயிற்சி

# மாணவர்களுக்கு உற்சாகம் தரும்

குருநகர்,பெப்.9

பாடசாலைகளில் நாளாந்தம் காலை வேளைகளில் நடைபெறும் உடற்பயிற்சிகள் மூலம், மாணவர்களுக்கு உற்சாகம் ஏற்படுகிறது. அன்றாடக் கல்விச் செயற்பாடுகளிலும் அவர்கள் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்களாகக் காணப்படுவர்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் கில்பட் குணம் தெரிவித்தார். யாழ் சென் ஜேம்ஸ் மகளிர் றோ.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாடசாலைகளின் இல்ல மெய்வன்மைப் போட்டிகளை வருட ஆரம்பத்தின் முதல் தவணையில் நடத்துவதன் நோக்கம், பின்னர் நடைபெறும் கல்விச் செயற்பாடுகள் சிறந்த முறையில் நடைபெறுவதற்காகவே. இதன் மூலம் மாணவர்களின் உடல் உள ஆரோக்கியம் சிறப்பாக அமையும் என்று கல்வி அமைச்சு எதிர்பார்க்கிறது. இல்ல விளையாட்டு மூலம் வெற்றி யீட்டும் மாணவர்கள் மாவட்ட, மாகாணப் போட்டிகளில் கலந்து கொள்ள ஊக்கமளிக்கிறது. அதேவேளை ஒரு பாடசாலை சிறந்த பாடசாலையாக வளர்வதற்கு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர் என அனைவரும் இணைந்து ஒற்றுமையாகச் செயற்படுகின்றமை அவசியம்-என்றார். (க-51)



# முள்ளிக்குளத்தில் 11 வீடுகளுக்கு அடிக்கல்

மன்னார்,பெப்.9

முசலி பிரதேசச் செயலாளர் பிரிவில் கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையினரினால் விடுவிக்கப்பட்ட காணிகளில், 50 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடப்பட்டது.

ஜேர்மன் நாட்டின் உயர் மறைமாவட்டத்தின் நிதி உதவியுடன், கறிற்றாஸ் செடேக் அமைப்பினூடாக வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது. முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 11 வீடுகளுக்கு அடிக்கல் நடப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் வருகை தந்த விருந்தினர்கள் வீடுகளுக்கான அடிக்கற்களை நட்டனர். வீடுகள் ஒவ்வொன்றும் தலா 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முள்ளிக்குளம் பங்குத்தந்தை லோறன்ஸ் லியோ தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், கறிற்றாஸ் செடே நிலையத்தின் இயக்குநர் அருட்தந்தை மகேந்திர குணதிலக்க, மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன், முசலி பிரதேசச் செயலாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-56)

வடக்கு மாகாண அலுவலகங்களின் பணியாளர்கள்

# 3 ஆண்டுகளில் 349 பேர் வெளிநாடுகளுக்கு பயணம்

யாழ்ப்பாணம்,பெப்.9

வடக்கு மாகாண அலுவலகங்களில் பணியாற்றும் பணியாளர்களில் 349 பேர் கடந்த 3 ஆண்டுகளில் வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்று பிரதமசெயலாளர் அலுவலகம் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட கேள்விக்கு இந்தப் பதில் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மாகாண சபையின் கீழ் உள்ள நிர்வாக அலுவலகங்களில் இருந்து 349 பேர் பயணித்துள்ளனர். அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு 165 பேரும் , 2018 ஆம் ஆண்டில் 119 பேரும், 2019 ஆம் ஆண்டில் 65 பேரும் பயணித்துள்ளனர்.

திணைக்கள ரீதியில் ஆளுநரின் செயலகத்திலிருந்து ஐவரும் , பிரதம செயலாளர் அலுவலக உத்தியோகத்தர்கள் 32 பேரும் , உள்ளூராட்சி அமைச்சுக்கு உட்பட்ட உத்தியோகத்தர்கள் 51 பேரும், கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் 86 பேரும் , சுகாதார அமைச்சுக்கு உட்பட்டோர் 111 பேரும் , விவசாய அமைச்சுக்கு உட்பட்ட உத்தியோகத்தர்கள் 39 பேரும் , சிறுவர் விவகார அமைச்சின் உத்தியோகத்தர்கள் 23 பேரும், மாகாண சபைச் செயலக உத்தியோகத்தர்கள் இருவரும் வெளிநாடுகளுக்குப் பயணித்துள்ளனர் என்று அந்தத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-105)

# மக்களின் காணிகளை வழங்கி மீள்குடியமர்வை அனுமதிக்குக!

## வலி.வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.9

வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து நீண்டகாலமாக முகாம்களில் உள்ள மக்களின் காணிகளை விடுவித்து அவர்கள் மீள்குடியமர்வுக்குரிய வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மக்கள் மீள்குடியமர்வில் ஆர்வம் இல்லை என்று இராணுவத் தளபதி கூறுவதை ஏற்க முடியாது.இவ்வாறு வலி. வடக்கு மீள் குடியேற்றக் குழுவின் தலைவர் எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் காரணமாக வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்போதும் முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் வாழ்கின்றனர்.

இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்துள்ள அந்த மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் என்று பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட அளவு காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர். ஆனால் அவர்களுக்கு இன்னமும் முழுமையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. ஆனாலும் அந்த மக்கள் காணிகளில் குடியமர்ந்துள்ளனர்.

விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள் குடியமர்வதில் மக்களுக்கு ஆர்வமில்லை என்று யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி கூறுகின்றார். அவருடைய கூற்று ஏற்றுக் கொள்ளமுடியாதது. தங்களது சொந்த நிலங்களில் குடியமர்வதில் மக்கள் அக்கறையுடனே செயற்பட்டு வருகின்றனர்.

மக்களின் பல ஆயிரம் ஏக்கர் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அவற்றை விடுவித்து மக்களை மீளக் குடியமர்த்துமாறு அரசிடம் கோருகின்றோம். காணிகளை விடுவிக்க வலியுறுத்தி மக்கள் போராடும் நிலைமையே காணப்படுகின்றது. படையினர் வசமுள்ள மக்களின் காணிகளை விடுவித்து அவர்களை மீளக் குடியமர்த்தி அவர்களுக்கான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ-20)

## மெய்வன்மைப் போட்டிகள்

மன்னார்,பெப்.9

மன்னார்அல்அஸ்ஹறர் ம.வி தேசிய பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் எம்.வை.மாஹீர் தலைமையில் நடைபெற்ற போட்டியில் விருந்தினர்களாக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் கே.ஜே.பிறட்லி, முன்னாள் அதிபர் எஸ்.ஏ.ஹினாயத்துள்ளா உட்பட பலர் கலந்து கொர்ண்டனர்.

விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தை சம்ஸ் இல்லமும், இரண்டாம் இடத்தை சிறாஜ் இல்லமும், மூன்றாம் இடத்தை தாஜ் இல்லமும் பெற்றுக் கொண்டன. (ஐ-56)









காரைநகர் பயிரிக்கூடல் சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. வசந்தமண்டபப் பூசையையடுத்து சுவாமி தேரில் ஆரோகணித்துப் பத்தர்களுக்கு அருட்காட்சி வழங்கினார். (ஐ-250)

## சித்திவிநாயகர் வித்தியின் மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 9

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சிறப்பு விருந்தினராக முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி. மணிவண்ணன், சட்டத்தரணி காண்டீபன், பிரதேச சபை உறுப்பினர் மருத்துவர் திருநாவுக்கரசு, யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், பாடசாலை மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் பலரும் கலந்துகொண்டனர். (த-20)





## தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறந்துவைப்பு

வவுனியா, பெப். 9

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இரண்டு கோடி ரூபா பெறுமதியான தொழில்நுட்ப ஆய்வுகூடம் கடந்த வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அயல் பாடசாலை தரமான பாடசாலை என்ற திட்டத்தின் கீழ் இது திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எ.றம்சீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் ஆய்வுகூடத்தைத் திறந்துவைத்தார். தொடர்ந்து கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டியிலும் கலந்து கொண்டார்.

நகரசபை உறுப்பினர்கள், கல்வித் திணைக்கள பிரதிநிதிகள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (த-110)

## வலி.கிழக்குப் பிரிவில் 49 வேலைத் திட்டங்கள்

அச்சுவேலி, பெப்.9

நிறைவான கிராமம் (சப்பிரிகம) வேலைத் திட்டத்தின் கீழ் வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில் 49 வேலைத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நிறைவான கிராமம் வேலைத்திட்டத்துக்கு முதற்கட்டமாக ஒவ்வொரு கிராம அலுவலகப் பிரிவுகளுக்கும் 2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவுகளுக்கம் 62 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-11)

## நடனத் திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.9

இளையோருக்கான நடனத் திருவிழா நாளைமறுதினம் தொடக்கம் 13 ஆம் திகதி வரை மருதனார்மடம் வட இலங்கை சங்கீத சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டம் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த 18 க்கும் 32 வயதுக்கும் இடைப்பட்ட இளையோருக்கான நடனப் போட்டியாக இது அமையவுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் நடனங்கள் தமிழ் கலாசாரத்தை பின்பற்றியதாகவோ அல்லது பரத நாட்டியமாகவோ அமையலாம்.

விண்ணப்பப் படிவங்களை தத்தமது பிரதேச செயலகங்கள் கிராம அலுவலர், அலுவலகங்கள் அருகில் உள்ள படை முகாமிலோ பெற்றுக் கொள்ளமுடியும்.

போட்டியில் முதலாம் இடத்துக்கு 5 லட்சம் ரூபாவும், இரண்டாமிடத்துக்கு 2 லட்சம் ரூபாவும் மூன்றாமிடத்துக்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ -9)

# இலங்கையில் அதிகரிக்கும் பாலியல் குற்றச் செயல்கள்

கொழும்பு, பெப்.9

**2020ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து 15 நாள்களில் இலங்கையில் 142 பாலியல் வன்புணர்வுக் குற்றங்கள் நடந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. அவற்றில் 42 கடுமையான பாலியல் துஷ்பிரயோக வழக்குகளும், 54 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளும் அடங்குகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பதிலளித்தார். இதன்போதே இந்த விவரங்களை அவர் தெரிவித்தார். 2020இன் முதல் 15 நாள்களில் 142 துஷ்பிரயோக சம்பவங்கள், 42 கடுமையான பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் மற்றும் 54 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முறைப்பாடுகளில், 78 துஷ்பிரயோக சம்பவங்கள், 21 கடுமையான பாலியல் துஷ்பிரயோக வழக்குகள், 34 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் பிரிவுகளிலிருந்தே பெரும்பாலான வழக்குகள் பதிவாகியுள்ளன. குறித்த 15 நாள்களில் 44 துஷ்பிரயோகங்களில் 8 வழக்குகள் கடுமையான பாலியல் துஷ்பிரயோகமாகவும் மற்றும் 17 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளும் மட்டக்களப்பில் பதிவாகியுள்ளன.

இதேவேளை, 2012 முதல் 2020 வரை 11 ஆயிரத்து 998 துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 4 ஆயிரத்து 806 கடுமையான பாலியல் துஷ்பிரயோக வழக்குகளும் 5 ஆயிரத்து 891 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளும் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# அனுமதியின்றி மணல் அகழ்வு

## தனியார் நிறுவனத்தினர் இருவர் கைது

முல்லைத்தீவு.பெப்.9



முள்ளியவளை கயட்டையடியில் சட்ட விரோதமான முறையில், மண் அகழ்வில் ஈடுபட்ட பிரபல தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யபட்டனர்.

முள்ளியவளை புளியங்குளம் வீதியில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையால் குப்பை கொட்டப்படும் பகுதியான கயட்டை காட்டுப் பகுதியில் வைத்து கடந்தவியாழக்கி ழமை இருவரும் கைது செய்யப்பட்டனர். கரைதுறைப்பற்றுப் பிரேதேச சபையின் அனுமதியுடன், முல்லைத்தீவில் அமைக்கப்பட்டு வரும் தனியார் ஹோட்டல் ஒன்றால், நந்திக்கடல் வெளியில் மரநடுகைத் திட்டத்துக்கும், குப்பைகளைத் தன்னார்வ சேவையாக புதைத்து தருகின்றோம் எனும் பேரில் கனிய வளங்கள் திணைக்களத்தின் அனுமதியின்றி மண் அகழப்பட்டு வருகிறது. அந்தத் தனியார் நிறுவனத்தின் தேவைக்காக மண் அகழப்பட்ட போது பொலிஸார் தடுத்து நிறுத்தினர். மண்ணகழ்வுக்காக பயன்படுத்திய கனரக வாகனம் மற்றும் டிப்பரையும் கைப்பற்றினர்.

இரண்டு பேர் முள்ளியவளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கடந்த மாதமும் இதே இடத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையுடன் இணைந்து மர நடுகை வேலைத்திட்டத்துக்கென தனியார் நிறுவ னத்தினரால் மண் அகழப்பட்டு, தமது தேவைக்காக பயன்படுத்தப்பட்ட நிலையில், வனவளத்திணைக்களத்தினரால் மண்ணகழ்வில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மீண்டும் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையினர் மர நடுகை வேலைத்திட்டத்தை நந்திக்கடல் பகுதியில் மேற்கொள்ளவும், அந்தப் பகுதியில் உள்ள குப்பைகளைப் புதைப்பதற்கும், தனியார் நிறுவனத்துக்கு அனுமதியை வழங்குமாறும் முல்லைத்தீவு மாவட்ட வனவள திணைக்களத்திடம் அனுமதி கோரியுள்ளனர்.

தோண்டப்படும் மண்ணை நந்திக்கடல் வெளியில் மரம் நடும் வேலைத்திட்டத்துக்கு மட்டும் கொண்டு செல்லுமாறும், இந்த நடவடிக்கையை முல்லைத்தீவு வட்டார வன அதிகாரியைக் கண்காணித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் முல்லைத்தீவு மாவட்ட வன திணைக்களம் அனுமதி வழங்கியது.

மரம் நடும் செயற் திட்டம் இடம்பெறும் பகுதியில் வெறும் இரண்டு 'லோட்' மண் பறிக்கப்பட்டுள்ளதோடு நூற்றுக்கணக்கான லோட் மண் தனியார் நிறுவனத்தின் வளாகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

அத்துடன் மண் அகழ்ந்து எடுப்பதற்கான அனுமதி முறையாக கனிய வளங்கள் திணைக்களத்திடம் பெறப்படாது வனத் திணைக்களம் மற்றும் பிரதேச சபையின் அனுமதியுடன் மட்டும் மண் அகழ்ந்து தனியார் நிறுவனத்தால் கொண்டு செல்லப்படுகிறது.

இது தொடர்பில் மாகாண கனிய வளங்கள் திணைக்களத்திடம் தொலைபேசி மூலம் வினவப்பட்ட நிலையில், கனிய வளங்கள் திணைக்களப் பதிவாளர் அவ்வாறு எந்தவிதமான மண் அகழ்வுக்கான அனுமதிகளும் தம்மால் முல்லைத்தீவில் வழங்கப்படவில்லை. அவ்வாறு தமது அனுமதிகள் எதுவுமின்றி அகழ்ந்து செல்லப்படும் மண் சட்டவிரோதமானது. இதற்கான சட்ட நடவடிக்கையை பிரதேச பொலிஸார் மேற்கொள்ள வேண்டியது அவர்களது கடமை எனப் பதிலளிக்கப்பட்டது.

சட்டவிரோத மண்ணகழ்வு தொடர்பாக முள்ளியவளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்ட போது, உடனடியாக சட்ட விரோத மண்ணகழ்வைத் தடுத்து நிறுத்தி, அவற்றில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதாகத் தெரிவித்தார். சம்பவ இடத்துக்கு உடனடியாக பொலிஸ் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் மண்ணகழ்வில் ஈடுபட்டவர்களைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-19)

# 'ஆர்ப்பாட்ட இடம்' சென்றார் கோத்தா



கொழும்பு, பெப்.9

கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு அருகே அமைக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்ட இடத்தில் இரு நாள்களாகப் போராட்டம் மேற்கொண்டிருந்த டெங்கு ஒழிப்பு உதவியாளர் சங்க ஊழியர்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகில் காலி முகத்திடல் வளாகத்தில் ஆர்ப்பாட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் டெங்கு ஒழிப்பு உதவியாளர் சங்க ஊழியர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்தனர்.

அவர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அவர்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினை தொடர்பாகக் கேட்டறிந்தார்.

2017ஆம் ஆண்டு முதல் எந்தவொருவரினதும் கவனத்திற்கு உள்ளாகியிருக்காத தமது சேவையை உறுதிப்படுத்தித் தர வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களது பிரச்சினைகளை கேட்டறிந்த ஜனாதிபதி பல்நோக்கு அபிவிருத்தி செயலணியின் மூலம் வழங்கப்பட உள்ள ஒரு இலட்சம் தொழில் வாய்ப்புகளின் கீழ் ஆயிரத்து 300,பேருக்கும் தொழில் வழங்குவார் என்று தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# புத்தகப் பைகள் கையளிப்பு

வவுனியா,பெப்.9

"ஜீவஊற்று அன்பின் கரம்" அமைப்பால் வவுனியா இராமகிருஷ்ண வித்தியாலயத்தைச் சேர்ந்த 41 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் அண்மையில் வழங்கப்பட்டன. லண்டன் நாட்டைச் சேர்ந்த ரட்ணகுமார் விமலராணி இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளார். நிகழ்வில் நிறுவனத்தின் பொருளாளர் ஜெஸ்மன், நிர்வாக உறுப்பினர் போதகர் சுந்தர் மற்றும் நியூசிலாந்து இணைப்பாளர் ரவி ஆகியோர் கலந்துகொண்டனர். (ஜ-222)



# நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.9

சிறகுகள் படிப்பகம் அமைப்பால் 23 பாடசாலைகளுக்கு ஆங்கில நூல்கள் வழங்கப்பட்டன.


யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் நுவரெலியா மாவட்டப் பாடசாலைகளுக்கே இந்தப் புத்தகங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

அத்துடன் நூலக வசதிகளற்ற பாடசாலைகளுக்கு நூலகங்கள் அமைக்கும் செயற்றிட்டத்தையும் இந்த அமைப்பு முன்னெடுக்கவுள்ளது. (ஜ-222)



# கோத்தாவுடன் பயணிப்போர் மொட்டுடன் இணையலாமே!

## சாடுகின்றார் பொன்சேகா



கொழும்பு, பெப்.9

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்ஷ வுடன் இணைந்து பயணிக்க முடியும் என்று கூறுகின்றனர்.

இந்த விடயம் கவலையளிக்கின்றது. அவ்வாறு இணைந்து பயணிக்க வேண்டுமாயின் ஐ.தே.கவில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு கூறிக்கொள்பவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து பயணிக்கலாமே.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி கோத்தாபயராஜபக்ஷவுடன்இணைந்து ஆட்சியமைக்கத் தயார் என்று கூறிக் கொள்கின்றனர். இது கவலையளிக்கின்றது. ஏனெனில், ஜனாதிபதிக்கு எனத் தனிப்பட்ட கொள்கை உண்டு. அதன்படி அவர்கள் ஆட்சி அமைத்துள்ளனர். எமக்கென தனிக்கொள்கையுண்டு. மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணமுண்டு. ஐ.தே.க. உறுப்பினர்களுக்கெனத் தனிப்பட்ட ரீதியில் கௌரவமும் உண்டு. ஜனாதிபதியுடன் இணைவது மொட்டுக் கட்சியினருடன் கைகோர்க்கும் முயற்சி யாகவே கூற முடியும். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இவ்வாறாக அவர்களுடன் இணைந்து பயணிக்கத் தயாரெனின் அவர்கள் செய்த விடயங்கள் அனைத்தும் சரியென்றாகிவிடுமே. அந்தவகையில் கோத்தாபய ராஜபக்சவுடன் இணைந்து பயணிப்பதென்பது சாத்தியமற்ற விடயமாகும் என்றார். (எ-22)

# சென்.ஜேம்ஸ் மகளிர் கல்லூரி விளையாட்டு போட்டிகள்

குருநகர், பெப்.9

யாழ்.சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வியாழக்கிழமை சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றன. அதிபர் அ.மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் யோசப் இல்லம் 588 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், திரேசா இல்லம் 572 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், மரியாள் இல்லம் 535 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றன.

போட்டிகளின் சிறந்த விளையாட்டு வீராங்கனைகளாக 14 வயதுப் பிரிவில் ய.தட்சாயினியும், 16 வயதுப் பிரிவில் ரீ.மவுலிஸாவும், 18 வயதுப் பிரிவில் பி.கருணியும், 20 வயதுப் பிரிவில் பி.யசிக்கா, ஆர்.மேரி, றெஜினா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் கில்பட் குணம், சிறப்பு விருந்தினராக குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை யஸ்ரின் சாள்ஸ் அடிகளார், கௌரவ விருந்தினராக குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் செயலாளர் பிலிப்ராசா றெக்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-51)

# நமசிவாய வித்தியின் கால்கோல் விழா



யாழ்ப்பாணம், பெப்.9

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது.

பொங்கல் விழாவின் பின்னர், புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள், பழைய மாணவர்களால் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை உறுப்பினர் நா.தநேந்திரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கினார். (க)

# முதலிடம்

முல்லைத்தீவு, பெப்.9

2019 ஆம் ஆண்டுக்கான கமநலத்தின் பெருமிதம் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

விவசாய அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற கமநல அபிவிருத்தியின் திறன்களின் பொருட்டு சிறப்புற்றவர்களுக்கு வழங்கும் செயலாற்றுத் திறமையை மதிப்பிடும் தேசிய விருது விழாவில் இந்தத் தகவல் அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை, ஒலுமடு, துணுக்காய், பாண்டியன்குளம், அளம்பில், கொக்குத்தொடுவாய், குமுழமுனை, புதுக்குடியிருப்பு, உடையார் கட்டு ஆகிய கமநல சேவை நிலையங்களுக்கிடையில் நடைபெற்ற, சிறந்த கமநல சேவை நிலையத்தைத் தெரிவு செய்யும் போட்டியில் ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையம் முதலிடம் பெற்றுள்ளது.

தேசிய மட்டப் போட்டிக்கும் அது தெரிவாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-19)

# மெய்வன்மைப் போட்டி





வவுனியா, பெப்.9

வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.கே. உபைத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர் எஸ்.எம்.சமன்பந்துலசேன, உளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.எல்.பி.சந்திரசேகர, வவுனியா தெற்கு வலயப் பிரதிநிதி ஏ.எம்.சுபைர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தேசிய கொடி பாடசாலை கொடி. இல்லக் கொடி என்பன ஏற்றி வைக்கப்பட்டன.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

போட்டியில் தாரிக் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ஐ-18)





வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற்றது. (க-110)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில்
நிலப்பரப்பு (1) ஒன்று குழி 03/9 காணியுடன் உள்ள
வீடு விற்பனைக்கு உண்டு.

**077 614 6434**

## விற்பனைக்கு

பழைய பனைமரம், வளை மரம், கதவு நிலை
விற்பனைக்குண்டு.

**076 725 7280**
(11.00 am பிறகு தொடர்பு கொள்ளவும்)

## கார் விற்பனைக்கு

வைத்தியரின் Toyota Prius 2015 (zvw30) NP CAA
XXXX இலக்க 34000km, 24km / L எரிபொருள்
சேமிப்புடைய கார் விற்பனைக்குண்டு.

**076 535 9284**

## காணி தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில்
வீடு கட்டுவதற்கு உகந்த 1-2 பரப்பு காணி
தேவை.

**தொடர்பு -077 365 5947**

## ராஜா பிளாசா மாதிரிக் கிராமம்

### அரச பங்களிப்புடன் அமைக்கப்பட்ட
### 100 வீட்டுத்திட்ட நன்கொடையாளர்
# கௌரவிப்பு விழா - 2020

தலைவர் : கணிதச்சுடர் சண். வாமதேவன்
(ஓய்வுநிலை அதிபர். தலைவர் விழாக்குழு)
காலம் : இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 மணி
இடம் : ஆசிமட அரசடி விநாயகர் மணி மண்டபம்
கோண்டாவில்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

விழாக்குழு

(m 12519) (13.17)

## Wanted Office Space in Jaffna

1200 - 1500 Sqft building / Office Space wanted for Long term lease / rent with parking facilities in Jaffna town and preferably close to Jaffna Teaching Hospitals

**Contact Number - 0777726830**




**வட மாகாண மக்களின் நன்மை கருதி லங்கா ஹொஸ்பிட்டல்ஸின்**

# இலவச IVF / கருவுறுத்திறன் ஆலோசனைகள்

இடம்: யாழ். மதர்கெயார் ஹொஸ்பிட்டல்ஸ் 3ஆம் மாடி,
இல. 514/18, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

திகதி: பெப்ரவரி 14 பி.ப 5.00 - பி.ப 7.30 வரை
பெப்ரவரி 15 மு.ப 9.00 - பி.ப 12.30 வரை

புகழ்பெற்ற கருமுளையவியல் சிறப்பு நிபுணர்
**டொக்டர் மதார ரலபனாவ**
(லங்கா ஹொஸ்பிட்டல்ஸின் கருவள நிலையத் தலைவர்)
அவர்களால் மேற்கொள்ளப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட முன்பதிவுகள்

071 033 9559

LANKA HOSPITALS ACCREDITED
MTQUA CERTIFIED
Where Life Begins

## தேவை

கொழும்பிலுள்ள **Janatha Steels** எனும் பிரபல நிறுவனத்தின் களஞ்சியசாலைக்கு **(Store)** உத்தியோகத்தர்கள் **(Staff)** தேவை.

**071 437 6166, 071 862 2261**

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 இல் அத்தம் கன்னிராசியில் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை.

**077 945 9221**

## மணமகள் தேவை

யாழ்.இந்து உயர்குலம், லண்டன் **PR** உள்ள மணமகனுக்கு 1998 - 2002 வரை பிறந்த அழகான மணமகள் தேவை. சீதனம் வேண்டாம்.

**0044 783 327 0430**
**0044 771 345 9425**

## வீடு வாடகைக்குண்டு

கோப்பாய் வைத்தியசாலைக்கு அருகில் மானிப்பாய் வீதியில் **சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.**
தரகர்கள் தேவையில்லை

**076 662 9980**

## மணமக்கள் சூரியன் திருமணசேவை

எங்களிடம் உள்நாட்டு வெளிநாட்டு அரச, தனியார்துறை பட்டதாரி ஆண், பெண் ஜாதகக்குறிப்புக்கள் உண்டு.

**சூரியன் திருமணசேவை**
**561, K.K.S. வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்**

## வேலையாள்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்கு வியாபார நிலையத்துக்கு அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை.
**சம்பளம் : 30,000 தொடக்கம் 40,000 ஆயிரம் வரை.**

**077 067 4452**

## வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு 30 - 45 வயதுக்கு உட்பட்ட சமையலாளர் **( Chef )** தேவை.
யாழ்நகரில வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**021 222 1356**

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு முழு நேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ குழந்தையை பராமரிக்கக் கூடிய பெண் ஒருவர் தேவை.

**சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.**

**தொடர்பு:- 077 245 3990**

## விற்பனைக்குண்டு

வவுனியா, பூந்தோட்டம், கல்வியல் கல்லூரி வீதியில் 1 ஏக்கர் காணி 3 அறையுள்ள வீட்டுடன் விற்பனைக்குண்டு. (IN/14563) (11.17)

**077 791 7576, 077 791 7574**

## வர்த்தக நிலையம் விற்பனைக்கு

யாழ்நகரின் மத்தியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள 4500 ச.அடி விஸ்தீரணமுள்ள மூன்று மாடிகளைக் கொண்ட கடைத்தொகுதி விற்பனைக்குண்டு

விலை 120 மில்லியன்

**தொடர்பு: 075 597 2565**

## வாடகைக்கான கடைகள் உண்டு

இலக்கம் 10, செம்மா தெரு (Jumma Mosque Lane) வில் அமையவிருக்கும்

**கடைத்தொகுதியில் கடைகள்**

**தேவைப்படுவோர்** நேரில் தொடர்புகொள்ளவும்

வியாபார தன்மைகள் : புடைவை, அழகுசாதனம் , ரெயிலறிங், போன்விற்பனை, சிற்றுண்டி.

தொடர்பு முகவரி: **54, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.**

**075 597 2565**

(உ31093) (13.17)

## வாகனத் தொழில்நுட்ப ஜாம்பவானுடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள்

DATS உங்கள் எதிர்காலம் உருவாகட்டும்




DIMO தொழில்நுட்பத் திறன்கள் அக்கடமி (DATS) என்பது ஜேர்மனியிலுள்ள Daimlar AG நிறுவனத்தின் பங்காளித்துவத்துடன் 1990 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதிநவீன மோட்டார் வாகனத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையமாகும். நாளைய வாகனத் தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள திறமையுள்ள இன்றைய இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டுமென DIMO விரும்புகிறது.

மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் ஈடுபடும் ஆர்வமுள்ள, பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட, உற்சாகமான இளைஞர்களை எம்முடன் இணையுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம். வாருங்கள், இலங்கையிலுள்ள எமது பயிற்சி நிலையங்களில் சேர்ந்து மோட்டார் வாகனத் தொழில்நுட்ப நிபுணர் என்ற முறையில் உங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள். இது ஒரு முற்றிலும் இலவசமான பயிற்சிநெறி ஆகும்.

### பயிற்சிநெறிக் காலம்

- இரண்டு ஆண்டுகள்.

### பிரவேசத் தகுதிகள்

- வயது: 17 முதல் 24 வயது.
- க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் B சித்திகளுடன் குறைந்தபட்சம் 6 பாடங்களில் சித்தி.

### முதலீடு

நீங்கள் மேற்குறிப்பிட்ட தகுதிகளையும் ஆர்வத்தையும் கொண்டிருந்தால், உங்கள் சுயவிபரக் கோவையை **DATS@dimolanka.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். **நீங்கள் விரும்புவது வெலிவேரிய பயிற்சி நிலையமா அல்லது யாழ்ப்பாணம் பயிற்சி நிலையமா என்பதை** விடயக் கட்டத்தில் குறிப்பிடுங்கள். அல்லது,

உங்கள் விண்ணப்பத்தை, "DATS ஆண்டுப் பயிற்சிநெறி" என்று தெளிவாக்க குறிப்பிட்டு, கடித **உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெலிவேரியா அல்லது யாழ்ப்பாணம் என்ற உங்கள் விருப்பத்தேர்வையும் குறிப்பிட்டு, பயிற்சி முகாமையாளர், டிமோ தொழில்நுட்பத் திறன்களுக்கான அக்கடமி, இல. 09, A9 வீதி, அரியாலை. யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்புங்கள்.**

**விண்ணப்ப முடிவு தினம்: 2020 மார்ச் 15**

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: கணேஷ் 077 9750 437**

DIMO
DIMO ACADEMY FOR TECHNICAL SKILLS (DATS)
No. 09, A9 Road, Ariyalai, Jaffna.
E-mail DATS@dimolanka.com  Web: www.dimolanka.com
www.facebook.com/careersDIMO

## LUXURY 2 & 3 BEDROOM APARTMENTS FOR DAY RENT IN WELLAWATTE



Air conditioned rooms,
Multi TV Channels,
Hot Water Facility , Free Wi-Fi ,
Car Parking , 24 Hour Security

CALL US
+94766602202

KURINCHI HOME
4A PEREIRA LANE
WELLAWATTE

## முச்சக்கர வண்டி பதிவுப் பத்திரத்திற்கு

சிறந்த தொகை
குறைந்த வட்டியுடன்
ஒரே நாளில் பெற்றுக்கொள்ளுங்கள்



OD
முறைப்படி
வட்டியைச் செலுத்தல்

இன்றே தொடர்பு கொள்ளவும்

யாழ்ப்பாணம் 0777 391 449 | வவுனியா 0769 127 751

**SINGER FINANCE**

Web: www.singerfinance.com | Facebook: SingerFinance

## பயணத்தின் போது இணையற்ற இணைப்பை அனுபவியுங்கள்.

TRC/M/SEA/19/01



உங்கள் 4G மொபைல் ரவுட்டரை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| மோபிடெல் 4G மொபைல் ரவுட்டர் | ரூ. 5,500 | Device சகிதம் 6 மாதங்களுக்கு 22GB இலவசம் |
| மோபிடெல் 4G Wi-Fi ரவுட்டர் | ரூ. 4,990 | |

டேட்டா அட்-ஒன் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| ரூ. 499 | ரூ. 699 | ரூ. 999 |
| 10.5GB* | 16.5GB* | 23.5GB* |

30 நாட்களுக்கு செல்லுபடியாகும்




மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: 1717  நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF HIGHER EDUCATION, TECHNOLOGY & INNOVATIONS

VACANCIES

TVEC Reg No: P25/0071
Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna

1. LECTURER (PROBATIONARY) IN FOOD TECHNOLOGY
2. DEMONSTRATORS IN PRODUCTION TECHNOLOGY, MECHATRONICS TECHNOLOGY & BUILDING SERVICES TECHNOLOGY

Closing Date: 23.02.2020

FOR MORE DETAILS AND APPLICATION FORM, PLEASE VISIT www.ucj.ac.lk or call 021 221 7792

Assistant Registrar
University College of Jaffna

09.02.2020



வீடு வாடகைக்குண்டு

யாழ். மணியம் தோட்டம் கொழும்புத்துறை பகுதியில் அறையுடன் கூடிய குளியலறை மற்றும் சமையலறை வசதிகளுடன் அமைந்துள்ள வீடொன்று வாடகைக்கு உண்டு.

077 720 6714



வீடு வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் பழம் வீதியில் 3 அறைகள் கொண்ட தனி வீடு வாடகைக்குண்டு. தரகர் தேவையில்லை. தேவையானவர் மட்டும் தொடர்புகொள்ளவும்.

072 692 1877



வேலையாள் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு ( SamSung Showroom) வெளிக்கள உத்தியோகத்தர் தேவை.

021 492 7086, 077 800 7447



காணி விற்பனைக்கு

திருநெல்வேலி தெற்கு. சிவன்கோயில் வீதியில் உபதபாற் கந்தோருக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் நாலுபரப்புக் காணி (4) பன்னிரெண்டு அடிப்பாதையுடன் விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

077 674 8302, 076127 7776



தேவை

முதலீட்டுக்கான சந்தர்ப்பம்
இலாபகரமான மருத்துவ பொருள்கள் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு முதலீட்டாளர்கள் அல்லது வியாபார பங்காளர் தேவை.
மேலதிக விவரம் பேசித்தீர்மானிக்கலாம்.

077 792 4466



பணிப்பெண் தேவை

நெல்லியடியில் வைத்தியக் குடும்பத்துக்குப் பணிப்பெண் தேவை.

077 875 9986


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது அகிலன் சனசமூக நிலையத்தின் செயலாளர்

**பேரின்பநாயகம் மயூரதன்**

அவர்கள் 20.01.2020 அன்று வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ அன்னலிங்கம் பிரேமசங்கர் அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டு தனது பணியை ஆரம்பித்துள்ளார். எமது அகிலன் சனசமூக நிலைய செயலாளர் சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமை எமக்குப் பெருமையையும் கௌரவத்தையும் கொடுக்கின்றது. அவரது சமூகப்பணி மற்றும் மக்கள் பணி தொடர மனமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**அகிலன் சனசமூக நிலையம்,**
**இராமலிங்கம் வீதி,**
**உடுவில், சுன்னாகம்.**

# வாழ்த்து



ஆசார்ய அபிஷேகம் காணும்
எங்கள் அன்புத் தம்பி
**பிரம்மஸ்ரீ**
**சோம.கேதீஸ்வரசர்மா**
அவர்கள் குருத்துவப் பணியில் சிறந்து விளங்கி இமயமாய் உயர்வடைய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எங்களின் இதயங்கனிந்த நல்வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் வழங்கி மகிழ்கின்றோம்.

பிரம்மஸ்ரீ ஜெயராமசர்மா
ஸ்ரீமதி சாந்திசர்மா
மெல்பேண், அவுஸ்திரேலியா

## காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
## காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட ஆட்களது தற்காலிக பட்டியலினை உறுதிப்படுத்துதல்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது 2016ம் ஆண்டின் 14ம் இலக்க (தாபித்தலும் நிர்வகித்தலும் மற்றும் கடமைகளைப் பொறுப்பேற்றலும்) சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுடன் யுத்தம். அரசியல் அமைதிக்குலைவு அல்லது குடியியல் குழப்பங்கள் அல்லது வலிந்து காணாமற்போகச் செய்தலின் விளைவுகள் என்பவற்றுடன் தொடர்புடையதாக காணாமற்போன அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஆட்களின் நிலையினை தாபிப்பதற்கான விளக்கமான பணிப்பாணைகளையும் கொண்டுள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது சட்டத்தின் 10(1)(உ) பிரிவின் பிரகாரம் காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட நபர்களுடன் தொடர்புடைய தரவுகளை சேகரிப்பதற்கான கடமையை கொண்டுள்ளது. இன்று வரையில் இலங்கையானது காணாமற்போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலொன்றினைத் தயாரித்திருக்கவில்லை.

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அதற்கு கிடைத்துள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு தற்காலிக பட்டியலை ஒருங்கிணைக்கின்றது. இப்பட்டியலானது 1) 2018 பெப்ரவரியில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் தாபிக்கப்பட்டதிலிருந்து அதனால் நேரடியாக பெறப்பட்ட அனைத்து முறைப்பாடுகள். 2) தேசிய ஒருமைப்பாடு. நல்லிணக்கம். அரசகரும மொழிகள் மற்றும் இந்து சமய விவகார அமைச்சினால் மாவட்டச் செயலகங்களின் வாயிலாக பெறப்பட்டு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு அனுப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் 3) காணாமற்போன ஆட்கள் குறித்த அலுவலகத்தின் கோரிக்கையின் பேரில் யுத்த காலத்தில் காணாமற்போனவர்களாக முப்படைகளினால் வழங்கப்பட்ட தரவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

காணாமற்போன்தாக மற்றும் காணாமலாக்கப்பட்டதாக அறிக்கையிடப்பட்ட ஆட்களின் தற்காலிக பட்டியலானது உறுதிப்படுத்தும் செயன்முறைக்கு உள்ளாக்கப்படவுள்ளது. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது காணாமற்போனோர் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் குறித்த விரிவான பட்டியலொன்றினைத் தயாரிப்பதற்காக முன்னைய ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் உள்ளடங்கலாக ஏனைய மூலங்களிலிருந்தும் தரவுகளை சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளது.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டோரது குடும்பங்கள் தங்களது காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட அன்புக்குரியவர்கள் தொடர்பான விபரங்கள் இத்தற்காலிக பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதிசெய்து கொள்வதற்காக கிழமை நாட்களில் காலை 09 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையிலான காலப்பகுதியில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினை பின்வரும் 011-2056504. 011-2667108 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்வதற்கோ அல்லது எமது தலைமை அலுவலகத்திற்கு அல்லது பிராந்திய அலுவலகங்களிற்கு வருகை தரவோ வரவேற்கப்படுகின்றார்கள். காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்கள் குறித்த தரவுகள் பட்டியலில் இல்லாமலிருந்தாலோ அல்லது முறையாக இல்லாதிருந்தாலோ அத்தகைய விபரங்களை பதிவுசெய்து காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு உதவுமாறு குடும்ப உறுப்பினர்கள் பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். வேறு ஏதேனும் தகவல்கள் கிடைக்கப்பெறுமானால் அது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுதிப்படுத்தும் செயற்பாட்டிற்கு உதவக்கூடியதாக இருக்குமாகையால் 15 மார்ச் 2020 இற்கு முன்னதாக அத்தகைய தகவல்களை அலுவலகத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு பொதுமக்கள் தயவுடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றார்கள்.

**காணாமற்போன ஆட்கள் பற்றிய தலைமை அலுவலகம்**
32. சேர் மார்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை. கொழும்பு 07

**யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம்**
இல 124. ஆடியபாதம் வீதி.
யாழ்ப்பாணம்

**மாத்தறை பிராந்திய அலுவலகம்**
இல.59. தர்மாராம மாவத்தை. கோட்டை. மாத்தறை


**மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம்**
இல.124. மத்திய வீதி. மட்டக்களப்பு

**மன்னார் பிராந்திய அலுவலகம்**
இல.05. புகையிரத நிலைய வீதி. மன்னார்

தவிசாளர், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் 07 பெப்ரவரி 2020

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02 . 07 . 1934



உதிர்வு
09 . 02 . 2014

## அமரர் சிதம்பரம் வீரகத்திசண்முகம்

மண்ணுலகை விட்டுப் பிரிந்தாலும்
காலங்கள் பல கடந்து சென்றாலும்
உங்கள் பாசமுகம் மறையவில்லை அப்பா
விழி நீரும் வற்றவில்லை
கொண்ட கோலங்கள் நிலைமாறிப் போனாலும் அழியாது
உங்கள் ஞாபகங்கள்
என்றும் உங்கள் பாதமலர்களைப் பூஜித்து நிற்போம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்

"பிருந்தாவனம்"
காத்தார் சின்னக்குளம் வீதி,
வவுனியா
024 2221295

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்கள்



## திருமதி யோகலிங்கம் திலகவதி (நயினாதீவு)

நயினாதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகலிங்கம் திலகவதி 07.02.2020 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகலிங்கத்தின் (விவேகானந்தா அச்சகம்)அன்பு மனைவியும், தனஞ்செயன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சாந்தினி மற்றும் கிருபாலினி ஆகியோரின் அன்புத் தாயாரும், புனிதவதி (ஜேர்மனி), சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அஸ்வினி, சாம்பவி, சுஜீவன் (ஜேர்மனி), தேனுஷா (யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் (ஆசிரியர்), புனிதவதி (ஆசிரியை), மகாதேவன், மகேஸ்வரன், துளசிவேணி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், விஜயரெத்தினம், பாலசுப்பிரமணியம், தருமலிங்கம் மற்றும் முத்துலெட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர் களான இராமநாதன்-சிவக்கொழுந்து, லெட்சுமணன்- தங்கரெத்தினம் தம்பதிகளின் சம்மந்தியும் ஆவர்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


No.70, ஓட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(CS/31149) (11,17)
021 435 3791

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
24 . 09 . 1948



இறைவன் அடியில்
11 . 01 . 2020

கடந்த 11.01.2020 அன்று இறைபதம் அடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் உயர்திரு
## கனகரத்தினம் தவநாதன் JP
(நியூ கருணாநிதி ஸ்டோர்ஸ், கண்டி)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை 10.02.2020 ஆம் திகதி திங்கட்கிழமை கீரிமலையில் நடைபெறும். வீட்டுக்கிரியை 12.02.2020ஆம் திகதி புதன்கிழமையும் நினைவஞ்சலி 16.02.2020ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் எமது கண்டி இல்லத்தில் நடைபெறும். 16.02.2020ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எமது கண்டி இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலி நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதுடன் நினைவஞ்சலியைத் தொடர்ந்து 1 மணியள வில் எமது இல்லத்தில் (இல. 292, D.S. சேனநாயக்க வீதி, கண்டி) இடம்பெறும் மதியபோசன நிகழ் விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அமரர் கனகரத்தினம் தவநாதன் அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு எமது துயரில் பங்கெடுத்து தொலைபேசி, E-Mail, SMS, Facebook,whatsapp மூலமும் நேரிலும் ஆறுதல் கூறியும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டும், மலர் மாலை சாத்தியும் பொன்னாடை போர்த்தியும், மலர்வளையம் வைத்தும் தேவாரம் ஓதியும் பூதவுடல் சுமந்தும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், கண்டி மற்றும் கொழும்பு வர்த்தகர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கனகமணி (மனைவி - 081 2203800, 081 2225647),
காண்டீபன் (மகன்),
பார்த்திபன் (கண்ணா - மகன்) 0775599515),
தவலிங்கம் (தம்பி- 0772642320)



## திருமதி நாகம்மா நடராசா

நுணாவில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கணேசபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா நடராசா கடந்த (07.02.2020) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் அன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பையா நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தியாகராஜாவின் அன்பு சகோதரியும் ஜெனார்தனராஜன் (கனடா - ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், மக்கள்வங்கி), காலஞ்சென்ற ஜெனக்குமாரராஜன் (ஆசிரியர்), மற்றும் தேவஞானி, ஜெனானந்தராஜன், ஜெனபாலராஜன் (கனடா), காலஞ்சென்ற ஜெயந்தினி மற்றும் ஜெனராஜராஜன் (லண்டன்), ஆனந்தினி, காலஞ்சென்ற சாந்தினி, மற்றும் வசந்தினி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஞானாம்பிகை, அதிஸ்ட பூபதி, ஜெயராஜா, அமிர்தாம்பிகை, பூங் கோதை, சோதினி, கனகராஜா, கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தூரன், ஜனார்த்தனி, விமல்ராஜ், சஞ்சயன், ராஜ்மோகன், துளசி, தயாளினி, திவ்யா, சிந்துயா, கோபி, பைரவி, கிரிசாந்தன், விஜீதா,லக்ஷன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் ஸ்ரீ லக்ஷ்மி, ஸ்ரீ வர்ஷினி, தாமிரா, சிந்தியா, ஹர்சினி, கரணி, ரசிகா, தினோஷ், கனிஷா அதியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2020) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கில் வசிக்கும் அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு
கோண்டாவில்

தகவல்: குடும்பத்தினர்
077 633 7307

# மரண அறிவித்தல்

மலர்வு
24 . 07 . 1979



உதிர்வு
08 . 02 . 2020

## அன்னராசா செந்தூரன்
(அபிவிருத்தி உத்தியோகத்தர், உள்ளூராட்சி திணைக்களம் வடமாகாணம்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னராசா செந்தூரன் நேற்று (08.02.2020) சனிக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்னராசா - பரமேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், கதிர்காமநாதன் (யாழ்.இணுவில் மத்திய கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியர்)' - அருந்தவராணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஆர்த்திகாவின் பாசமிகு கணவரும், லயகரி, யதூரன், லக்ஸ்மினன் (கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரனின் பாசமிகு சகோதரரும், கிஷானன், சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, சுப்பிரமணியம் மற்றும் முருகையா, கந்தசாமி, அண்ணாத்துரை ஆகியோரின் அன்பு மருமகனும், சின்னத்தங்கம், மல்லிகாதேவி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுவினி,
இணுவில் மேற்கு.

(CS31134)(11,17)

தகவல்:-
குடும்பத்தினர்.

மயூரன் - 077 517 4872, கதிர்காமநாதன் - 021 224 1592

## தேவை
யாழ்நகரில் இயங்கும் பிரபல
ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர்
(பெண்) (21-25)
வேலையாள் (ஆண்) (22.30)
**077 507 8272**

## தேவை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு நன்கு அனுபவமும், திறமையும் உள்ள சிவில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (T.O) தேவை.
தொடர்பு: 0775925371, 0763165730
E-mail- careers@decon.lk

## தங்க நகை மீட்பு
அடைவு வைத்து. மீட்க முடியாமல்
அறுதியாகவுள்ள தங்கநகைகளை மீட்டு
நல்ல விலைக்கு விற்று மேலதிக பணத்தை
நீங்கள் பெற்றுக் கொள்ள நாங்கள்
உதவுகிறோம். உங்களது பெயர்.
தொடர் இலக்கத்தை 0778661605
தொலைபேசிக்கு அனுப்பிவையுங்கள்.

## The Royal College of Jaffna
3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக்
கதைக்கப் பயில, முழுக் கட்டணம் 10,000/-
By:- விஸ்வப்பிரம்மஸ்ரீ
ந.விக்னேஸ்வரன் ஆச்சாரியார்
வகுப்புகள் - யாழ்ப்பாணம், சங்கானை.
**077 675 1649**

## கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு
யாழ் நகரிலிருந்து 3 Km தூரத்தில் பலாலி
வீதியில் கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு
உண்டு. அலுவலகம். கல்வி நிறுவனங்கள்
போன்றவற்றுக்கு உகந்தது.
**076 275 3016**

## வேலையாள்கள் தேவை
மலேசியா துறைமுகத்தில் பணிபுரிய
ஆண் வேலையாள்கள் தேவை.
(உடனடியாக)
மாதாந்தம் 110000/-
உணவு/ தங்குமிடம் வழங்கப்படும்.
நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.
வயது 18 - 40 வரை
**077 571 2577, 075 311 1792, 076 289 6258**

## தேவை
வாகன சுத்திகரிப்பு நிலையம்
(Service station) இல் வேலை செய்த முன்
அனுபவம் உள்ளவர்கள் தேவை. மானிப்பாய்
பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது
**077 932 8221**

## கார் விற்பனைக்கு உண்டு
MITSUBISHI (ஜப்பான்) கார்
விற்பனைக்கு உண்டு
விலை 400. 000. 00/= மட்டும்
பேசித்தீர்மானிக்கலாம். இன்று மட்டுமே
இவ் விசேட விலை
**077 549 0937, 077 500 0937**

## வாடகைக்கு
திருநெல்வேலி (Medical Faculty)
அருகாமையிலும் நல்லூர் (Nallur
Temple) ஆகிய இடங்களில் சகல வசதி
களையும் உடைய 4 அறைகளைக்
கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
**077 635 6638, 077 871 5430**

## பணிப்பெண் தேவை
நல்லூரடிப் பகுதியில் சிறிய குடும்பம்
ஒன்றுக்குப் பணிப்பெண் தேவை.
(தங்கி நின்று பணிபுரிவோர்
விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும்.
**076 879 7369**

## விற்பனைக்கு
பிறவுண் றோட் கல்வாரி சேர்ச்
அருகில் உள்ள லேனில் 5பரப்புக்
காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு:- 076 702 3565**

## பெயர் மாற்றம்
**கஜனி** ஆகிய நான் இன்று முதல்
எனது பெயரை **துஷ்யந்தினி**
என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல
ஆவணங்களிலும் துஸ்யந்தினி என்றே
கையொப்பம் இடுவேன் என இலங்கை
சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக
உறுதிப்படுத்துகின்றேன்.
துஸ்யந்தினி

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 13.01.2020 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

அமரர்

### யோகேஸ்வரி இரகுபதிராஜா (கிளி)


அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 12.02.2020 புதன் கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. இந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்த நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

12, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 606 4297

குடும்பத்தினர்.
(CS.31106) (13.17)

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 03 . 1945



இறப்பு 06 . 02 . 2020

### கணபதிப்பிள்ளை கந்தராசா

எழுதுமட்டுவாளை பிறப்பிடமாகவும் வவுனியா வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தராசா 06.02.2020 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காங்காதரன் (ஆசிரியர், வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்), பூங்காவதினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்திமதி ( அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் வவுனியா). இராகவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மோகிசா, பார்கவி, வித்தகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, ரத்தினம், அரியமலர் மற்றும் பொன்னம்மா, சின்னம்மா, ராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 10மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

வைரவ புளியங்குளம்,
வவுனியா

தகவல்:-
மகன் க. காங்காதரன்

(AVA/659)(11.17) **077 111 2086**


## தேவை
எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு மேசன்.
கூலியாள். வெல்டர் (Welder ) மற்றும்
ஒப்பந்த அடிப்படையில் கட்டுமான வேலை
செய்யக்கூடிய உப ஒப்பந்தகாரர்
(Sub Contractor) தேவை.
**076 3165734, 077 361 4638**

## காணி/ வீடு தேவை
யாழ்.நகருக்கு அண்மையில் காணி /
வீட்டுடன். வசாவிளான். புன்னாலைக்-
கட்டுவன் இதர பகுதிகளில் செம்மண்
தோட்டக்காணியும். கிளிநொச்சி
மாவட்டத்தில் தென்னங்காணி.
வயற்காணியும் விலைக்குத் தேவை.
**077 217 4038**

## மணமகள் தேவை
யாழ் இந்து 1977 உத்திரட்டாதி
கி.பா 17 ¼, உயரம் 5'2" சொந்த
தொழில் செய்யும் மணமகனுக்கு
மணமகள் தேவை.
குறிப்பு: தரகர் தேவையில்லை.
நேரடித் தொடர்புக்கு: **076 449 6275**

## வீடு விற்பனைக்கு
ஸ்ரான்லி வீதி, இராசாவின்
தோட்டம் சந்திக்கு அருகில்
சகல வசதிகளும் கொண்ட
வீடு (1½ பரப்பும் 3 குளியும்)
விற்பனைக்கு.
**077 587 2734, 077 962 8689**

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் ஆறுமுகம்

கன்னாதிட்டி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் ஆறுமுகம் 07.02.2020 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தனலட்சுமியின் அன்புக் கணவரும். ஜெயராஜன், ரஜனி, திலகவதி ஆகியோரின் அன்புத் தந்தையும். தயாபரன். ஸ்ரீதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும். விஜயராஜ். லக்சாயன், சனார்த்தனன். ஜீவிதா ஆகியோரின் பேரனும். கந்தசாமி. தியாகராஜா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் 3ஆம் வட்டாரம் முள்ளியவளையிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
முள்ளியவளை.

தகவல்:-
குடும்பத்தினர்.

(CS/31124)(11.17) **077 476 6357**

## மரண அறிவித்தல்



### இராசரத்தினம் பாலகிருஷ்ணன்
('பாலா' சினிமா உரிமையாளர்)

சாவகச்சேரி வடக்கு. மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பாலகிருஷ்ணன் கடந்த (07.02.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், பாலகுமார், மஞ்சுளாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை. யா/ மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி), இராசேந்திரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், இந்திராதேவி, மகேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்), குமுதநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- சகோதரர்கள்
இ.பாலகுமார், இ.இராசேந்திரம்

(J/11505)(11.17) **077 691 3281**

## வீடு வாடகைக்கு
யாழ் இந்துக் கல்லூரிக்கும்
மனோகரா தியேட்டருக்கும்
இடையில் கே.கே.எஸ். வீதியில்
வீடு வாடகைக்கு உண்டு.
**077 605 7490**

## தேவை
எமது நிறுவனத்துக்கு கணினி
அனுபவம் உள்ள ஊழியர்கள் தேவை.
இருபாலாரும்
விண்ணப்பிக்கலாம்.
PST & SONS (Pvt)Ltd
No.191 A, Kachcheri Nallur Road,
Jaffna.
077 489 1865

## வேலையாள்கள் தேவை
யாழ்ப்பாணம் முதலாம் குறுக்கு
தெருவில் இயங்கிக் கொண்டிருக்கும்
சிறுவர்களுக்கான
பொருள்கள் விற்பனை செய்யும்
நிறுவனத்துக்கு வேலையாள்கள்
தேவை. (அருகில் வசிப்பவர்கள்
விரும்பத்தக்கது)
**021 221 3323**
**076 264 8766**

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
01
...
10
...
1931



ஆண்டவன் அடியில்
12
...
01
...
2020

கடந்த 12.01.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்த

### அமரர் முருகேசு சிவபாக்கியம் (இலட்சுமி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை **(10.02.2020)** திங்கட்கிழமை காலை **06.00** மணியளவில் பெரியதேவனத்தாய் அந்தியேட்டி மடத்திலும் அதனைத் தொடர்ந்து **11.00** மணியளவில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அவரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவரின் இறுதிச்சடங்கில் கலந்து அனுதாபத்தை தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்த அனைத்து உறவுகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

"பெரியதேவனத்தாய்"
புலோலி தெற்கு,
புலோலி.

குடும்பத்தினர்
021 226 2123


## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்ப்பாணம்,பெப்.9

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டு றவுச் சங்கத்தினுடைய ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று காலை 9 மணிக்கு இடம் பெறும். கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலில் அமை ந்து உள்ள சங்கத்தின் காரியாலயத்தில் சங்கத் தலைவர் செ. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும். இந்தக் கூட்டத்து க்கு அனைத்து அங்கத்தவர்களையும் சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ந)

## புதிர் எடுக்கும் நிகழ்வு



காரைநகர்,பெப்.9

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் புதிர் எடுக்கும் நிகழ்வு தைப்பூச திருநாளான நேற்று சனிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

ஈழத்துச் சிதம்பர பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ வீ.ஈஸ்வரக்குருக்கள் தலைமையில் புதிர் எடுத்தலும், நெல் அறுவடை ஆரம்ப நிகழ்வும் காரைநகர் நெல் வயலில் இடம்பெற்றது.

(ஐ-250)

## விழிப்புணர்வு கருத்தமர்வுகள்

பருத்தித்துறை,பெப்.9

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் கொரோனா தொடர்பான விழிப்பு ணர்வுக் கருத்தமர்வுகள் நடத்தப்பட்டு வருகின் றன.

அண்மைக் காலமாக. உலகை உலுக்கிவரும் கொரோனா தொடர்பாக மக்களிடையே காணப்படும் அச்சத்தைப் போக்கும்வகையில் முதல் கட்டமாக பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் கற்கோவளம் மெ.மி.த.



க.பாடசாலையில் அதிபர் தலைமையில் கருத்தமர்வு நடைபெற்றது.

கருத்தமர்வை பருத்தித்துறை பிரிவு 11 பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன். றொனா ல்ட் விளக்கப் படங்களுடன் தெளிவுபடுத்தினார்.

(ஐ-9)


## மரண அறிவித்தல்



### முத்துக்குமாரு சங்கரலிங்கம்

புங்குடுதீவு **6**ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு சங்கரலிங்கம் கடந்த **(06.02.2020)** வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் அன்னலெட்சுமி (லிங்கதேவி)யின் ஆருயிர்க் கணவரும் காலஞ்சென்றவர்களான சத்தியவாணி. விக்கினேஸ்வரன் மற்றும் சுதாகினி (சுவிஸ்). சாந்தினி (சுவிஸ்). றமணி (சுவிஸ்). கணேஸ்வரன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மராசா (சுவிஸ்). தயானந்தன் (சுவிஸ்). விஜயரூபன் (சுவிஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் காலஞ்சென்றர்களான தம்பித்துரை. ஆறுமுகம் சண்முகநாதன். சற்குணதேவி மற்றும் மார்க்கண்டு. கோபாலசிங்கம் (இலண்டன்). வரவதிராசன் (சுவிஸ்). சிவபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கண்ணம்மா. புஸ்பம் (பிரான்ஸ்). தையல்நாயகி (பிரான்ஸ்). செல்வநாயகம் (கனடா). நித்தியசொரூபி. ஜெயவாணி (இலண்டன்). கலையரசி (சுவிஸ்). புஸ்பராணி. யோகராசா (அமெரிக்கா) காலஞ்சென்றவர்களான சத்தியசீலன். சிவபாதம். கமலாதேவி. சரஸ்வதி மற்றும் கருணானந்தன் (பிரான்ஸ்). நித்திய லெட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் பராசக்தி (அமெரிக்கா). சரஸ்வதி (கனடா). புவனேஸ்வரி (இலங்கை). மிதிலாதேவி (பிரான்ஸ்). காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா (ஜேர்மனி). சிவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் சகலனும் கிசோனா. சந்தோஷ். சயானி. கெவின். கல்வின். நவீன். அஸ்வித் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(10.02.2020)** திங்கட்கிழமை காலை **10.00** மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளிற்காக கொழும்புத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**இல.24, விபுலானந்தர் வீதி,**
**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:-021 221 5943. 077 901 2097



## மரண அறிவித்தல்

பிறப்பு
30
.
10
.
1933



இறப்பு
08
.
02
.
2020

### வேலுப்பிள்ளை வாசேஸ்பதிராஜா

(வானொலி விற்பன்னரும் திருத்துனரும் உரிமையாளரும் - Jaffna Radio Electrical)

காரைநகரைப்பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வாசேஸ்பதிராஜா (வானொலி விற்பன்னரும் திருத்துனரும் உரிமையாளரும் **Jaffna Radio electrical** ) நேற்று (08.02.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற திவ்வியஞான செல்வரட்ணத்தின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம் இராசமணி தம்பதிகளின் அன்பு மருகமகனும் தனேஸ்வரி (ஆசிரியர் - ராசிக் ரீபர்ட் முஸ்லீம் மகளிர் கல்லூரி), கணேஸ்வரன் (உப பீடாதிபதி தர்கா நகர் தேசிய கல்வியற்கல்லூரி), யோகேஸ்வரி (யா/வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலயம்), லோகேஸ்வரன் (கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), ஜெகதீஸ்வரன், கமலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு தந்தையும் நேசகுமார், வளர்மதி, மகேந்திரன், சதாங்கினி (முகாமைத்துவ உதவியாளர் - கரைச்சி பிரதேசசபை), அபிராமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தருணன். தருண்யா, சபரீசன், தஷாயினி, ஸ்ரீஹரீஸ், ஆருக்ஷா, தருக்ஷன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**லோகேஸ்வரன் - 077 959 0065, கணேஸ்வரன் - 077 666 9987**

# மரண அறிவித்தல்கள்

அன்னை மடியில் 29 . 03 . 1944



ஆண்டவன் அடியில் 06 . 02 . 2020

## திருமதி தம்பிப்பிள்ளை மகேஸ்வரி

யாழ்.புங்குடுதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பெருமாள் கோயிலடி, யாழ்பாடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிப்பிள்ளை மகேஸ்வரி 06.02.2020 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (வர்த்தகர் சிறி முருகன் ஸ்ரோர், தெரணியகல) - பரமனாட்சி தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - காமாட்சி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - சர்வலோகலட்சுமி அவர்களின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா மரகதம் தம்பதிகளின் பெறாமகளும், காலஞ்சென்ற செல்லையா தம்பிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற அரசாங்க அச்சக உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், பத்மராஜா (சிவா - கனடா), தமிழ்விழி (சுவாகா - கனடா), பத்மரூபன் (காண்டீபன் -கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ் வரன் (விக்கினேஸ்வரா ஹாட் வெயார், கொழும்பு - 12, நியூ குவாலிற்றி பக்டறி - பேலியகொட) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகாதேவனின் உடன் பிறவாச் சகோதரியும், அரசபாலினி (கவிதா - கனடா), நகுலேந்திரன் (நகுலன் -கனடா), துஷ்யந்தி (துளசி - கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்றவர்க ளான நடராஜா, மகேஸ்வரி, ஐயாத்துரை, அன்னம்மா, மாணிக்கம், தையல்நாயகி (நோனா) மற்றும் ராஜசுலோசனா, விஜயராணி (ஓய்வுநிலை கணக்காளர் - தேசிய வீடமைப்பு அதிகாரசபை), பவானி (சோதி) ஆகியோரின் மைத்துனியும், அகரன், பிரவீன், அதினா, ஜர்ஷனா, ஹரிஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை இன்பம் மலர்ச்சாலையில் (70, மானிப்பாய் வீதி, ஆலடிச்சந்தி, ஓட்டுமடம்) நடைபெற்று பிற்பகல் ஒருமணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 31096) (11,17)

**தகவல்:- குடும்பத்தினர்.**

**077 476 5992, 0041 697 04189, 077 392 6839**

# 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 06.09.1990 — ஆண்டவன் பாதத்தில் 26.01.2013

## அமரர் செல்வி தனராஜா துளசிகா (துளசி)

(கலைப்பீட 2 ஆம் வருட மாணவி
யாழ். பல்கலைக்கழகம் - 2013)

திதி: பூரணை



தூங்காத விழிகள் தூங்கும் நிலையோ
தாங்காத மனதுகள் தாங்கும் நிலையோ
ஏங்காத உறவுகள் ஏங்கும் துயரமோ
தீங்காக வந்ததோ தேவியே இக்கதியோ
அழகு முகம் அம்மா அருகிப் போனதோ
பழகு செல்வம் கண்ணே பல்கலை
- மறந்தாயோ

நிலவு நின் தேவியே நீ ஏன் பிரிந்தாயோ
உலகு உயர் கொடியே ஓய்ந்து
- பம்பரமானோம்
அலை நடுவே அகப்பட்ட அருங்கப்பல்
- நாமாவோம்
மலை நடுவே காலிழந்த மான்போல
- தவிக்கின்றோம்
உலை நடுவே அகப்பட்டோம்
ஓடோடி வா மகளே!

என்று நினைவில்....

குடும்பத்தினர்
(தாய்,தந்தை, சகோதரர்கள்,
மைத்துனிமார்)
45/ A3, ஞானவைரவர் லேன்,
பலாலி வீதி, கோண்டாவில்.

(cs.31062)(13,17)



## நடராசா முருகமூர்த்தி

சமாதி கோயிலடி, குப்பிளான் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா முருகமூர்த்தி 07.02.2020 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சற்குணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுசிலாவின் அன்புக் கணவரும், மதினியா (லண்டன்), சுதர்சன் (மீசாலை), பிரசாந் (திருநெல்வேலிச் சந்தை), சுபாகர் (முள்ளியவளை), சுந்தர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேசன் (லண்டன்), யாழினி, சுதாசினி, ரிலக்ஸ்சனா ஆகியோரின் மாமனாரும், சுசிர்தன், அயிர்தன், விஸ்ணுகா, ஷாலினி, ஷார்மி, ராகுல், திவ்யன், தூர்சிகா, மிதுன், விசாக்கா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் இராசலட்சுமி, சறோஜாதேவி, சண்முகநாதன், காலஞ்சென்ற செல்வராசா, விஜயலட்சுமி, கலாநிதி, திருச்செல்வம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.02.2020) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/31131) (11,17)

**தகவல்:- குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## நமசிவாயம் தில்லைவாசன்

(முன்னாள் ஊழியர், மானிப்பாய் பரிஷ் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு யாமாச்சந்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் தில்லைவாசன் 07.02.2020 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - மகாலக்ஷ்மி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் அன்னபூபதி தம்பதிகளின் மருமகனும், சிவகுமாரி யின் அன்புக் கணவரும், கைலாசவாசன், றஞ்சினிதேவி, சிறிகந்தவாசன் ஆகியோரின் சகோதர ரும், திவியா (சுகாதார அமைச்சு - வடக்குமாகாணம்), யனார்த்தனன் (ஜேர்மனி) மிதுஷா (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), கரிகரன், திவியறஞ்சித் (கல்வியற் கல்லூரி - அட்டாளைச் சேனை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வைகுந்தனின் (கனடா) மாமனாரும், சிவபாலன் (ஜேர்மனி), காலஞ்சென்ற இராமநாதன், சந்திரலேகா, காலஞ்சென்ற வினோதினி, வதனி, சாந்தி, கமலாதேவி, கோகிலவதனி, செல்வகுமார், தர்மகுலராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில் தெற்கு, யாமாச்சந்தி,
மானிப்பாய்**

(CS/30976)(11,17)

**தகவல்:- குடும்பத்தினர்.**

**077 883 6860**







## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

KELANI CABLES

### பொறியியற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி

## களனி சக்தி மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி

மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறியினை களனி கேபிள்ஸின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியற்பீடம் தமிழ் மொழியில் நடாத்ததிட்டமிட்டுள்ளது. **இக்கற்கை நெறியின் பிரதான நோக்கம் மின்னிணைப்பு செயல்முறை தொடர்பான தத்துவ விளக்கங்களை வழங்குவது.** எனவே மின்னியல் தொழில்நுட்ப துறையில் முன்னனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**காலம் : ஒருவருடம் (பகுதிநேரம்: மாதத்தின் முதலாவது சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)**

**தெரிவு : நேர்முகப்பரீட்சை மூலம்**

**இடம் : பொறியியற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி**

மேற்படி கற்கைநெறியினை பயில்வதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 23-02-2020 வரைபீடாதிபதி, பொறியியல் பீடத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும். பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக்கோவையினை கீழுள்ள முகவரிக்கு விண்ணப்ப முடிவுதிகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும் அல்லது நேரில் ஒப்படைக்க முடியும் (சுயவிபரக்கோவையில் மின்னிணைப்பு துறையில் தொழில் செய்த சேவைக்காலம், சேவைவிபரம் என்பன தெளிவாகக்குறிப்பிடப்பட வேண்டும்).

ஒருங்கிணைப்பாளர்,
“மின்னிணைப்புதகைமைச்சான்றிதழ் கற்கைநெறி”
பொறியியற்பீடம்,
அறிவியல்நகர்,
கிளிநொச்சி

கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் “மின்னிணைப்பு தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி”எனக்குறிப்பிடுதல் வேண்டும். தெளிவற்ற மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
பதிவாளர்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## பதவி வெற்றிடங்கள்

### எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமங்களானது பெற்றோர்களை இழந்த, கைவிடப்பட்ட சிறுவர்களுக்கு பூரண பராமரிப்பை 136 சர்வதேச நாடுகளில் 70 வருடங்களாக வும் இலங்கையில் 37 வருடங்களாகவும் வழங்கி வருகின்ற அரச, மத சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனத்தில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி வெற்றிடங்கள்**

1. FSP இணைப்பாளர் (Coordinator- Family Strengthening Programme) (35 வயதிற்கு உட்பட்டோர்) - யாழ்ப்பாணம்
2. முன் பள்ளி ஆசிரியை (Kindergarten Teacher) (30 வயதிற்கு உட்பட்ட பெண்) - யாழ்ப்பாணம்
3. சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர் (Care Taker) - பெண்

**தகைமைகள்**

**பதவி 1**

- சமூகப்பணி / சமூகவியல் (Diploma) கற்கை நெறிச்சான்றிதழினை அல்லது க.பொ.த உ/தர சித்தியுடன் கூடிய சமூகவியல்ப்பணியில் முன்னனுபவத்தினைக் கொண்டிருத்தல்.
- சமூகமொன்றில் வெளிக்கள வேலைகளில் ஆர்வமும் ஊக்கமும் உள்ள ஒருவர் சாரதி அனுமதிப் பத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- கணினி அறிவு மற்றும் மின்னஞ்சல் வாயிலாக அறிக்கையிடும் ஆற்றல் கொண்டவராக இருப்பதோடு, ஆங்கில மற்றும் சிங்கள மொழியறிவு கொண்டிருப்பது விரும்பத்தக்கது.

**பதவி 2**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்தது முன்பள்ளிக்கற்கை நெறியில் Diploma சான்றிதழ் ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது

**பதவி 3**

- குடும்ப பொறுப்புகளற்ற பிள்ளைகளுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 26 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்

இந்நிறுவனத்தின் சேவையாற்ற விரும்புவோர் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு விண்ணப்பங்களை (தொலைபேசி இலக்கத்துடன்) **20.02.2020** இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கோ அல்லது மின்னஞ்சல் மூலமோ கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியைக் கொண்டதுமாகும்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.

“SOS Children's Villages Sri Lanka is committed to promote and protect the children's rights and therefore, it is expected that every individual expected to join SOS Children's Villages Sri Lanka understand his/her responsibilities in protecting and keeping children always safe. The highest standards of selection, recruitment and verification procedures will be applied for all employment opportunities with our organization including thorough cross-checking of references.”

***தொடர்புகளுக்கு:***

**எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம்,**
**இல:219, நாயன்மார்கட்டு,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021-221 1101**
**077-373 3711**
**மின்னஞ்சல்**: jaffna@soscvsrilanka.org

(es.1736) (13.17)

## அங்கதான்...

புதுக் கட்சியின்ர நிர்வாகச் சிலவுக்கு ஒவ்வொரு மாசமும் எவ்வளவு முடியும் எண்டு நினைக்கிறியள்? கேட்டால் மயக்கம் வரும். 6 லட்சமாம். இன்னும் ஒரு எலக்சனில கூட நிக்கேலை. ஆக்களும் பெரிசா இல்லை. ஆனா சிலவு மட்டும் ஆறு லட்சம்.

அதுசரி. இப்பிடி ஆக்களேயில்லாத கட்சிக்கு ஆர் இப்பிடி அள்ளிக்குடுகிறதெண்ட கேள்வி வருகுதெல்லோ? வேற ஆர். எல்லாம் எங்கட புலம்பெயர் புண்ணியவான்கள் தான். அவையொண்டும் சும்மா குடுக்கேல. காசு தாறதெண்டா நாங்கள் சொல்லுறபடிதான் கட்சியை நடத்தோணும். எண்டு சொல்லித்தான் காசைக் கொட்டுகினம். அதை வாங்கிக் கொண்டுதான். அந்தக்கால நீதியரசரும் கட்சியை அவையின்ர தாளத்துக்கு ஏத்தபடி ஆடிப்பாடி நடத்துறார். சிம்பிளா சொல்லுறதெண்டால். ரிமோட் அங்க. பொம்மை இங்க! அவ்வளவுதான்.

## இந்தியாவின்...

நான்கு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா சென்றுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு புதுடில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை கைலாகு கொடுத்து வரவேற்றார். அதைத் தொடர்ந்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரை மஹிந்த சந்தித்துப் பேசினார். இதில் இருநாட்டு வெளியுறவுத்துறை விவகாரங்கள் குறித்து பேசப்பட்டன. அதன்பின் புதுடில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் இந்தியப் பிரதமர் மோடியை மஹிந்த சந்தித்து பேச்சு நடத்தினார். இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை இதன்போது மோடி எடுத்துரைத்தார்.

மஹிந்தவுடனான சந்திப்பு முடிவில், இரு நாட்டுத் தலைவர்களும் ஊடகங்களுக்கு கருத்துக்களைத் தெரிவித்தனர். இதன்போது இந்தியப் பிரதமர் மோடி கூறியதாவது,

இந்தியாவும் இலங்கையும் அண்டை நாடுகள் மட்டுமல்ல நெருங்கிய நட்பு நாடுகள். இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம், முதலீட்டை அதிகரிப்பது, இரு நாட்டின் கூட்டு பொருளாதாரத் திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசப்பட்டது. மக்கள் தொடர்பை அதிகரிக்கவும் சுற்றுலாவை ஊக்குவிக்கவும் நாங்கள் பேச்சு நடத்தினோம். தீவிரவாதம் இந்தப் பிராந்தியத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளது. இந்தத் தீவிரவா தத்தை ஒழிப்பது குறித்து நாம் பேச்சு நடத்தினோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் வகையில் அவர்களின் பிரச்சினை திறந்த மனதுடன் பேசப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினேன். ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி -சமத்துவம் -சமாதானம் வழங்கப்படவேண்டும் என்பது எமது நிலைப்பாடு. அதை இலங்கை அரசும் புரிந்துகொள்ளும் என்று நாம் நம்புகின்றோம். இரு நாட்டு மீனவர் பிரச்சினையில் மனிதநேய அடிப்படையில் செயற்படுவது என்று இந்தப் பேச்சின்போது இணக்கம் காணப்பட்டது - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த இலங்கைப் பிரதமர் மஹிந்த, அயல்நாடான இலங்கைக்கு இந்தியப் பிரதமர் வழங்கும் முக்கியத்துவத்துக்கு பாராட்டையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் -என்றார். (ஒ.5,22)

## தமிழ்...

பிரேமசந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்., சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, திருமதி அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்பன இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவுள்ளன.

புதிய கூட்டின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்னும் பெயர் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழு அதனை அடிப்படை நிலையில் ஏற்றுக் கொண்டுள்ளது .

இதேவேளை சில வாரங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு விக்னேஸ்வரன் சென்று திரும்பியிருந்தார். கடந்த வாரம் இந்தியாவுக்குச் சென்றிருந்த தமிழ்த் தேசியக் கட்சியின் சிவாஜிலிங்கம் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் சுரேஸ் பிரேமசந்திரன் இருவரும் நேற்றுக் காலையாழ்ப்பாணம்திரும்பியிருந்தனர். இவ்வாறானதொரு நிலையில் கூட்டணிக்கான ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்படுகின்றது. (அ.ஒ.5,105)

## சடலம்...

கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் யாழ்ப்பாணம் போதான மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ.5,26)

## 2ஆம் வருட...

சம்பந்தப்பட்ட மாணவன் மீதான ஒழுக்காற்று விசாரணைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாகவும் விசாரணைகளில் தலையீடுகளைத் தவிர்ப்பதற்காகவும் பல்கலைக்கழக எல்லைக்குள் நுழைவதற்கான இடைக்காலத் தடை விதிக்கப்படுவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக தகுதிவாய்ந்த அதிகாரியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஆரம்பகட்ட விசாரணைகளில் பாலியல் துன்புறுத்தல், பகிடிவதை தொடர்பில் தொடர்புபட்டமைக்கு நேரடியாக சம்பந்தம் இருப்பது தெரியவருகின்றது. 'பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பகிடிவதை தடுப்பு 946 சுற்றறிக்கைக்கு அமைவாக இடைக்காலத் தடை விதிக்கப்படுகின்றது' என்று மாணவனுக்கு வழங்கியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் முதுநிலை மாணவர்கள் சிலர் புதுமுக மாணவிகள் சிலர் மீது மோசமான பாலியல் பகிடிவதையில் ஈடுபட்டதாக பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு கிடைத்த தகவலையடுத்து ஒழுக்காற்று குழு விசாரணைகளை ஆரம்பித்தது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்துக்குச் சென்றிருந்த 10பேர் கொண்ட குழு அங்குள்ள அதிகாரிகள், மாணவர்கள் சிலரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பாதிக்கப்பட்டதாகச் சொல்லும் மாணவி, நாளை திங்கட் கிழமையே பல்கலைக்கழகத்துக்குள் பதிவுக்காக நுழைவார் என்பதால் அவரிடம் விசாரணைகளை இந்தக் குழு இன்னமும் முன்னெடுக்கவில்லை. இணையத்தளங்களில் வெளியான தொலைபேசி இலக்கங்களை மையப்படுத்தி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு அமைவாக இது தொடர்பான 'வட்ஸப் குறூப்பை' உருவாக்கி அதனை நிர்வகித்த மாணவன் இனங்காணப்பட்டார். அவரது குரல் மாதிரிகளும் ஆராயப்பட்டன. மாணவனும் குற்றச்சாட்டை ஏற்றுள்ளதாகத் தெரிவித்து விசாரணைக் குழு 12 பக்கங்களிலான அறிக்கையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரியிடம், நேற்றுக் காலை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் கையளித்துள்ளது. (ஒ,5)

## யாழ்ப்பாணம்...

டும். இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நாளை திங்கட் கிழமை சென்று நிலமைகளை ஆராயவுள்ளார். மறுநாள் செவ்வாய்க் கிழமை உயர் கல்வி அமைச்சர் பல்கலைக்கழகத்துக்கு வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் இடம்பெற்ற பகிடிவதை தொடர்பில் ஆராய்வார் என்றும், ஆளுநர் தலைமையிலான வெளியக விசாரணைக் குழுவை நியமிப்பார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை உயர் கல்வி அமைச்சர் பகிடிவதை தொடர்பில் தெரிவிக்கையில், இந்த வருடத்துக்குள் பல்கலைக் கழகங்களில் நடைபெறும் பகிடிவதைகளை முழுமையாக முடிவுக்கொண்டுவர எமது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அதன் பிரகாரம்தான் பல்கலைக் கழகங்களில் பகிடிவதைகளில் ஈடுபடும் மாணவர்களுக்கு 8 வருடங்களுக்குப் பரீட்சை எழுதத் தடை விதிக்கப்படும் என்று எமது அரசு அறிவித்திருந்தது. ஆனால், பல்கலைக் கழகங்களில் மோசமான பகிடிவதைகள் மற்றும் பாலியல் துன்புறுத்தல்களில் மாணவர்கள் ஈடுபடுகின்றார்கள் என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இப்படியான செயல்களில் ஈடுபடும் மாணவர்களின் பல்கலைக் கழக வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாகத் தக்க தண்டனை வழங்கப்படும் -என்றார். (ஒ.5,22)

## அடுத்த...

ளின் செயலர்களை இடமாற்றுவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் இந்த இடமாற்றங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களின் பிரதம செயலர்கள் கோத்தா அரசின் காலத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமையால் எஞ்சிய 7 மாகாணங்களின் பிரதம செயலர்களையும் இடமாற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் ஒப்புதல் கிடைத்ததும் இந்த இடமாற்றங்கள் உடனடியாக முன்னெடுக்கப் படும். (ஒ,5,105)

## காலையில்...

சசிதரன், மாலையில் மீண்டும் சென்று கூட்டணியில் ஐக்கியமாகிக் கொண்டுள்ளார்.

இந்தக் கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுவில் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணிக்கு 5 இடங்களும், சுரேஸ் பிரேமசந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு மூன்று இடங்களும், சிறிகாந்தா தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் அனந்தி சசிதரன் தலைமையிலான ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கு தலா ஓர் இடமும் வழங்கப்பட்டிருந்தன.

தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்பன தமக்கு இரண்டு இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தின. சிறிய கட்சிகளுக்கு சமவுரிமை வழங்க முடியாது என்று விக்னேஸ்வரன் அதனை மறுத்திருந்தார். இந்த நிலையில் சுரேஸ் பிரேமசந்திரன் தமது கட்சிக்குரிய ஓர் இடத்தை சிறிகாந்தாவின் தமிழ்த் தேசியக் கட்சிக்கு வழங்க இணக்கம் தெரிவித்ததையடுத்து அந்தக் கட்சி கூட்டணியில் இணைய ஒப்புக் கொண்டது.

திருமதி அனந்தி சசிதரனுக்கு, விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியே மேலதிக இடத்தை வழங்க வேண்டும் என்றபோதும் இறுதி வரையில் அது வழங்கப்படவில்லை. இருப்பினும் திருமதி அனந்தி சசிதரன் கூட்டணியில் இணைந்து கொள்ளச் சம்மதித்து நேற்று மாலையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார். (அ.ஒ.5,105)

## வவுனியா...

இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். அவர் கடந்த 7ஆம் திகதியே சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார். யாழ்ப்பாணம் போதான மருத்துவமனையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் எந்தவொரு நோயாளியும் தற்போது இல்லை.

(ஒ,5)

ராசி அதிர்ஷ்டம்
திகதி 08.02.2020 | வெற்றி வாரம் 2763 | வர்ணம் இளம் நீலம்
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 19 24 46 55
ஞாயிற்றுக். கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=
09.02.2020ம் திகதி ஞாயிற்றுக். கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 877
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.02.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,248,700/-
வெற்றி இலக்கங்கள் 05 38 40 56
ஆங்கில எழுத்து A
தொலைபேசி: 0112 333 546-47
தொ.பே: 0114 826 825

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3298 திகதி: 2020.02.08
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 04 20 25 38
ஆங்கில எழுத்து X
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 32,162,090/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## முல்லைத்தீவில்...

வீட்டிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் காயமடைந்த நபரின் தாய் மற்றும் சகோதரர் இருவரையும் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெடிக்காத வெடிபொருள்களை எடுத்து வந்து அவற்றிலிருந்து மருந்துகளைப் பிரித்தெடுத்து விற்பனை செய்து வருபவர் என்றும், அவ்வாறு எறிகணை ஒன்றை வெட்டிக் கொண்டிருக்கும்போதே அது நேற்று வெடித்துச் சிதறியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு கால், கைவிரலை இழந்தும் மற்றைய காலில் படுகாயமடைந்த நிலையிலும் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீட்டின் பின்பக்கத்திலிருந்து 60 மில்லி மீற்றர் எறிகணைகள் மூன்றும் மற்றும் ஒரு பெரிய எறிகணை ஒன்றும் வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

(ஓ.5,19)

### வேலையாள் தேவை

மில்வேலை, பொதி செய்தல் தெரிந்தவர்கள் தேவை. (ஆண், பெண்)
தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு:- 077 772 2215

### தேவை

பில்கிளார்க், பொதியிடல், உதவியாளர், சமையல் என்பவற்றிற்கு பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு:- பிருந்தா அரைக்கும் ஆலை
இல.179,சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
Tele- 077 174 6101

### வான் விற்பனைக்கு

HK - XXXX இலக்கம் கொண்ட சிறிய வான் (யப்பான்) விற்பனைக்கு உண்டு. 077 445 2187

### காணி விற்பனைக்கு

யாழ் மருத்துவ பீடத்துக்கு முன்பாக 1 1/2 பரப்புக் காணியும், இராஜவீதியில் 2பரப்பும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 076 697 2287

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கோயில் வீதியில் நவீன முறையில் தரமாக கட்டப்பட்ட புதிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 076 697 2287

### வாடகைக்கு

நல்லூர் அருகில் 3அறை A/C மற்றும் தளபாடங்களுடன் நாள் மற்றும் கிழமை வாடகைக்கு விடப்படும். 077 397 3166

### தவறிவிட்டது

07.02.2020 வெள்ளிக்கிழமை யாழ். சின்னக்கடைக்கு அருகாமையில் சாரதி அனுமதிப்பத்திரம், insurence Tax தவறவிடப்பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
077 281 7129, 077 629 5675

### கட்டட நிர்மாண வேலைகள்

சட்டறிங் வேலைகள் (Finishing Works fly wood), கம்பி கட்டல், கொங்கிறீட் வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
Mayureshan builders
076 085 1122

### தேவை

நெல், தேங்காய், கொப்பறா
279/9 ராஜா மில் ஒழுங்கை, கொக்குவில்
077 772 2215

### வேலையாள் தேவை

யாழ்.நகரில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.
077 397 2630

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.

01. உணவு பரிமாறுபவர்கள் (சப்பிளையர்ஸ்)
02. காசாளர்
03. பில் கிளார்க்
04. சுத்திகரிப்பாளர் களஞ்சியப்பொறுப்பாளர்
05. கடை வேலையுடன் சேர்த்து வாகனம் ஓட்டுபவர்
06. சமையலறை வேலையாள்கள்

தங்கிநிற்போர் விரும்பத்தக்கது. 3 வேளை உணவு, தங்குமிட வசதி என்பன இலவசமாக வழங்கப்படும். ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு - 077 791 7753, 077 608 4319

### கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General

**IELTS**

| | | |
|---|---|---|
| Mon to Friday | 9am to 1pm | Guarantee for 6.5 minimum band score |
| Mon to Friday | 5.15pm to 7.15pm | |
| Sat & Sunday | 2pm to 5pm | |

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லுவதற்கு IELTS A1 LIFE SKILLS

ஒரே தடவையில் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

நெதர்லாந்து மொழிப் பாடநெறி Dutch

BRITISH COLLEGE

More information 0777-596148

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel - 021- 4927113
103, Mannar Rd, Vavuniya. Tel - 024 - 4930041
A9 Road, Kilinochchi. Tel : 021-4927114

## பெறுகை அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்

### சபைநிதி - 2020

01. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** , (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் **10.02.2020** திகதியிலிருந்து **24.02.2020** ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்** எனும் இடத்திலிருந்து **10.02.2020** ம் திகதியிலிருந்து **24.02.2020** ம் திகதி வரை காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**1000/- (வரி நீங்கலாக)**செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தபட வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில்**, எனும் முகவரிக்கு **25.02.2020** ம் திகதி மாலை **14.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 60 (அறுபது) நாட்கள் (25.04.2020) வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லு படியாகும் காலம் |
| NP/14/41/(10)/Acc/Proc/Street Light-2020 | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (LED-100Watts, 50Watts) | 3.0 | 01 மாதம் | வடக்கு மாகாண சபை / மாவட்ட செயலகம் / நல்லூர் பிரதேச சபையில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 30,000.00 | 25.05.2020 |

தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை.
09.02.2020

## நீங்காத நினைவில் நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**சீனித்தம்பி கமலநாதன்**



அன்னை மடியில்
19.12

இறைவன் அடியில்
25.01.2016

எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் நான்கானாலும்
ஆறவில்லை எம் துயரம்
நீங்காது எம் நினைவில்
நிதமும் வாழ்கின்றீர்கள் அப்பா!

"எமது அன்புத் தெய்வத்திற்கு எமது இனிய அஞ்சலிகள்"

சாந்தி நிகேதன்
அல்வாய் தெற்கு, வதிரி

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மண்ணில்
01 . 07 . 1956



விண்ணில்
08 . 02 . 2020

### அப்பையா யோகநாதன்

(ஓய்வுநிலை யாழ் மாநகரசபை உத்தியோகத்தர்)

சென் செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அப்பையா யோகநாதன் நேற்று (08.02.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா பொன்னம்மா தம்பதிகளின் கனிஸ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திரமலரின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டைக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 882 4943 தகவல்: குடும்பத்தினர்

# இரணைமடுத் தண்ணீர் யாழ்ப்பாணத்துக்கு வராது

## அமைச்சர் சமல் திட்டத்தை நிராகரித்தார்

யாழ்ப்பாணம், பெப். 9

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்குத் தண்ணீரைக் கொண்டுவருவதில் பொறியியலாளர் விடாப்பிடியாக நின்றபோதும்அமைச்சர்உட்படஅனைவரும்அதைநிராகரித்தனர்என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர்த் திட்டம் தொடர்பில் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர்தலைமையில்நேற்று முன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் உட்பட மத்திய, மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், நீர்வழங்கல்வடிகாலமைப்புச் சபையினர் வடக்கு மாகாண பிரதமசெயலாளர், பொறியியலாளர்பாரதிதாசன்உள்ளிட்டபலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது குடிதண்ணீர்த் தேவைக்காக இரணைமடுத் தண்ணீரைக் கொண்டுவருவதன்மூலமாகதண்ணீர்பற்றாக் குறையை இலகுவாக நிவர்த்தி செய்யலாம். அதுவேஇருக்கும் ஒரே வழி என்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவிக்க ஏனையோர் விரும்பவில்லை. தமது பொருளாதார அபிவிருத்திக்குஅதுதடையாக அமையும்என்றும்கருதுகின்றனர். கோடைகாலம் அல்லது மழையே இல்லாத காலத்தில் வாழ்வா விவசாயமா என்ற நிலைமைஏற்படும்எனவும்கேள்வி எழுப்புகின்றனர். எனவே மாற்றுத் திட்டங்களே பொருத்தமானவை எனத்தெரிவித்தனர்.

இதேநேரம், கிளிநொச்சிமாவட்டத்தில் 7 ஆயிரம் அல்லது 8 ஆயிரம் ஏக்கர் சிறுபோகம் செய்த நிலையில் தற்போது தான் 22 ஆயிரம் ஏக்கர் சிறுபோகம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும்35ஆயிரம்ஏக்கர் நிலம் உள்ளது. விவசாயிகளைப்பாதிக்காது மாற்றுயோசனையே பொருத்தமானது எனத்தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து உடனடியாக தொண்டைமானாறு நீரேரித் திட்டத்தை முன்னெடுக்குமாறும்அதற்குஅடுத்தபடியாக பாலியாறுத் திட்டத்தை முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகளை முன்கொண்டு செல்லுமாறும் அமைச்சர் பணித்தார்.

இது தொடர்பில் எதிர்வரும் 18ஆம்திகதிஒருகலந்துரையாடலை ஏற்பாடுசெய்து இறுதி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் பணித்தார்.

(த-105)

**பணிநிலை வேண்டுகை**

**எமது நிறுவனத்துக்கு பின்வரும் பணிநிலை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. எழுதுவினைஞர்**

* கணக்கியல், கணினி, அலுவலக நிர்வாகம் என்பவற்றில் ஆற்றலும் அனுபவமும் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**02. கணினி தொழில்நுட்ப உத்தியோகத்தர்**

* கணினித் தொழில்நுட்பத்தில் நிபுணத்துவமும் அனுபவமும் வாய்ந்த ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.


**விண்ணப்ப முடிவுத் திகதி 15.02.2020**

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:**
**உதயன் - சஞ்சீவி**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 12 . 1930



இறப்பு 08 . 02 . 2020

## நாகமுத்து செல்வரத்தினம்

**(எழுதுவினைஞர், கட்டடத்திணைக்களம்)**

கல்வியங்காடு வேளாதோப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து செல்வரத்தினம் (எழுதுவினைஞர், கட்டடத்திணைக்களம்) நேற்று (08.02.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அகிலேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து சொர்ணம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான நடராசா சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராசநாயகத்தின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பாஸ்கரன் (பொறியியலாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம்) மற்றும் சாந்தினி, மனோகரன் (ஆசிரியர் யா/ அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை) வினோதினி (ஜேர்மனி), குமுதினி, சுபாகரன் (அவுஸ்திரேலியா), சுபோதினி (லண்டன்), ஆகியோரின் அன்புத்தந்தையாரும் கோதைநாயகி அம்பாள், ஜெகன் மோகனதாஸ் (படவரைஞர், நீர்ப்பாசனத்திணைக்களம்), மேனகா (ஆசிரியர் - யா/ வடஇந்துமகளிர் கல்லூரி), யோகநாதன் (ஜேர்மனி), நோவா (இ.போ.ச பருத்தித்துறை - பொறியியல் பகுதி), அனிதா (அவுஸ்திரேலியா) வரதபவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹம்சத்வனி, கிருத்திகா, நர்மதா, அரிகரசுதன், காலஞ்சென்ற கோவர்த்தனன் மற்றும் யஸ்மிகா, கிருஷ்ணி, ராகவி, சாருகி, தயாளன், அகிலன், சாள்ஸ், டிலக்ஷி, திஷானி, சரோன், அனுரா, அருணிகா, ஆதர்சன், சஞ்செய், சஞ்சீவ், லக்ஷ்மன் ஆகியோரின் அன்பு பேரனும் மானசா, ஆரோஹி, கபிஸ்வினி, கனிஸ்ரினி ஆகியோரின் அன்புப்பூட்டனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, தெய்வேந்திரன், மற்றும் கனகேஸ்வரி, மகாதேவி மங்களேஸ்வரி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற தேவறஞ்சிதமலர் மற்றும் தேவாயினி . உதயராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.02.2020) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 922 6186, 077 977 4689**

**தகவல்: குடும்பத்தினர்**

**JAFFNA DENTAL CLINIC**

**15 K.K.S Road Jaffna Dr.Purushothaman's**



உலகத்தரத்திற்கு நிகரான முறையில்
நிரந்தரப்பல் கட்டுதல்
தற்போது
யாழ்ப்பாணத்திலும்



**பல் நடுதல் (Implants - இம்பிளான்ஸ்)**

- பயனாளிகளின் தேவைக்கேற்ப குறுகிய காலத்தில் கைதேர்ந்த வைத்தியர்களால் செய்யப்படும்
- அனைத்து விதமான பற்சேவைகளும் திறம் வாய்ந்த வைத்திய நிபுணர்களால் செய்யப்படும்

**எங்களுடைய ஏனைய சேவைகள்**

பல்
ஆலோசனை
பல் அடைத்தல்
சுத்தம் செய்தல்
நிரந்தரக்கிளிப்
வெண்மை யாக்குதல் (Bleaches)
பிடுங்குதல்
Crown & bridge
பல் வேர் சிகிற்சை
நடுதல்

**45, K.K.S Road, Jaffna**

**075 975 9828, 075 975 9824**

# ஐபிஎல் போட்டியில் ஆர்ச்சர் ஆடுவார்

## நம்பிக்கை வெளியிட்டார் தலைமைப் பயிற்சியாளர்

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்காக ஐ.பி.எல். தொடரில் இங்கிலாந்து வீரர் ஜாப்ரா ஆர்ச்சர் விளையாடுவார் என்று ஆண்ட்ரூ மெக்டொனால்டு தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜாப்ரா ஆர்ச்சர் தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின்போது வலது முழங்கையில் காயமடைந்தார். இதனால் அவர் இறுதி 3 டெஸ்ட் போட்டியில் இருந்தும், ரி-20 தொடரில் இருந்தும் விலகியிருந்தார்.

இந்த நிலையில் அவர் இலங்கை தொடர், ஐ.பி.எல். தொடரில் விளையாடமாட்டார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தது.

ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி அவரை ஏலம் எடுத்துள்ளது. அவர் இல்லாதது அந்த அணிக்கு மிகப்பெரிய இழப்பாகும் என்று கருதப்பட்டது.

இந்த நிலையில் ஜாப்ரா ஆர்ச்சருக்கான மாற்று வீரரை உடனடியாக தேட வேண்டியதில்லை. அவர் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்பார் என்ற நம்பிக்கை உள்ளது என்று ராஜஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளர் ஆண்ட்ரூ மெக்டொனால்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஜாப்ரா ஆர்ச்சர் ஐ.பி.எல். தொடரில் விளையாடமாட்டார் என்பதற்கான சரியான காரணத்தை இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. ஆனால், அவர் குணமடையலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. அடுத்த ஒன்றிரண்டு நாட்களுக்குள் அவரது காயம் குறித்த முழு விவரத்தையும் பெறுவோம். அதன்பின் முடிவு செய்வோம்.

அவர் ஐ.பி.எல். தொடரில் விளையாட விரும்புவார் என்பதை என்னால் உறுதியாக கூற இயலும். தற்போது காயம் குறித்த செய்தி மோசமானதாக இருக்கலாம். ஆனால், தற்போதைய நேரம் வரை அவரை மாற்றுவதற்கான எந்த துரித நடவடிக்கையையும் எடுக்க மாட்டோம்- என்றார்.

**வாடகைக்குண்டு** நல்லூர் சங்கிலியன் வீதியில்
2 அறைகளுடன் கூடிய **Attach Bath Room** , வாகனத் தரிப்பிட வசதியுள்ள வீடு வாடகைக்கு உண்டு. (IN/12523)(11,17)
**076 699 4694**

**தனி /குழு வகுப்புக்கள் ஆரம்பம்**
A/L, O/L , ICT Programming Languages, Web development, Java, C++, Database தனி மற்றும் குழு வகுப்புக்கள் தேர்ச்சி பெற்ற ஆசிரியரினால் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு
**077 810 2522, 077 849 9321**

**மஜஸ்ரிக் விரைவுப் பொதிகள் சேவை**
5 kg / 10kg க்கு மேல் கிலோவுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது
5kg க்கு மேல் 1கிலோவுக்கான கட்டணம்
பிரான்ஸ்- ஜேர்மனி- டென்மார்க்- கொலண்ட்- பெல்ஜியம்- ரூ.750
இத்தாலி- சுவீடன்- ரூ.850 லண்டன் -ரூ.650 சுவிஸ்- ரூ.1000
கப்பல் ஊடாக பொதிகளை அனுப்பிடவும் தொடர்புகொள்ளவும்
டிஸ்ரிவி(DishTv), மின்சாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும்
யாழ்-கொழும்பு ஆசனப் பதிவுகளுக்கும், பொதிகளை அனுப்பிடவும்
வெளிநாடு, உள்நாடுகளுக்கான பொதிகளை விரைவாகவும் குறைந்த செலவிலும் அனுப்பிட பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 976,KKS வீதி யாழ்ப்பாணம் 070 3305500 | 72,பலாலி வீதி யாழ்ப்பாணம் 075 5522999 | பிரதான வீதி சங்கானை 075 3305500 | 355, A9 வீதி கிளிநொச்சி 075 5522999 | முல்லைத்தீவு கரையான்குளம் மன்னார் | சென்றல் வீதி கொழும்பு 12 070 3305500 |

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
**021 222 8093** 17, Kandy Road, Jaffna

Hik Vision HD 4 CHNL DVR
Hik Vision 2mp Camera
1TB Hard disk (Surveillance)
BNC Connector
Power Supply
Coaxial Cable (Full Copper)
Kelani TT Wire
**26800/=**

அனைத்து விதமான CCTV Camera பொருத்துதல் மற்றும் திருத்துதல் Computers and Phone Accessories விற்பனை மற்றும் திருத்துதல்.
**STA, CCTV Camera Security System**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
**077 392 7901, 021 221 5226**

**வேலை ஆள்கள் தேவை**
யாழ்நகரில் இயங்கி வரும் அரிசி ஆலை ஒன்றுக்கு நெல் அவியல் வேலைக்கு வேலை ஆள்கள் தேவை.
- வேலை நேரம் : பகல்/ இரவு
- சம்பளம் : ரூபா 2000

(cs.306621)(13,17)
**076 537 1166, 076 624 8073**

**வீடு வாடகைக்கு**
கொக்குவில் முதலி கோயில் 2 ஆம் ஒழுங்கையில் **Attach Room** உடன் கூடிய நல்லவீடு வாடகைக்குண்டு.
**077 049 5501, 077 085 7823**

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம்,
கொழும்புத்துறையில்
**3 அறைகளுடன் கூடிய புதிய வீடு** விற்பனைக்குண்டு.
**077 444 9119**

**IELTS CLASSES**
யாழ் நகரில் கொழும்பு பல்கலைக்கழகம். ஆசிரியரினால் A1 exam(வாழ்க்கைத்துணையுடன் இணைவதற்கான பரீட்சை) வெளிநாடு செல்வோருக்கான IELTS (Academic & General) English Grammar & Spoken English கற்பிக்கப்படுகின்றது. புதிய மாணவர்கள் உடன் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்
Unlimited Hours
Guranteed for 7.5 in IELTS Exam
Pass in A1 Exam
IELTS EXAM CENTRE
Please Contact :
**077 780 3970/ 078 521 1351**

**வீடு வாடகைக்கு**
ஆனைக்கோட்டை நாலுகால் மடத்தடி பொன்னையா லேனின் (Post Office Road) ஒரு புதிய வீட்டின் மேல் மாடி வீடு சகலவசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
**077 218 8840, 077 765 6918**

**பணியாளர்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட் ஒன்றுக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.
01. காசாளர் - பெண்
02. மேற்பார்வையாளர் - ஆண்
(அனுபவம் உள்ளவர்கள் தேவை)
(CS/31098)(11,17)
**077 477 3481, 021 492 7080**

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு விஷேட சலுகை
UK - 550/= Germany - 650/= France - 650/=
திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd.
No.321, K.K.S Road Jaffna. T.P 077 755 4528

**Spoken English, சிங்களம்**
**With Grammar**
அடிப்படை அலகிலிருந்து எழுத, வாசிக்க, பேச்சுப் பயிற்சியுடன்
- ஆங்கிலம் - 3 - 6 மாதம்
- சிங்களம் - 2 - 3 மாதம்

வேலைக்குச் செல்வோர், வெளிநாடு செல்ல உள்ளோருக்குப் பிரத்தியேக வகுப்பு.
சிறு குழுவாயின் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
- யாழ்.நகர்
- அச்சுவேலி.

(CS/30989)(11,17)
**lect by - SKB - மனோகரன் - 077 725 4627**

உங்கள் குடும்ப நண்பன்
**VAVUNIYA YAMAHA**
(ஜப்பான் நாட்டின் தலை சிறந்த தொழிநுட்பத்தின் ஸ்கூட்டர்கள்)



MT 15 Down Payment 98770/=
R15 Down Payment 95970/=
Ray Zr Down Payment 42270/=
- மிகவும் குறைந்த முற்பணத்துடன் இரண்டு வருட உத்தரவாதம் மற்றும் மூன்று இலவச சேர்விஸ்
- Test Drive வசதிகள்
- YAMAHA வின் சகல உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
- YAHAHA நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மெக்கானிக் (Meachnic)
- 10 நாட்களுக்குள் இலக்கத்தகடுகள் பெற்றுக்கொடுக்கப்படும்
- பழைய மோட்டார் சைக்கிள்களை கொடுத்து புதிய நவீன மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொள்ள வசதிகள்
- லீசிங் வசதிகளும் செய்து தரப்படும்

**EDEN MOTOR'S**
1st Cross Street.Vavuniya — 076 604 5205, 076 1061446
Kandy Road.Vavuniya — 077 8923441, 076 1121222

**அரச தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாக பெறக்கூடிய புதிய கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன**
* Pre School Teachers Training முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி (NVQ Level 4)
* Spoken English * Spoken Singhala & Grammar

முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி NVQ Level 4 கற்கை நெறியினூடாக பயன் பெறக் கூடியவர்கள்
* முன்பள்ளி ஆசிரியர்கள் * GCE (O / L) படித்து விட்டு GCE (A/L) தகைமை இல்லாத மாணவர்கள்.
* GCE (A/L) படித்து விட்டு தொழில் வாய்ப்பொன்றினை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள்.
* GCE (A/L) கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள்.

6 மாதகால கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற (TVEC) யின் National Vocational Qualifications (NVQ) Level 4 சான்றிதழ் வழங்கப்படும். அத்தோடு, இச்சான்றிதழ் GCE (A/L) இல்லாத மாணவர்களுக்கு GCE (A/L) தகைமைக்கு நிகரானதாகக் கருதப்படும்.
இச்சான்றிதழ் ஊடாக அரச முன்பள்ளி ஆசிரியருக்கான தொழில்வாய்ப்பினை நீங்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
அத்தோடு 3 மாதகால சிங்களம் மற்றும் ஆங்கில கற்கை நெறிகளும் ஆரம்பமாகின்றன இக் கற்கை நெறிகளை நீங்கள் கற்பதனூடாக அரச மற்றும் தனியார் தொழில் வாய்ப்பொன்றினை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
இக் கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றன. மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள். Pebbles Academy TVEC Reg No:- P18/0075

Pebbles academy
Do well in whatever you do.
Jaffna +9477 5697715/ +94 77 1779 170
Head Office +9475084 74 74/+94 6749 29 229
www.pebbles.academy / Email: info@pebbles.academy
Facebook page: Pebbles Academy
Address: Technical College Road, Akkaraipattu.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.02.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.